# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 21 வள்ளுவர் ஆண்டு 2036 கார்த்திகை 19 ஞாயிற்றுக்கிழமை (04.12.2005) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 08


# நேற்றும் படையினர் மீது கிரனேட் வீச்சுகள்! சூடு!!

## சம்பவ இடங்களில் மக்கள் தாக்கப்பட்டனர் பலருக்குக் காயம்! இதனால் பதற்றம், பீதி!

**சாவகச்சேரியில் ரிராக்டர் மீது சூடு! சிப்பாய் பலி!!**

**கச்சேரியடியில் பவுஸர் மீது வேட்டு!**

யாழ்ப்பாணம்,டிசெம்பர்4

**குடாநாட்டின் பல பகுதிகளிலும் இராணுவத்தினரை இலக்குவைத்து நேற்று இரண்டாவது நாளாகவும் கிரனேட் தாக்குதல்கள் நடத்தப் பட்டிருக்கின்றன. சில இடங்களில் வேட்டுக்களும் தீர்க்கப்பட்டிருக்கின்றன. யாழ். நகரப் பகுதியில் இராணுவ பவுஸர் வாகனம் ஒன்றின் மீதும் சாவகச்சேரியில் இராணுவ டிராக்டர் மீதும் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது. இந்தச் சம்பவங்களால் ஆத்திரமடைந்த படையினர் அந்தந்த இடங்களில் பொதுமக்களை மறித்துக் கண்டபடி தாக்கினர். இதனால் பெரும் பதற்றமும் பீதியுமான நிலைமை உருவாகியது. நேற்று முற்பகல்11 மணி முதல் இரவு 8 மணி வரையான ஒன்பது மணி நேரத்துக்குள் ஆறு தாக்குதல் சம்பவங்கள் இடம்பெற்றிருக்கின்றன. இவற்றில் படைத் தரப்பில் சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டார். ஆறு சிப்பாய்கள் காயமடைந்தனர். படையினரின் கண்மூடித்தன மான தாக்குதல்களில் காயமடைந்த பொதுமக்களில் மூவர் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டனர்.**

நீர்வேலிப் பகுதியில் புதன்கிழமை இரவு இளைஞர்கள் இருவர் ஆயுதபாணிகளால் சுட்டுப் படுகொலை செய்யப் பட்ட சம்பவத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்று முன்தினம் குடாநாடெங்கும் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது தெரிந்ததே. இந்தக் ஹர்த்தாலின்போது பரவலாக இடம் பெற்ற இராணுவத்தினருக்கு எதிரான வன்முறைச் சம்பவங் கள் நேற்று சனிக்கிழமையும் இரண்டாவது நாளாகத் தொடர்ந் தது.

கந்தர்மடம், கோண்டாவில், நெல்லியடி, யாழ்., கச்சேரியடி ஆகிய இடங்களில் நேற்றுப் படையினர் மீது தாக்குதல்கள் நடத்தப்பட்டிருக்கின்றன. இந்தச் சம்பவங்களில் படையி னரில் மூவரும் சிவிலியன் ஒருவரும் காயமடைந்திருக் கின்றனர். கந்தர்மடம்,நெல்லியடிப் பகுதிகளில் வீதிகளில் சென்ற பொதுமக்கள் படையினரால் தடுக்கப்பட்டு தாக்கப் பட்டிருக்கின்றனர். பலர் நீண்டநேரம் தடுத்துவைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டிருக்கின்றனர்.

இந்தச் சம்பவங்களால் பெரும் பதற்றமும் பீதியும் உரு வாகியது. வீதிகள் மக்கள் நடமாட்டமின்றி வெறிச்சோடின.

### ஆலடிச் சந்தியில் கிரனேட் வீச்சு! அங்கு பொதுமக்கள் நையப்புடைப்பு!

பலாலி பிரதான வீதியில் கந்தர்மடம் பகுதியில் - ஆல டிச் சந்தியில் - அமைந்திருக்கும் இராணுவ நிலை மீது நேற்று நண்பகல் 1.30 மணியளவில் கிரனேட் வீசப்பட்டது. படை யினர் வானத்தை நோக்கிச் சரமாரியாகச் சுட்டனர். இதனால் அப்பகுதியில் பெரும் களேபரம் ஏற்பட்டது. கலவரமடைந்த படையினர் அப்பகுதியில் காணப்பட்ட பொதுமக்களை கண் டபடி தாக்கத் தொடங்கினர். இராணுவ நிலையை அண்டி அமைந்திருந்த வர்த்தக நிலையங்களில் இருந்தோரும் தாக் குதலுக்கு உள்ளாகினர். அவர்களில் பலர் இராணுவத்தின ரால் பிடிக்கப்பட்டு இராணுவ நிலை அருகே நீண்ட நேரம் தடுத்துவைக்கப்பட்டனர்.

கிரனேட் வெடித்த சமயம் அப்பகுதியில் நின்றிருந்த நவ ரத்தினராசா கோபிராஜ்(வயது 29 - அளவெட்டி கிழக்கு) என்பவர் காலில் காயமடைந்தார். இவர் அப்பகுதியில் உள்ள கடை ஒன்றுக்குப் பொருள்களை எடுத்து வந்த வான் சாரதி என்று தெரிவிக்கப்பட்டது.

கிரனேட் வீச்சுச் சம்பவத்தை அடுத்து கந்தர்மடம், பர மேஸ்வரா சந்தி பகுதிகளில் உள்ள வர்த்தக நிலையங்கள் இழுத்து மூடப்பட்டன. வீதிகளில் சென்று கொண்டிருந் தோர் தலை தெறிக்க ஓடித்தப்பினர். உடனடியாகவே அந் தப் பிரதேசம் வெறிச்சோடியது.

ஆலடிச் சந்தியில் சம்பவத்தை அடுத்துப் படையின ரால் தடுத்துவைக்கப்பட்ட இளைஞர்கள் நால்வர் நேற்று மாலை வரை விடுவிக்கப்படவில்லை. இவர்களை விடு விக்குமாறு கோரி அப்பகுதிக்கு வந்த உறவினர்களை படையினர் விரட்டினர் என்று கூறப்படுகிறது.

அந்தப் பகுதிக்கு வருகை தந்த கண்காணிப்புக் குழுவி னரும் பொலீஸாரும் விசாரணைகளை நடத்தினர்.

### கோண்டாவிலிலும் சம்பவம்

கோண்டாவில் சந்திக்கு அருகே இராமகிருஷ்ண மகா வித்தியாலய வீதியில் நின்றிருந்த (20ஆம் பக்கம் பார்க்க)

**ஐ.தே.கட்சி அமைப்பாளர் சுடப்பட்டதன் எதிரொலியாக**

# மூதூரில் தமிழ் மக்கள் மீது தாக்குதல்! இருவர் வெட்டிக்கொலை! ஒருவர் காயம்!!

திருகோணமலை,டிசெ.4

மூதூரில் தோப்பூர் கிராமத்தைச் சேர்ந்த ஐ.தே.கட்சியின் அமைப் பாளர் நேற்று அவரது வீட்டில் வைத்து இனந்தெரியாதோரால் சுடப்பட்டார். இதனை அடுத்து அங்கு தமிழ் மக்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இத்தாக்குத லில் இருவர் உயிரிழந்தனர். ஒருவர் காயமடைந்தார்.

நேற்று நண்பகல் 12.35 மணி யளவில் தோப்பூரில் உள்ள ஐ.தே. கட்சி அமைப்பாளர் காஜா மொஹி தீன் என்பவரின் இல்லத்துக்குச் சென்ற ஆயுதபாணிகள் சிலர் அவர் மீது வேட்டுக்களைத் தீர்த்துவிட்டு இரா ணுவக் கட்டுப்பாடற்ற பகுதி ஊடா கத் தப்பி ஓடிவிட்டனர் என்று கூறப் படுகிறது.

படுகாயமடைந்த மொஹிதீன் திருகோணமலை வைத்தியசாலை யில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இராணுவ துணைப்படையில் பணியாற்றிய இவர் பின்னர் அதில் (20ஆம் பக்கம் பார்க்க)



மூதூரில் தாக்குதலுக்கு இலக்காகி காயமடைந்த தமிழர் ஒருவர் சிகிச்சைக் காக திருமலை ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டிருந்தபோது எடுக்கப்பட்ட படம்.

# ஐ.நா. தீர்மானம் மூலம் புலிகளை கண்டிக்கும் முயற்சியில் அரசு

பாரிஸ்,டிசெ.4

விடுதலைப் புலிகளை ஐக்கிய நாடுகள் சபையின் தீர்மானம் ஒன் றின் மூலம் கண்டிக்கும் முயற்சியில் ஸ்ரீலங்கா அரசு பிரான்ஸின் உதவி யை நாடியது.

பாரிஸில வெளியாகும் ' லபி காரோ' என்ற பிரெஞ்சு நாளிதழ் இத் தகவலை வெளியிட்டிருக்கிறது.

முன்னர் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கடந்த ஒக்ரோபர் மா தம் பிரெஞ்சு அதிபர் ஜக் ஷிராக் கைச் சந்தித்போது இது குறித்து அவரோடு பேசியிருந்தார் என்ற தகவலையும் அந்த நாளிதழ் வெளி யிட்டிருக்கிறது.

விடுதலைப் புலிகள் அமைப் பையும் பாரிஸில் இருந்து ஒளிப ரப்பாகும் ரி.ரி.என். தமிழ் தொலைக் (20ஆம் பக்கம் பார்க்க)

# போர்நிறுத்தத்தை வலுவுறச் செய்வதில் நோர்வேயுடன் இந்தியத் தரப்பு இணக்கம்!

## சொல்ஹெய்மை சந்தித்த பிறகு வெளியுறவுச் செயலர் தகவல்

டிதுடில்லி,டிசெ.4

இலங்கையில் போர் நிறுத்தத் தைத் தொடர்ந்து பேணி அதை வலு வுறச் செய்ய வேண்டும் என்பதில் இந்தியாவும் நோர்வேயும் ஒருமித்த கருத்தைக் கொண்டுள்ளன.

இந்திய வெளியுறவுச் செயலர் ஷியாம் சரண் இவ்வாறு தெரிவித் திருக்கின்றார்.

நோர்வேயின் சர்வதேச அபி விருத்தி அமைச்சர் எரிக்சொல் ஹெய்ம் வெள்ளிக்கிழமை புதுடில்லி யில் இந்திய வெளிவிவகார அமைச்சு அதிகாரிகளைச் சந்தித் துப் பேச்சு நடத்தினார். இதன் பின் னர் இந்திய வெளியுறவுச் செயலர் ஷியாம் சரண் செய்தியாளர்களி டம் பேசினார்.

இலங்கையில் போர் நிறுத்தத் தைப் பேணவேண்டும் என்பதை இந்தியா ஒப்புக் கொள்கிறது. வடக்கு-கிழக்கில் தமிழர் பகுதி களில் பொருளாதார தேவைகளை (20ஆம் பக்கம் பார்க்க)

# மன்னிப்புச் சபை அதிகாரி தமிழ்ச்செல்வனைச் சந்தித்தார்

கிளிநொச்சி,டிசெ.4


போர்நிறுத்த உடன்படிக்கையை அரசு முழுமையாக நடைமுறைப் படுத்தினால் மனித உரிமை மீறல் களை முடிவுக்குக் கொண்டுவர முடியும்.

கிளிநொச்சியில் தம்மைச் சந் தித்த மன்னிப்புச் சபையின் செய லாளர் நாயகம் ஐரெனி சுபைடா அம்மையாரிடம் இவ்வாறு தெரி வித்தார் அரசியல்துறைப் பொறுப் பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன்.


சர்வதேச மன்னிப்புச் சபையின் (20ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்




(படங்கள் : பிரபா)




கந்தர்மடம் ஆலடிப் பகுதி கிரனேட் வீச்சுச் சம்பவத்தின் பின் வெறிச்சோடிக் கிடப்பதையும் கண்காணிப்புக் குழு அதிகாரி படையினருடன் உரையாடுவதையும் படங்களில் காணலாம்.

## ஜி.சீ.ஈ. மாணவருக்குக்கான கல்விக் கருத்தரங்கு

மானிப்பாய் பரிஷ் லியோக் கழகம் இவ் வருடம் ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சைக்கு தோற்றவிருக்கின்ற மாணவர்களுக்கான கல்வி வழிகாட்டல் கருத்தரங்கு ஒன்றை தீவகத்தில் நடத்துகின்றது.

ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி, புங்குடுதீவு மகாவித்தியாலயம் ஆகியவற்றில் இக்கருத்தரங்கு நேற்று ஆரம்பமானது.

கணிதம் விஞ்ஞானம் ஆங்கிலம்,தமிழ் ஆகிய பாடங்களுக்கான கருத்தரங்கு இன்றும் நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டது.(த)

## நீர்வேலி, புத்தூர் பகுதிகளில் நேற்றும் ரயர் எரிப்பு: வீதித்தடை!

### 2ஆவது நாளாகவும் போக்குவரத்துத் தடைப்பட்டது

யாழ்ப்பாணம் - பருத்தித்துறை வீதியூடான போக்குவரத்து இரண்டாவது நாளாக நேற்றும் தடைப்பட்டது.

நீர்வேலிப் பகுதியில் அப்பாவி இளைஞர்கள் இருவர் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவத்தை அடுத்து நேற்றுமுன்தினம் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டபோது வீதிகள் தடைகள் ஏற்படுத்தப்பட்டு, ரயர்கள் போட்டு எரிக்கப்பட்டமை தெரிந்ததே.

இதன் காரணமாக அன்றைய தினம் போக்குவரத்துத் தடைப்பட்டது.

அதேபோல் நேற்றும் பருத்தித்துறை பிரதான வீதியில் நீர்வேலி புத்தூர்ப் பகுதியில் வீதித் தடைகள் அகற்றப்படாமல் ரயர்கள் எரிக்கப்பட்டன.

அரச தனியார் பஸ்கள் வேறு பாதைகள் ஊடாக போக்குவரத்தை மேற்கொண்டன.

(எ-7-15-17-410-72)

## புத்தொளி நினைவு தினம் இன்று அனுஷ்டிப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.4

அமரரான புத்தொளி ந.சிவபாதத்தின் ஓராண்டு நினைவஞ்சலிக் கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு ஆனைக்கோட்டை அ.மி.த.க பாடசாலையில் நடைபெறவுள்ளது.

க.சுப்பிரமணியம் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ந.இரவிராஜ், ஓய்வு பெற்ற மேலதிக அரச அதிபர் து.வைத்திலிங்கம், இலங்கை தமிழர் ஆசிரியர் சங்க சிரேஷ்ட துணைப் பொதுச் செயலாளர் த.பஞ்சலிங்கம், ஆனைக்கோட்டை ஜே/133 கிராம அலுவலர் வை.சந்திரராஜா, ஆனைக்கோட்டை அ.மி.த.க. பாடசாலை அதிபர் சி.நாகையா, மானிப்பாய் மகளிர் கல்லூரி அதிபர் சூ.ஜெயவீரசிங்கம், ஓய்வுபெற்ற உப அதிபர்களான கா.நித்தியானந்தம், க.கதிரேசு, ஆனைக்கோட்டை கிராம முன்னேற்றச் சங்கத் தலைவர் மா.தியாகராசா, வலி.தென்மேற்கு ச.ச. நிலையங்களின் சமாச செயலாளர் க.திருநாவுக்கரசு, மானிப்பாய் மத்திய மருந்தக மகப்பேற்றுமனை அபிவிருத்திச் சபைத் தலைவர் இ.மனோகரன், ஆனைக்கோட்டை திருவள்ளுவர் சேவாமன்ற சனசமூக நிலையத்தைச் சேர்ந்த பொன்.கனகரட்ணம் ஆகியோர் அஞ்சலி உரைகளை நிகழ்த்துவர்.

(3-204)

### 11 நீதியரசர்களுக்குரியதை விட அதிகமாக

## முன்னாள் ஜனாதிபதியான சந்திரிகா என்ற ஒருவருக்கு மட்டும் ரூ.3 கோடி ஒதுக்கீடு ஏன்?

### பிரதம நீதியரசர் நேற்றுமுன்தினம் நீதிமன்றத்தில் கேள்வி

கொழும்பு,டிசெ.4

அடுத்த ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்துக்குப் பதிலாக அரசு சமர்ப்பித்துள்ள உத்தேச மதிப்பீட்டுப் பிரேரணை தொடர்பான சட்டமூலத்தில் தனி ஒருவரான முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க என்ற ஒருவருக்கு மட்டும் 2 கோடி 95 லட்சம் ரூபா (சுமார் 3 கோடி ரூபா) ஒதுக்கீடு செய்தவர்கள் யார்? இதன் பின்னணி குறித்து ஆராய வேண்டும்.

- இவ்வாறு கருத்துத் தெரிவித்திருக்கின்றார் உயர்நீதிமன்றின் பிரதம நீதியரசர் சரத் என்.சில்வா.

முன்னைய ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தலைமையிலான அரசு சமர்ப்பித்திருந்த அடுத்த ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம், புதிய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நாடாளுமன்ற அமர்வை இடைநிறுத்தியதை அடுத்து கலாவதியாகிவிட்டது என்பது தெரிந்ததே.

எனவே, அந்த வரவு - செலவுத்திட்டத்துக்குப் பதிலாக உத்தேச மதிப்பீட்டுப் பிரேரணை ஒன்றை ஒரு சட்ட மூலமாக நாடாளுமன்றில் சமர்ப்பிக்க மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசு தீர்மானித்தது.

இந்தச் சட்ட மூலம் அவசரமான ஒன்றாக நிறைவேற்றப்பட வேண்டுமானால் அது உயர் நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட்டு, அந்தச் சட்ட மூலம் அரசமைப்புக்கு முரணானதா, முரணானதாயின் அது எவ்வாறு நிறைவேற்றப்பட வேண்டும் என்பவை தொடர்பாக உயர் நீதிமன்றின் கருத்து அறியப்பட வேண்டும் என்பது கட்டாயமாகும்.

இத்தேவையைப் பூர்த்தி செய்யும் விதத்தில் மேற்படி உத்தேச மதிப்பீட்டு பிரேரணைச் சட்டமூலத்தை அரசு உயர் நீதிமன்றுக்கு அனுப்பிவைத்திருக்கின்றது.

உத்தேச மதிப்பீட்டுப் பிரேரணையை நாட்டின் அத்தியாவசிய சட்டமூலம் இது என்பதால் இது குறித்து விரைந்து விசாரித்து முடிவை அறிவிக்குமாறு அமைச்சரவை சான்றளித்திருப்பதாகக் குறிப்பிட்டு அது உயர் நீதிமன்றுக்கு நேற்றுமுன்தினம் அனுப்பப்பட்டது.

அதனை உயர் நீதிமன்றம் நேற்று முன்தினமே விசாரணைக்கு எடுத்துக்கொண்டது.

பிரதம நீதியரசர் சரத் என். சில்வா, நீதியரசர்கள் ராஜா பெர்னாண்டோ, நிமல் காமினி அமரதுங்க ஆகியோரைக் கொண்ட ஆயத்தின் முன் இந்த விடயம் எடுத்துக்கொள்ளப்பட்டது.

சட்டமா அதிபர் சார்பில் சிரேஷ்ட அரச சட்டத்தரணி இந்திகா வெதமுனி டி சில்வா ஆஜராகி இச்சட்ட மூலம் அரசமைப்புக்கு முரணற்றது என்பதால் சாதாரண பெரும்பான்மையுடன் நாடாளுமன்றில் இதை அங்கீகரிப்பதன் வாயிலாக அது சட்டமாக முடியும் என்று உத்தரவிடுமாறு நீதிமன்றத்தைக் கோரினார்.

ஆராய்ந்த நீதியரசர்கள் அது குறித்து தமது குறிப்பையும் வெளிப்படுத்தினர்.

நாட்டில் நீதித்துறையின் உயர் பதவியான உயர்நீதிமன்ற நீதியரசர்கள் பதவியிலும் பிரதம நீதியரசர் பதவியிலுமாக மொத்தம 11 பேர் உள்ளனர். ஆனால், அவர்களுக்கான வருடாந்த மொத்த ஒதுக்கீடு ஆக 2 கோடி 90 லட்சம் ரூபாதான்.

முன்னாள் ஜனாதிபதி டி.பி. விஜே துங்கவுக்கான ஒதுக்கீடு ஆக 60 லட்சம் ரூபாதான்.

ஆனால், முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க என்ற ஒரு தனிநபருக்கு 2 கோடி 95 லட்சம் ரூபா வரை ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கின்றது.

இப்படி பாரபட்சமான முறையில் ஒதுக்கீடு செய்தவர்கள் யார், அதற்கு அனுமதித்தவர்கள் யார் என்பவையெல்லாம் கவனிக்கப்பட வேண்டும்.

இவ்வாறு வேற்றுமை காட்டுவது அதிருப்திக்குரியது. எல்லோரும் சமமாக நடத்தப்பட்டு, மதிக்கப்பட வேண்டும். - என்றார் பிரதம நீதியரசர்.

இவ்விடயத்தை விசாரித்த நீதியசகர்கள் தமது தீர்ப்பின் பிரதியை ஜனாதிபதிக்கும் சபாநாயகருக்கும் அறிவிப்பார்கள் எனத் தெரிவித்து விசாரணை முடித்தனர். (க)

## நாளை முதல் விவசாயிகளுக்கு 350 ரூபாவுக்கு உர விநியோகம்

நாளை முதல் நாடெங்கிலும் உள்ள விவசாயிகளுக்கு சகல விதமான உரவகைகளும் (50 கிலோ மூடை ) 350 ரூபாவுக்கு விநியோகிக்கப்படும்.

முதற்கட்டமாக நெற்பயிர்ச் செய்கையில் ஈடுபட்டிருப்பர்களுக்கும், இரண்டாவது கட்டமாக மரக்கறி, பழவகை மற்றும் உப உணவுப் பயிர் செய்கையாளர்களுக்கும் இது வழங்கப்படும் என விவசாய, சுற்றாடல், நீர்பாசன மற்றும் மகாவலி அபிவிருத்தி அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

இது தொடர்பான அமைச்சின் சுற்று நிருபங்கள் சகல மாகாண விவசாயப் பணிப்பாளர்கள், பிரதேச செயலாளர்கள், கூட்டுறவு விற்பனை நிலையங்கள், மாவட்ட மற்றும் பிரதேச விவசாய அபிவிருத்தி நிலையங்கள், விவசாய உத்தியோகத்தர்கள், முகவர் நிலையங்கள் ஆகிய பல்வேறு தரப்புகளுக்கும் நேற்று முன்தினம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன எனவும் அமைச்சர் தெரிவித்தார்.






## புற்றுநோயாளருக்கு கொடுப்பனவு

யாழ்ப்பாணம்,டிசெ.4

சிவபூமி அறக்கட்டளை நிதியம் புற்றுநோயால் பாதிக்கப்பட்டவர்களின் மருத்துவ தேவைகளுக்கென மேலும் ஒரு தொகைப் பண உதவிகளைச் செய்ய முன்வந்துள்ளது.

இந்த நிதி வழங்கும் நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணி முதல் நண்பகல் 12 மணிவரை சிவபூமி பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நிதி பெறவிரும்பும் புற்றுநோயால் பாதிக்கப்பட்டவர்கள் மருத்துவ அத்தாட்சிக் கடிதத்துடன் நேரில் சமூகமளித்துப் பெற்றுக் கொள்ளலாம் (ஐ-410)

## வெளிநாட்டில் ஆடம்பர பங்களாக்கள் ஜனாதிபதி குமாரதுங்க வாங்கினார்?

ஓய்வுபெற்றுள்ள ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க வெளிநாட்டில் வசிப்பதற்காக நவீன வசதியுடன் கூடிய அரச குடும்பங்களுக்குரியதை ஒத்த மூன்று அரண்மனைகளை வாங்கியுள்ளார்.

லண்டனில் ஓர் அரண்மனையும், பிரான்ஸில் இரண்டு மாளிகைகளையும் அவர் வாங்கியுள்ளார் என லண்டன் 'ஈவினிங் ஸ்டாண்டட்' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

லண்டனில் கல்வி பயின்று வரும் தனது மகனுக்கும், மகளுக்கும் பிரத்தியேகமாக இரு இல்லங்களை வாங்கும் ஆரம்ப நடவடிக்கையிலும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா ஈடுபட்டார் எனவும் அப்பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது.

இந்தச் செய்தியை முன்னாள் ஜனாதிபதியின் செயலில் அவரின் ஊடகச்செயலாளர் எனத் தெரிவிக்கும் பியசேன திஸநாயக்க மறுத்துள்ளார்.

அரசியலில் இருந்து ஓய்வு பெற்றுள்ள சந்திரிகா குமாரதுங்கவின் நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்தும் நோக்கிலேயே இந்த அரண்மனைக் கொள்வனவு விவகாரம் சோடிக்கப்பட்டுள்ளது என திஸநாயக்க தெரிவித்துள்ளார்.

எனினும், சந்திரிகா குமாரதுங்க லண்டனிலும், பிரான்ஸிலும் பங்களாக்களை வாங்கினார் என்பதற்கும் தம்மிடம் ஆதராம் உண்டு. அதன் அடிப்படையிலேயே தாம் இச்செய்தியை வெளியிட்டார்கள் என லண்டன் 'ஈவினிங் ஸ்டாண்டட்' பத்திரிகையின் ஆசிரியர் உறுதிப்படுத்தியுள்ளார்.

அதேநேரம் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவுக்கு மட்டும் அடுத்த ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்துக்குப் பதிலாக அரசு சமர்ப்பித்துள்ள உத்தேச மதிப்பீட்டுப் பிரேரணை தொடர்பான சட்ட மூலத்தில் சுமார் 3 கோடி ரூபா நிதி ஒதுக்கப்பட்டது தொடர்பில் ஆராயவேண்டும் என்று பிரதம நீதியரசர் நேற்றுமுன்தினம் நீதிமன்றில் கருத்துத் தெரிவித்ததும் குறிப்பிடத்தக்கது. (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி, தொலைநகல் — 222 2030, 222 2083, 222 3837.

# குடாநாட்டில் தேசிய உணர்வை பீறிட வைத்த பகிஷ்கரிப்பு நிகழ்வு

நீர்வேலியில் அப்பாவித் தமிழ் இளைஞர்கள் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்துக்கு எதிராக குடாநாட்டு மக்களின் ஒருமித்த எதிர்ப்பு நடவடிக்கை உணர்ச்சி கொப்பளிக்க வெளிப்பட்டிருக்கின்றது.

ஒன்றுபட்ட தேசமாக - தேசியமாக - எழுச்சி பெற்று நிற்கும் தமிழினம், கோபம் பீறிடும் தனது எதிர்ப்புணர்வைக் கூட ஆக்ரோஷத்தோடு ஒன்றுபட்டுத்தான் வெளிப்படுத்தியது. நேற்றுமுன்தினம் முழு யாழ். குடாநாட்டையுமே ஸ்தம்பிக்கச் செய்யும் விதத்தில் ஐக்கியப்பட்டு, தங்களின் உள்ளக் கிடக்கையை வெளிப்படுத்திய யாழ். மக்களின் சீற்றம், இந்த அப்பாவிகளின் படுகொலைக்குக் காரணமான சூத்திரதாரிகளின் செவிப்பறையில் ஆழமான ஒரு செய்தியை ஓங்கி ஒலித்து உணர்த்தியிருக்கும் என நம்பலாம்.

தேசிய பிரக்ஞையுடன் கூடிய குடாநாட்டு மக்களின் பரந்துபட்ட ஐக்கிய உணர்வெழுச்சி அண்மைக் காலத்தில் இரண்டு நிகழ்வுகள் ஊடாக வெளிப்படுத்தப்பட்டன.

ஒன்று - சிங்கள தேசத்தின் ஆட்சியாளரைத் தெரிவு செய்யும் தேர்தலில் தமிழர் தாயகத்துக்குச் சம்பந்தமேயில்லை என்பதை உலகுக்கு முரசறைந்து கூறுவது போல அத்தேர்தலை ஒட்டுமொத்தமாகப் பகிஷ்கரித்துத் தமது இனத்தின் ஐக்கிய நிலைப்பாட்டை நிரூபித்தமை.

மற்றது - தமது தாயக தேசத்தின் விடுதலைக்கு வித்தான மாவீரர்களின் நினைவாக மாவீரர் தின நிகழ்வுகளை உணர்வுடன் பேரெழுச்சியாக அனுஷ்டித்தமை.

இந்த நிகழ்வுகள், தமிழ்த் தேசியத்தின் ஊற்றுக் கண்ணாகவும் அதில் உறுதியாகவும் குடாநாட்டு மக்கள் மலைபோல் உள்ளனர் என்பதை உறுதிப்படுத்தின.

குடாநாட்டு மக்களின் இந்த ஐக்கியத் திரள்வு தமிழ்த் தேசியத்துக்கு எதிரான சக்திகளை கதிகலங்க வைத்து விட்டது.

வடக்கில் இறுகி, மேலும் மேலும் பலமடைந்து, வலுவடைந்து வரும் தமிழ்த் தேசிய உணர்வை அப்படியே வளரவிடுவது, சிங்களத் தேசியத்தின் மேலாண்மைப் போக்குக்குச் சாவுமணி அடித்துவிடும் என்ற உண்மையை உணர்ந்து கலவரமடைந்துள்ள ஆளும் வர்க்கம், தமிழ்த் தேசிய உணர்வைச் சிதறடித்து, சின்னாபின்னமாக்கி, மழுங்கடித்து, வலுவிழக்கவைக்கும் எண்ணத்தோடு பல சதிச்செயல்களை அரங்கேற்றி வருகின்றது.

தமிழர்களின் விடுதலைப் போராட்டத்துக்கு எதிராகச் செயற்படும் சக்திகள், தென் தமிழீழத்தில் தம்மை யாரென அடையாளம் காட்டிக்கொள்ளாமல், விடுதலை உணர்வுமிக்க தமிழர்களுக்கு எதிராக மறைமுக சமரை - இருள் யுத்தத்தை - நிழல் சண்டையை - கட்டவிழ்த்து விட்டிருக்கின்றன.

தென்தமிழீழத்தில் தமிழ்த் தேசிய சக்திகள் மத்தியில் இத்தகைய அரூப கரங்களினால் ஒரு யுத்தத்தைத் தொடுத்து, அங்கு குழப்பத்தை ஏற்படுத்துவதில் வெற்றிகண்ட இச்சக்திகள் அதே தந்திரத்தை வட தமிழீழத்திலும் கட்டவிழ்த்துவிடப் பார்க்கின்றன. அதன் மூலம் மக்களை பீதிக்குள் ஆழ்த்தி, குழப்பத்தை ஏற்படுத்தி, தாம் நினைத்ததைச் சாதிக்கலாம் என்று அவை திட்டமிடுகின்றன; பகல் கனவு காண்கின்றன.

அரூப கரங்களினால் இச்சக்திகள் புரியும் அத்துமீறல் நடவடிக்கைகளில் ஒன்றாகவே நீர்வேலிப் படுகொலைகளை நாம் கருதவேண்டும். இத்தகைய அத்துமீறல் தாக்குதல்கள், அட்டூழிய நடவடிக்கைகள் தமிழ்த் தேசத்தைக் குழப்பத்துக்குள்ளும் நெருக்கடிக்குள்ளும் ஆழ்த்தி பெரும் களேபரத்தை உண்டுபண்ணும் என்றும் தேசிய உணர்வுடைய எண்ணங்கள் மழுங்கடிக்கப்படும் என்றும் இந்தச் சக்திகள் எதிர்பார்த்தன.

ஆனால், நடந்ததோ - நடப்பதோ - வேறு. அச்சக்திகளுக்கு ஏமாற்றம் அழிக்கும் விதத்தில் இத்தகைய கோழைத்தனமான படுகொலைகள் கண்டு குடாநாட்டு மக்கள் துவளவில்லை. இத்தகைய இழப்புகள் தமக்கு மேலும் உறுதியையும் தேசியத்தின்பாலான தமது பற்றுதலையும் வலுவடையச் செய்யும் என்பதைச் சாத்வீக வழியில் பகிஷ்கரிப்பு நடவடிக்கையை உறுதியாகவும் கட்டுக்கோப்பாகவும் மேற்கொண்டு, நிரூபித்திருக்கின்றார்கள் குடாநாட்டு மக்கள்.

அமைதிக்காலத்தில் - சமாதான வேளையில் - உரிமைப் போராட்ட உந்தலும் விடுதலைப் போராட்ட உணர்வும், சுதந்திரத்திற்கான உறுத்தலும் தொய்ந்து, நைந்து போய்விடாமல் சமூகத்தில் போராட்ட உணர்வு 'சிக்'கெனப் பற்றிப் பிடித்து நிற்பதற்கு நீர்வேலிப் படுகொலைகள் போன்ற சம்பவங்கள் வழிசெய்கின்றன என்பதும் கவனிக்கத்தக்கது.

அந்த வகையில் இறப்பிலும் - இழப்பிலும் - கூட, உயிர்ப்பு உண்டு என்பது உறுதிசெய்யப்படுகின்றது.

குடாநாட்டில் தமிழ்த் தேசிய உணர்வை தட்டி எழுப்பும் வேள்வியில் ஆகுதியான உத்தமர்களாக நீர்வேலியில் தம் உயிர் ஈந்த இரு சகோதரர்களையும் நாம் கருதவேண்டும்.

# காய்ச்சலுக்கு சிகிச்சை பெறவருவோரின் இரத்தத்தைப் பரிசோதிக்குமாறு அறிவுறுத்து

வலி.தென்மேற்கு,டிசெ.4

யாழ். மாவட்டத்திலுள்ள அரச வைத்தியசாலைகளிலும் மற்றும் அரசினர் மத்திய மருந்தகங்களிலும் வெளிநோயாளர் பிரிவில் காய்ச்சல் நோய்க்கு மருந்து பெறச் செல்லும் சகல நோயாளர்களினதும் இரத்தம் பெறப்பட்டுப் பரிசோதனை செய்யப்படவேண்டும்.

- இவ்வாறு யாழ். சுகாதாரத் திணைக்களம் குடாநாட்டிலுள்ள சகல வைத்தியசாலைகளின் பொறுப்பதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளது.

இதனையடுத்து பிரதேசத்திலுள்ள அரச வைத்தியசாலைகளில் காய்ச்சல் நோயாளர்களின் இரத்தம் பெறப்பட்டு மலேரியா நோய் ஏற்பட்டுள்ளதா? என்பதைக் கண்டறிவதற்கான பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு வருவதை அவதானிக்க முடிகின்றது.

அண்மையில் ஏற்பட்ட பலத்த மழை மற்றும் வெள்ளத்தினால் நுளம்பின் பெருக்கம் அதிகரித்துள்ளது. இதனால், மலேரியா நோய் பரவும் சாத்தியம் உள்ளது என்றும் -

இதன் காரணமாக காய்ச்சல் நோயாளர்களின் இரத்தம் பெறப்பட்டுப் பரிசோதனை செய்யப்பட்டுவருவதாகவும் ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன.

கடந்த சில மாதங்களாக யாழ். மாவட்டத்தின் வலி. மேற்கு மற்றும் வலி. தென்மேற்குப் பிரதேசத்தில் மலேரியா நோயின் தாக்கம் மிகவும் குறைவடைந்துள்ளது. ஆனால், தற்போது மாரிகாலத்தில் மழை வெள்ளம் காரணமாக நுளம்புகள் மூலம் மலேரியா நோய் பரவும் சாத்தியம் அதிகம் உள்ளதால் மக்கள் இது தொடர்பாக முன்னெச்சரிக்கையுடன் இருக்க வேண்டியது அவசியம் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

யாழ். சுகாதாரத் திணைக்கள மலேரியாத்தடுப்பு இயக்க வைத்திய அதிகாரி மேற்கண்ட விவரங்களைத் தெரிவித்தார். (எ-135)

# மானியங்கள் ஆணைக்குழுவின் பட்டியலில் நுண்கலை மாணவர்களின் விவரங்களும்!

யாழ்ப்பாணம்,டிசெ.4

இம்முறை முதன்முறையாக யாழ். பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைக்கழகத்துக்கு அனுமதிபெறும் மாணவர்களின் அனுமதிப்பட்டியலும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் பட்டியலில் இடம்பெறவுள்ளதாக யாழ். பல்லைக்கழகப் பதிவாளர் தெரிவித்துள்ளார்.

இப்பட்டியல் இம்மாத இறுதிப் பகுதிக்குள் வெளிவரலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இதன் முன்னேற்பாடாக யாழ். பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைக் கழகத்திற்கு விண்ணப்பித்த மாணவர்களின் விண்ணப்பங்களில் இருந்து தகைமை அடிப்படையிலும் 'இசற் ஸ்கோர்' அடிப்படையிலும் விண்ணப்பங்கள் தரம்பிரிக்கப்பட்டு, விண்ணப்பதாரிகளுக்கான செய்முறை எழுத்துப் பரீட்சை (சித்திரமும் வடிவமைப்பும்), ஆற்றுகைப் பரீட்சை, நேர்முகப்பரீட்சை (இசை/நடனம்) ஆகியன நடைபெற ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இப்பரீட்சைகள் பின்வரும் ஒழுங்கில் நடைபெறவுள்ளன.

சித்திரமும் வடிவமைப்பும் பாடநெறிக்கு விண்ணப்பித்த மாணவர்களின் விண்ணப்பங்களில் இருந்து 73 தகுதி பெற்ற விண்ணப்பதாரிகள் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான செய்முறை எழுத்துப் பரீட்சை எதிர்வரும் 10ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 9 மணி தொடக்கம் திருநெல்வேலியில் அமைந்துள்ள யாழ். பல்லைக்கழக இராமநாதன் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பரீட்சையில் சித்தியடையும் விண்ணப்பதாரிகளில் தகைமை அடிப்படையில் 25 பேர் தெரிவுசெய்யப்படுவர்.

நடனப் பாடநெறிக்கு விண்ணப்பித்தவர்களில் தகுதிபெற்ற 98 பேருக்கான ஆற்றுகைப் பரீட்சை நாளை திங்கட்கிழமை முதல் 10 ஆம் திகதி சனிக்கிழமை வரை மருதனார் மடத்தில் அமைந்துள்ள இராமநாதன் நுண்கலைக் கழக நடனத்துறை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இவர்களில் 50 பேர் தெரிவுசெய்யப்படுவர்.

வாய்ப்பாட்டு, பண்ணிசை, மிருதங்கள், வயலின், வீணை ஆகிய பாடநெறிகளுக்கு விண்ணப்பித்த விண்ணப்பதாரிகளில் தகுதிபெற்ற106 பேருக்கான ஆற்றுகைப் பரீட்சைகள் நாளை திங்கட்கிழமை முதல் 9ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை மருதனார்மடம் இராமநாதன் நுண்கலைக்கழக இசைத் துறை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இவர்களில் 50 பேர் தெரிவுசெய்யப்படுவர்.

தெரிவுசெய்யப்படும் மாணவர்களின் பெயர் விவரங்கள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு இம் மாதம் 14ஆம் திகதி அனுப்பிவைக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

விண்ணப்பதாரிகளுக்குரிய அனுமதி அட்டைகள் தபாலில் சேர்க்கப்பட்டுள்ளன என்றும் -

பரீட்சைக்கு அழைக்கப்பட்டவர்களின் பெயர்ப்பட்டியலை யாழ். பல்கலைக்கழக பரீட்சைகள் அனுமதிகள் கிளையின் பெயர்ப்பலகைகளில் பார்வையிடலாம் எனவும் - யாழ். பல்கலைக்கழகப் பதிவாளர் தெரிவித்துள்ளார். (த-12)

# குருநகரில் சமூக மேம்பாட்டு முன் ஆய்வு மாநகர சுகாதாரப் பிரிவு நடத்துகிறது

யாழ்ப்பாணம்,டிசெ.4

யாழ்.மாநகர சபையின் சுகாதாரப் பிரிவினரால் சமூக சுகாதார மேம்பாட்டு முன்மாதிரி செயற்திட்டத்தின் கீழ் குருநகர் பகுதியில் இரண்டு கிராம அலுவலர் பிரிவுகள் தெரிவு செய்யப்பட்டு அங்கு ஆய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

ஜே/69-1,ஜே/69-2 ஆகிய கிராம சேவகர்கள் பிரிவுகளைச் சேர்ந்த பகுதிகளிலேயே இந்த ஆய்வுகள் நடத்தப்பட்டுவருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

மேற்படி இரண்டு கிராம சேவகர்கள் பிரிவுகளையும் மேலும் 5 பிரிவுகளாகப் பிரித்து பொதுச்சுகாதாரப் பரிசோதகர், குடும்பநல உத்தியோகத்தர்கள், உதவியாளர்கள், சுகாதாரப் பகுதி ஊழியர்கள் ஆகியோர் இந்த ஆய்வுப் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

இந்த செயற்திட்டத்தின் மூலம் பிரதேச மக்களின் சுகாதாரம், சுற்றுச்சூழல் சீர்கேடுகள்போன்றவை தொடர்பாக ஆய்வு செய்யப்பட்டு, ஆய்வினை மேற்கொண்டவர்களினால் பொதுமக்களுக்கு அறிவுரைகள் வழங்கப்படுகின்றன.

சுகாதாரச் சீர்கேட்டுடன் இணைக்கப்பட்ட வடிகால்கள், வாய்க்கால்கள் போன்றவையும் சுகாதாரப் பகுதி ஊழியர்களால் உடனுக்குடன் புனரமைப்புச் செய்யப்பட்டன. கடந்த ஒரு மாத காலப்பகுதியாக நடைபெற்றுவரும் இந்த ஆய்வு தற்போது நிறைவுபெறும் நிலையில் உள்ளதாக யாழ். மாநகரசபையின் சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எம்.மரியதாஸ் தெரிவித்தார். இந்த ஆய்வுபூர்த்தியடைந்ததும் ஆய்வு தொடர்பான முழுமையான அறிக்கையினை ஆய்வினை மேற்கொண்டவர்கள் சுகாதார வைத்திய அதிகாரியிடம் சமர்ப்பிக்கவேண்டும் என்றும் -

ஆய்வின்படி சுகாதாரம் தொடர்பான மக்களின் குறைபாடுகள் நீக்க உடன் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் - சுகாதார வைத்திய அதிகாரி மேலும் தெரிவித்தார். (எ-12-14)

# யாழ். போதனா வைத்தியசாலைக்கு முக்கிய உபகரணங்கள் கிடைத்தன

யாழ்ப்பாணம்,டிசெ.4

ஆழிப்பேரலை அனர்த்த நிவாரண உதவித்திட்டத்தின் கீழ் லண்டன் நிறுவனமான கிளின் கறியர்ஸ் லிமிட்டட்டினால் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு ஒரு தொகுதி உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

கடந்தவாரம் இரண்டு பார ஊர்திகளில் இந்த உபகரணங்கள் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு எடுத்து வரப்பட்டுள்ளன.

நவீன வசதிகளைக் கொண்ட நோயாளர் கட்டில்கள் - 100, வைத்தியர் இருக்கும் இடத்தில் நோயாளர்களை அழைத்துச் சென்று பார்வையிட வைப்பதற்குப் பயன்படும் அசையும் மேசைகள்-15, நடக்க முடியாதவர்கள் பிடித்து நடக்கும் தாங்கிகள்-4, நோயாளர்கள் பரிசோதனைக் கட்டில், சத்திரசிகிச்சைக் கட்டில், மண்ணெண்ணெய் அடுப்புவகை, மருந்து வகைகள், வைத்திய உபகரணங்கள் ஒரு தொகுதி என்பனவே இவ்வாறு யாழ். போதனை வைத்தியசாலைக்கு எடுத்து வரப்பட்டுள்ளன.

இந்தப் பொருள்கள் அனைத்தும் நோயாளர் விடுதிகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன என யாழ்.வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

மேற்படி உபகரணங்கள் எடுத்துவரப்பட்டதையடுத்து, நோயாளர் விடுதிகளில் இதுவரை நிலவிவந்த கட்டில் தட்டுப்பாடு ஓரளவு நீங்கும் என எதிர்பார்க்கப்படுவதாக கூறப்பட்டது.(எ-12-14-15)

# அமைச்சரவை அந்தஸ்தற்ற அமைச்சர்களும் அமைச்சரவைக் கூட்டத்துக்கு இனி வரலாம்

## இரண்டு வாரங்களுக்கு ஒரு முறை என அனுமதி

கொழும்பு, டிசெ.4

அமைச்சரவை அந்தஸ்தற்ற அமைச்சர்கள் இரண்டு வாரங்களுக்கு ஒரு தடவை, அமைச்சரவைக் கூட்டங்களில் கலந்துகொள்வதற்கான ஏற்பாடுகளைச் செய்யுமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அமைச்சரவைச் செயலாளரைப் பணித்துள்ளார். அமைச்சரவை அந்தஸ்தற்ற அமைச்சர்கள் பலர் முக்கிய அமைச்சுப் பொறுப்புகளை வகிக்கின்றனர். இவ்வாறான அமைச்சர்கள் முக்கியமான அமைச்சரவைப் பத்திரங்களை முன்வைப்பதாயின் மற்றுமொரு அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சரின் ஊடாகவே அவற்றை அமைச்சரவையில் சமர்ப்பிக்கவேண்டிய நிலையுள்ளது.

இது, சிரமமானது என்பதுடன் நடைமுறைச் சிக்கல்களையும் ஏற்படுத்துமென்பதால் அமைச்சரவை அந்தஸ்தற்ற அமைச்சர்கள் இரண்டு வாரங்களுக்கு ஒரு தடவை அமைச்சரவைக் கூட்டங்களில் கலந்துகொள்ள ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அனுமதியளித்துள்ளார். ஜனாதிபதியின் இந்தப் பணிப்புரையை அமைச்சரவை அந்தஸ்தற்ற அமைச்சர்கள் அனைவருக்கும் அமைச்சரவைச் செயலாளர் அறிவித்துள்ளார். (எ-க)

## நாளை

கார்த்திகை 20
திங்கட்கிழமை
05.12.2005
திதி: சதுர்த்தி
பிற்பகல் : 02.23 வரை
நட்சத்திரம் : உத்தராடம்
முன்னிரவு : 07.07 வரை
சதுர்த்திவிரதம்
சுபநேரம்: 12.16 - 01.46
ராகுகாலம்: 07.46 - 09.16
(யாவும் பழைய நேரப்படி)

## உதயவாக்கு

அஞ்ஞானத்தால் உன்னால்
இறைவனை அடைய முடியவில்லை
என்றால் அதற்காக இறைவனே
இல்லை என்று சொல்லிவிடாதே.
- இராமகிருஷ்ணர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சங்கமம் (ஒரு வரலாற்றின் காவியம்)

## நூல் வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களில் தெரிவு செய்யப்பட்ட (110) பாடசாலைகளின் வரலாற்றுத் தொகுப்பு நூல் வெளியீட்டுவிழா இன்று (04.12.2005) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் இடம்பெறவுள்ளது. ஆர்வமுள்ள அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். (43524)(30.16.46.42)

நூலின் பெறுமதி 500/=

- விழா அமைப்பாளர்கள் -
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி

---

யாழ் மண்ணில் புதுப்பொலிவுடன்

அறுசுவை உணவுகளுக்கு நாடவேண்டிய ஒரே இடம்

## SKY LINE RESTAURANT
## இஸ்கை லயின் போசனசாலை



உங்கள் தேவைகளை பூர்த்தி செய்யும் ஒரே இடம்

திருமணம், பிறந்தநாள் போன்ற வைபவங்களுக்கு தேவையான உணவுப்பண்டங்களை எங்களிடம் ஓடர் செய்வதன் மூலம் உங்களின் பணத்தை மிகுதிப்படுத்திக்கொள்ளலாம். ஓடர் செய்யப்படும் உணவுகள் உங்களின் வைபவ இடத்திற்கே கொண்டுவந்து தரப்படும்.

இல.198, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

தொ.பே.: 021 222 7539

---

## மெல்லிய உடம்பிற்கு

உங்கள் அல்லது உங்கள் குழந்தையின் உடல் மெலிவானதா? மெலிவானதா?

சந்தேகமின்றி உபயோகியுங்கள்!

எப்பட்டன் வெயிட் கெயின் அதிபோஷாக்கு பாலுணவு

வளர்ந்தவர்க்கும் பிள்ளைகளுக்கும்




யாழ் குடா நாட்டில் ஏக விற்பனையாளர்:
சிட்டி மெடிக்கல்ஸ்,
தொ.பேசி 2222198, தொ.நகல் - 2223880
மற்றும் எல்லா மருந்தகங்களிலும்

ஏக பிரதிநிதிகள்
Suri Trading Company (Pvt) Ltd
No.85/ 5, Sanjaya Mawatha, Rilaulla, Kandana.
Tel: 011 4-810251 Fax: 011 4-813110

---

## கண்ணீர் அஞ்சலி

எமது நீண்டகால உறுப்பினரும்
காப்பாளருமாகிய

### இராமசாமி உருத்திரா

*அவர்கள் (பிரபல சட்டத்தரணி)*
*01.12.2005 அன்று இறைபதம் அடைந்துள்ளார்.*
*அன்னாரின் மறைவால் துயருற்றிருக்கும் அவர் தம் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.*
*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

சதாவதானி கதிரவேலுப்பிள்ளை ஐக்கிய நாணய சிக்கன கடனுதவி
கூட்டுறவுச் சங்கமும் மேலைப்புலோலி,
தம்பசிட்டி, பருத்தித்துறை.

(சி/46612)(42-16-46-42)

---

## இதய அஞ்சலி



உடுவில் விஸ்வநாதக் குருக்கள்

### பரிபூரணாநந்தசர்மா J.P

(வி.பீ.சர்மா - உதயன் மூத்த செய்தியாளரும் பத்திரிகை எழுத்தாளரும்)

அவர்கள் 22-11-2005 ஆம் திகதி அதிகாலை திடீரென இறைபதப்பேறு எய்தியமையை அறிந்து ஆறாத்துயருற்றோம். சர்மா அவர்கள் பத்திரிகை வாயிலாக விவசாய சமூகத்திற்கு ஆற்றிய சேவை அளப்பரியது. *கமமும் புலமும்* ஊடாகவும் விசேட செய்திகள் மூலமும் விவசாயத்தில் புதிய தொழில் நுட்பங்களையும் இரசாயனமற்ற செய்முறைகளையும் உடனுக்குடன் தந்து ஆற்றிய சேவை மறக்க முடியாதது. அவருடைய சிரித்த முகமும் கனிவான மொழியும் ஆழ்ந்த அறிவுச் சிந்தனையும் இனி எப்போது காண்போம். அவரது ஆத்மா இறைவனடியில் சங்கமமாக எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். அவரது பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த கவலையைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அவரது ஆத்மா சாந்தி அடைவதாக.

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

உடுவில் கமநல சேவை நிலைய விவசாயிகள் சம்மேளனங்களும்,
உடுவில் கமநல சேவை நிலைய உத்தியோகத்தர்களும்.

(43537) (26-16-46-42)

---

## சைவ சமய பாட பரிசளிப்பு விழா

காரைநகர் தங்கோடை இளைஞர் கழகத்தினரால் காரைநகர்பிரதேச பாடசாலைகளுக்கு இடையே நடத்தப்பட்ட சைவசமய அறிவுப் பரீட்சையின் பரிசளிப்பு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு காரைநகர் தங்கோடை கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது. தங்கோடை இளைஞர் கழகத் தலைவர் சோ. சுரேஸ்குமார் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் பிரதம விருந்தினராக ஊர்காவற்றுறை மற்றும் காரைநகர் பகுதிகளுக்கான உதவி அரச அதிபர் க. ஸ்ரீமோகனனும் கௌரவ விருந்தினராக யாழ்.மாவட்ட தேசிய இளைஞர் சேவைகள் மன்ற உதவிப் பணிப்பாளர் தி. சிவதட்சனாமூர்த்தியும் - சிறப்பு விருந்தினர்களாக காரைநகர் பிரதேச பாடசாலைகளின் அதிபர்களும் காரைமேற்கு கிராம சேவையாளர் தி. சண்முகசுந்தரம் தொழில் அதிபர் க. சோமசேகரம் ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர். இவ்விழாவில் ஆசியுரையை மூதறிஞர் கலாநிதி சிவஸ்ரீ க. வைத்தீஸ்வரக் குருக்கள் நிகழ்த்துவார். (எ-73)

## ஈழத்துச் சிதம்பரத்துக்கு புதிய சித்திரத்தேர்

காரைநகர் ஈழத்துச் சிதம்பரத்தில் புதிய சித்திரத்தேர் அமைக்கும் பணி துரிதகதியில் இடம்பெற்று வருகின்றது.

ஈழத்தில் உள்ள ஆலயங்களில் உள்ள தேர்களை விட மிகப்பிரமாண்டமான 39 அடி உயரத்தில் சுமார் ஒரு கோடி இருபது இலட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்டு வரும் இந்தச் சித்திரத்தேரில் ஆலய வரலாறு, 108 தாண்டவங்கள், 64 மூர்த்தங்கள், புராண, இதிகாச வரலாறுகள் என்பன சிற்பம் மூலம் செதுக்கப்பட்டு வருகின்றன. இந்தச் சித்திரத் தேரினை அமைக்கும் பணியில் 50 இற்கு மேற்பட்ட ஈழத்து, இந்திய சிற்பாசாரிகள் ஈடுபட்டுள்ளனர்.

எதிர்வரும் ஜனவரி மாதம் 12 ஆம் திகதி ஈழத்துச் சிதம்பரத்தில் இடம்பெறவுள்ள மார்கழி திருவாதிரை உற்சவ பஞ்சரத பவனியில் நடேஸ்வரப் பெருமான் புதிய சித்திரதேரில் பவனிவரவுள்ளார்.

(202-73)

---

## வாகனம் விற்பனைக்கு

*நல்ல நிலையில் உள்ள*
*செல்மொடல் 52- வான்*
*விற்பனைக்குண்டு.*
*தொடர்புகளுக்கு:*
**0777328219.**

(சி/46614)(42-16-46)

---

## வேலை வாய்ப்பு

தொலைத்தொடர்பு நிலையத்தில் வேலை செய்த அனுபவம், கணக்கியல் அனுபவமுள்ளவர்கள் தேவை. 05.12.2005 திங்கட் கிழமை அன்று நேரில் வரவும்.

RAINBOW TRAVELS & TOURS
*Kasthuriyar Road,*
*Jaffna.*
*(ராஜா கிறீம் கவுஸிற்கு அருகில்)*

(சி/46615)(42-16-46)

---

**A/L 2006 Day தமிழ் - வழிகாட்டல்**
**ஈழத்திலக்கிய வரலாறு மீட்டலுடன்**

ஆரம்பம்:- 06.12.2005 செவ்.2.30-4.30.

*புத்தகங்கள்
*கையேடுகள்
*அட்டவணைகள்
*விடயக்குறிப்புகள்
} மூலமான சுலபமான கற்றல்.

40 மணித்தியாலம் 200/= மட்டுமே

2007 புதிய பிரிவும் ஆரம்பம்

நா.க.தமிழிந்திரன் PGDE
BEACON யாழ்ப்பாணம்.

(43543)
(42.16.46)

---

# "Music World" இன் இரண்டாம் ஆண்டு நிறைவையொட்டி

01-12-2005 முதல்
15-12-2005 வரை

மாபெரும் மலிவு விற்பனை

MasterCard VISA

முக்கிய குறிப்பு:-
இலங்கை வங்கி, மக்கள் வங்கி, செலான் வங்கி மற்றும் கொமர்சல் வங்கி ஆகியவற்றின் கடனட்டை மூலம் (Visa, Master) பொருள்களை கொள்வனவு செய்யும் வாடிக்கையாளருக்கு மேலும் 05% கழிவு வழங்கப்படும்.

- புதிய, பழைய வீடியோ சீடிக்கள்
- புதிய, பழைய, இடைக்கால ஓடியோ சீடிக்கள்
- அனைத்து வகையான MP-3 சீடிக்கள்
- தமிழ் மற்றும் ஆங்கில D.V.D கள்
- கர்நாடக சங்கீத சீடிக்கள்
- இந்து கிறீஸ்தவ பக்திப் பாடல் சீடிக்கள்
- Sof Ware, Games சீடிக்கள்

என்பனவற்றை கொள்வனவு செய்வோருக்கு 05% முதல் 25% வரை விலைக்கழிவு ...!

இவற்றைவிட இக்காலப்பகுதியில் ஒளி, ஒலிப்பதிவை மேற்கொள்வோருக்கும் விசேட விலைக்கழிவு வழங்கப்படும்.

**Music World**

பலாலி வீதி, தபால் பெட்டிச் சந்தி, திருநெல்வேலி. தொ.பே: 021 222 6554, 021 222 6542

E-mail:- itnkamesh@yahoo.com

---

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



அமரர்

### இராசையா வரதராசா

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 09-12-1940 | 02-11-2005 |

கடந்த 02.11.2005 அன்று அமரத்துவம் அடைந்த எமது குடும்பத் தலைவர் அமரர் இராசையா வரதராசா அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு, நேரில் வந்தும், தொலைபேசி மூலமாய் அனுதாபம் தெரிவித்தும் இறுதிச் சடங்கில் கலந்து அஞ்சலி செலுத்தி ஒத்துழைப்பு வழங்கிய உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் நினைவாக இன்று (04.12.2005), ஞாயிற்றுக் கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகை தருமாறு கேட்டுக்கொள்கிறோம்.

*426/4, கில்னர் லேன்,*
கே.கே.எஸ். வீதி,
*யாழ்ப்பாணம்.* (சி/43563)(32-16-46-42)

குடும்பத்தினர்.

---

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 1923 * 04 * 30 | 2004 * 12 * 14 |

அமரர் காத்திகேசு குமரேசு

திதி:04.12.2005

*பரிவுடனும் பாசத்துடனும் பண்புடனும்*
*எம்மை வளர்த்த அன்புத் தெய்வமே!*
*நீங்கள் எங்களை விட்டுப் பிரிந்து ஓராண்டு*
*நகர்ந்தாலும் உங்கள் நினைவலைகள்*
*என்றும் எங்கள் இதயத்தை விட்டகலாது*
*உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம்*
*வல்ல இறைவன் திருவருளை வேண்டுகின்றோம்.*

சிறுப்பிட்டி மேற்கு,
நீர்வேலி.

(43557)(42-16-46)

- குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரபாவின் வியூகத்தில் மஹிந்த சிக்குவாரா?



ஸ்ரீலங்காவின் புதிய தலைவர் பதவியேற்று இரண்டு வாரங்கள் கழிந்துவிட்டன. ஆனால், நாட்டின் தேசிய பிரச்சினையான இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான உருப்படியான நடவடிக்கைகள் எவையும் முன்னெடுக்கப்படவில்லை.

ஜனாதிபதியாக இருக்கலாம். அமைச்சர்களாக இருக்கலாம். எவருக்கும் எப்படி அடுத்த கட்ட நகர்வை மேற்கொள்ளப் போகின்றோம் என்ற முடிவை எடுக்கக் கூடிய நிலை தெற்கில் இல்லை.

தெற்கில் பேரினவாதத்தின் பேரில் - சிங்கள மேலாதிக்கத்தின் பேரில் - எழுந்த எழுச்சி மூலம் மஹிந்த ஜனாதிபதியாகிவிட்டார். தேர்தலில் அவர்கள் முன்வைத்த 'மஹிந்தவின் சிந்தனைகள்' என்ற தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெரிவிக்கப்பட்ட கொள்கைகளின் அடிப்படையில் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணக் கூடிய சாத்தியம் உண்டா? என்பது தற்சமயம் எழுந்துள்ள கேள்வியாகும்.

கடந்த 19ஆம் திகதி ஜனாதிபதியாகப் பதவியேற்ற போதும் சரி, 25ஆம் திகதி நாடாளுமன்றத்தில் கொள்கை விளக்கவுரை நிகழ்த்திய போதும் சரி, 28 ஆம் திகதி வெளிநாட்டு ராஜதந்திரிகளைச் சந்தித்தபோதும் சரி ஜனாதிபதி மஹிந்த தெரிவிக்கும் - முன்வைக்கும் - யோசனைகள் எல்லாம் நடைமுறைச் சாத்தியமானவையா என்ற கேள்வி புத்திஜீவிகள் மத்தியில் எழுந்துள்ளது.

## கூட்டுச் சேர்ந்த சக்திகளை உதறித்தள்ள முடியாத நிலை தெற்கில்

அண்மைய நாள்களாக ஜனாதிபதி வெளியிட்டு வரும் கருத்துகளைச் சற்று சிந்தித்துப் பார்த்தால் அவர்களின் கேள்வி நியாயமாகவே படும்.

* பேச்சுக்கு வர புலிகளுக்கு அழைப்பு; அதற்கு முன்னர் சர்வகட்சி மாநாடு.
* பல தரப்புக்கள் பங்கேற்கும் பேச்சு; புரிந்துணர்வு உடன்படிக்கை புதுப்பிப்பு.
* ஜனாதிபதி மஹிந்த கடும் நிலைப்பாடு.
* அமைதி முயற்சிகளுக்கான வாய்ப்பை நழுவ விடவே மாட்டாராம் ஜனாதிபதி.

- இப்படியான செய்திகள்தான் வந்துகொண்டிருக்கின்றன.

எதிர்காலத்தில் எட்டப் போகும் தீர்வுகள் கீழ்க் கண்ட அடிப்படையில்தான் அமையப் போகின்றன என்றும் செய்திகள் வெளியாகின்றன.

* பழைய சமாதான நடவடிக்கை கிடையாது; இனிப் புதிய ஆரம்பம்.
* யுத்த நிறுத்த உடன்பாடு திருத்தியமைக்கப்படும்.
* தாயகம் - சுயநிர்ணயம் என்பவையெல்லாம் இல்லை.
* இரு தரப்புக்குப் பதிலாகப் பல தரப்புப் பேச்சு.
* ஒற்றையாட்சிக் கட்டமைப்புக்குள் தீர்வு.
* இறுதித் தீர்வின் அங்கமாகவே இடைக்கால ஏற்பாடு.

தெற்கில் - சிங்களத் தலைமைகளிடம் இருந்து வரும் இப்படியான செய்திகள், தமிழர் பிரச்சினைக்கு மஹிந்தவினால் தீர்வுகாணமுடியாது என்ற சிந்தனையை தமிழ் மக்கள் மனங்களில் வளர்க்கின்றது.

அரசுக்கும் - விடுதலைப் புலிகளுக்கும் இடையில் கடந்த காலத்தில் நடந்த ஆறுகட்டப் பேச்சுகளில் காணப்பட்ட இணக்கங்களை நடைமுறைப்படுத்துவோம். யுத்த நிறுத்த உடன்படிக்கையில் குறிப்பிட்டபடி, பாதுகாப்பு வலயப் பகுதியில் மக்கள் மீளக் குடியமர அனுமதிப்போம். வடக்கு - கிழக்கில் இருந்து துணைப் படைகளை வெளியேற்றுவோம். இப்படியான செய்திகளை புதிய அரசு வெளியிட்டிருந்தால், தமிழ் மக்களுக்கு மஹிந்த மீது ஓரளவுக்காவது நம்பிக்கை ஏற்பட்டிருக்கும்.

கடந்த காலங்களில் தமிழர் தரப்பு ஆட்சிக்கு வரும் ஒவ்வொரு சிங்களத் தலைவர்களுக்கும், சந்தர்ப்பம் வழங்கி வந்துள்ளது.

ஜே.ஆர்.ஜெயவர்த்தன, ஆர்.பிரேமதாஸ, சந்திரிகா குமாரதுங்க, ரணில் விக்கிரமசிங்க போன்ற சிங்களத் தலைமைகளுக்கும் அவர்கள் ஆட்சிக்கு வரும்போது தமிழர் தரப்புச் சந்தர்ப்பங்களை வழங்கியது.

ஆனால், தமிழர் தரப்பு ஏமாற்றம்தான் அடைந்தது. யுத்தத்துக்கு முகம் கொடுத்தது. பலம்மிக்க சக்தியாக இன்று வளர்ந்து நிற்கின்றது.

சிங்கள மேலாண்மைக் கொள்கையுடன் புதிய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வந்தபோதும், தமிழர் தரப்பு அவருக்கும் ஒரு சந்தர்ப்பம் வழங்கியுள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை நிகழ்த்திய வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த மாவீரர் உரை மூலம் இந்தச் சந்தர்ப்பத்தை வழங்கியிருக்கின்றார் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன்.

''பொறுமையிழந்து, நம்பிக்கையிழந்து விரக்தியின் விளிம்பை அடைந்துள்ள எமது மக்கள் இனியும் பொறுத்துப் பொறுத்துக் காத்திருக்கத் தயாராக இல்லை. ஆகவே, வரையறுக்கப்பட்ட ஒரு குறுகிய கால இடைவெளிக்குள் எமது மக்களின் அரசியல் அபிலாஷைகளைத் திருப்தி செய்யும் வகையில் ஒரு நியாயமான தீர்வுத் திட்டத்தை புதிய அரசாங்கம் முன்வைக்க வேண்டும். இது எமது இறுதியான, உறுதியான அவசர வேண்டுகோளாகும்.

எமது இந்த அவசர வேண்டுகோளை நிராகரித்து - கடும் போக்கைக் கடைப்பிடித்து - காலத்தை இழுத்தடிக்கப் புதிய அரசாங்கம் முற்படுமானால் நாம் எமது மக்களுடன் ஒன்றிணைந்து எமது சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தை, எமது தாயகத்தில் தன்னாட்சியை நிறுவும் தேசச் சுதந்திரப் போராட்டத்தை அடுத்த ஆண்டில் தீவிரப்படுத்துவோம்.

- இப்படி தமிழர் தரப்பின் உறுதியான, ஆணித்தரமான முடிவை மாவீரர் தின உரை மூலம் தெற்குத் தலைமைக்கும்- சர்வதேசத்துக்கும் அறிவித்துள்ளார் தலைவர் பிரபாகரன்.

தமிழர் தரப்பின் இந்த முடிவு வெளியான கையோடு மறுநாள் ஜனாதிபதி ராஜதந்திரிகளைச் சந்தித்தார்.

## தீர்வுத் திட்டம் ஏதுமற்ற வெற்றிடத்தில் அரசுத் தலைமை

தமிழர் தரப்பின் கருத்தை வரவேற்று, யுத்த உடன்பாடு மீளாய்வும் அமைதிப் பேச்சும் ஒரே சமயத்தில் இடம்பெறும் என்ற அறிவிப்பை ராஜதந்திரிகளுக்கு விடுத்தார் ஜனாதிபதி. தமிழர் தரப்பின் தலைவர் பிரபாகரன் தெரிவித்த கருத்தின் ஆழத்தைப் புரியாமல், முரண்பாடான வகையில் அவர் கருத்தை வெளியிட்டுள்ளார்.

தமிழ் மக்களின் அபிலாஷை, தமது தாயகத்தில் சுயநிர்ணய உரிமையுடன் வாழவேண்டும் என்பதுதான். இதை கடந்த காலத்தில் ஆட்சியில் இருந்த தலைவர்களும் புரியவில்லை. புதிய தலைமையை ஏற்றுள்ள மஹிந்தவும் புரிந்ததாகத் தெரியவில்லை.

ராஜதந்திரிகளைச் சந்திப்பதற்கு ஜனாதிபதி பின்னடித்து வருகிறார் என முன்னர் செய்திகள் வெளிவந்து கொண்டிருந்தன. இறுதியில் ராஜதந்திரிகளைச் சந்தித்த அவர், அவர்கள் முன்பாக உரை ஒன்றை நிகழ்த்திவிட்டு சென்றுவிட்டாராம். ராஜதந்திரிகள் பல்வேறு விவகாரங்கள் தொடர்பாக ஜனாதிபதியிடம் கேள்வி எழுப்பி தமதுசந்தேகங்களைத் தவிர்க்க தயாராக இருந்தனர். ஆனால் ஜனாதிபதி உரையாற்றிவிட்டு, கேள்விகளுக்கு பதில் அளிப்பதைத் தவிர்த்துக்கொண்டார் என ஊடகவியலாளர் ஒருவர் கூறுகின்றார்.

இனப்பிரச்சினைக்கு தீர்வு ஒன்றைக் காணக் கூடிய உருப்படியான திட்டங்கள் எவையும் இதுவரை அரசு மட்டத்தில் உருவாக்கப் படவில்லை என்பதையே ஜனாதிபதியின் செயல் காட்டுகின்றது என்கின்றார் அந்த ஊடகவியலாளர்.

அமைச்சரவை முடிவுகளை வெளியிடும் செய்தியாளர் மாநாடு ஒன்று கடந்த வியாழக்கிழமை நடைபெற்றுள்ளது. அந்த மாநாட்டில் அரசமைப்பு விவகார அமைச்சர் டி.யூ.குணசேகர வெளியிட்ட கருத்துக்கள் உடனடியாக பேச்சுக்களோ சமாதான முயற்சிகளோ ஆரம்பிக்கும் சாத்தியம் குறைவு என்பதைச் சுட்டிக்காட்டுகின்றன.

பேச்சுக்கள் எப்போது ஆரம்பிக்கும்? நோர்வே தொடர்ந்து அனுசரணைப் பணியை மேற்கொள்ளுமா? மாவீரர் உரையில் தலைவர் பிரபாகரன் விதித்துள்ள காலக்கெடுவுக்குள் தீர்வுத்திட்டத்தை முன்வைப்பீர்களா? இப்படிச் சரமாரியான கேள்விகளை ஊடகவியலாளர்கள் எழுப்பினர்.

அவற்றுக்கு எல்லாம் பதில் அளிக்க முடியாது திணறிய அவர், சாக்குப் போக்குக் கூறி மாநாட்டை முடித்து வைத்தார்.

தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காணக்கூடிய திட்டம் எதுவும் இல்லாத வெற்றிடமாகவே அரசுத் தரப்பு இருக்கின்றது.

புதிய தலைவர் பதவியேற்று இரண்டு வாரங்களாகியும் இன்னமும் நோர்வேத் தரப்புடனோ, கண்காணிப்புக்குழுத் தரப்புடனோ அரசு தொடர்புகளை ஏற்படுத்தவில்லை. அதற்கான முயற்சிகள் நடப்பதற்கான சமிக்ஞை ஏதும் காணப்படவில்லை என்கின்றனர் தெற்கு ஊடகவியலாளர்கள்.



மஹிந்த ராஜபக்ஷ அரச தலைவராகத் தெரிவாவதற்கு காரணமாக அமைந்த ஜே.வி.பி. மற்றும் ஹெலஉறுமய போன்ற பேரினவாதச் சக்திகளின் அழுத்தம், அவற்றுடன் செய்துகொள்ளப்பட்ட உடன்பாடுகள் காரணமாக அடுத்தகட்ட நகர்வை அரசு மேற்கொள்ளமுடியாத இக்கட்டு நிலை ஏற்பட்டிருக்கின்றது என்று நோக்கர்கள் கூறுகின்றனர்.

மறுபுறம் ஜே.வி.பி.மற்றும் ஹெலஉறுமய போன்ற பேரினவாத சக்திகளை ஒதுக்கிவிட்டு தன்னந்தனியாக முடிவு எடுக்கமுடியாத நிலை ஜனாதிபதிக்கு ஏற்பட்டுள்ளது. அவர்களைப் புறந்தள்ளி விட்டு முடிவை எடுக்க முனைவாரேயானால், நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையை இழந்து ஆட்சியைக் கவிழ்க்க வேண்டிய நிலையும் ஏற்படாலாம்.

தற்சமயம் அரசுடன் ஸ்ரீலங்கா சுதந்தரக் கட்சியின் 66 உறுப்பினர்களும் அமைச்சர்களான டக்ளஸ் தேவானந்தா, போக்கல்லாகம ஆகியோர் உள்ளனர், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ்ஸில் இருந்து பிரிந்து வந்த 4 உறுப்பினர்களும் உள்ளனர். மொத்தம் உள்ள 72 பேருடன் ஜே.வி.பியின் 39 உறுப்பினர்களும் ஹெலஉறுமயவின் 7 உறுப்பினர்களும் ஆதரவு வழங்க வேண்டும். அப்போது தான் மஹிந்தவினால் ஆட்சியைக் கொண்டுசெல்லலாம்.

**வாராந்த அரசியல் அலசல்**
**குகா**

ஜே.வி.பி.மற்றும் ஹெலஉறுமயவின் ஆதரவை உறுதிப்படுத்தி ஆட்சியைக் கொண்டுசெல்ல வேண்டுமாயின், அவர்களைப் பகைக்க முடியாது. அவர்களின் காய்நகர்த்தல், அழுத்தம் ஆகியவற்றுக்கு பணிந்து தான் போக வேண்டும்.

அவர்களின் அழுத்தங்களுக்கு ஜனாதிபதி பணிந்து செல்வராயின், தேசியப் பிரச்சினையான இனப்பிரச்சினைக்கு, தமிழர் கேட்டும் தீர்வைக் கொடுக்கமுடியாது இதுதான் யதார்த்த நிலை.

இந்த நிலையில் எப்படிக் காய்நகர்த்தல்களை ஜனாதிபதி செய்யப் போகின்றார் என்பதை அடுத்துவரும் நாள்களில் தான் கண்டு கொள்ளமுடியும்.

புதுடில்லியில் இன்று முடிவடை(15 ஆம் பக்கம் பார்க்க)


## வடக்கு - கிழக்கு வீடமைப்பு மீள் நிர்மாணத் திட்டம்

பயனாளிகளைத்தெரிவுசெய்ய ஆய்வுக்குழு புள்ளிகளை வழங்கும். அதன்போது பின்வரும் விடயங்கள் கவனத்தில் கொள்ளப்படும்.

1. மீளத் திரும்பிய வருடம்
2. குடும்ப அங்கத்தவர் எண்ணிக்கை
3. பெண் தலைமைத்துவக் குடும்பம்
4. குடும்பத்தில் ஊனமுற்றோர் எண்ணிக்கை
5. குடும்பத்தில் முதியோர் எண்ணிக்கை
6. யுத்தத்தால் இறந்த / காணாமல் போன குடும்ப அங்கத்தவர் எண்ணிக்கை
7. உதவியற்ற சிறுவர் / ஆதரவற்றோர் எண்ணிக்கை

வீடழிவு சமூக நிலை ஆய்வு மதிப்பீட்டுப் படிவத்தில் வழங்கப்படும் தரவுகள் கணனி மயப்படுத்தப்பட்டு பிரதேச செயலர்களால் வரிசைக் கிரமப்படுத்தப்பட்டு குடும்ப நிரல் வெளியிடப்படும். இதற்குக் கிராம புனரமைப்புக் குழுவின் உதவியைப் பிரதேச செயலர்கள் பெற்றுக் கொள்வர்.

தெரிவுசெய்யப்பட்டவர்களது பெயர்ப்பட்டியல் பிரதேச செயலர்களால் பொதுமக்களின் பார்வைக்குப் பொது இடங்களில் பகிரங்கமாக வைக்கப்படும். முற்றாக / பகுதியாக அழிவுற்ற வீட்டுடையவர்களின் பெயர்கள் வெவ்வேறாகக் காட்சிக்கு வைக்கப்படும். இதன் மூலம் பிரதேச செயலர்கள் பொதுமக்களின் அவதானிப்புகளைப் பெற்றுக்கொள்வார்கள்....

**மேலும் விவரம் - நாளைய பத்திரிகையில்.**

(சி/46378) (24-46-13)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

17 - Honda Acc or Dex பெற்றோல் கார் விற்பனைக்குண்டு. தொடர்பு: இல.29, இராமலிங்கம் வீதி, திருநெல்வேலி. T.P. 071-2522847. (43552)

வயிற்றைச் சுற்றியுள்ள கூடுதலான தசையைக் குறைப்பதற்கும் மற்றும் உடம்பை வலுவாக வைத்திருக்க உதவக்கூடிய உடற் பயிற்சி செய்யும் Tummy Trimmer விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 176/1, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். T.P.222 7840 (43503)

நல்ல நிலையிலுள்ள பழைய Singer தையல் மெசின் விற்பனைக்குண்டு தொடர்பு: 176/1, நாவலர் வீதி (பிறவுண் றோட் தொடங்குமிடம்), யாழ்ப்பாணம். T.P.222 7840. (43504)

## வீடு காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் இல.98, மணிக்கூட்டு வீதி, பெருமாள் கோயிலடியில் அமைந்துள்ள 2 ½ பரப்புக் காணியுடன் கூடிய சகல வசதிகளும் கொண்ட வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு: T.P.:021-222 6849, 1-416-895-2060 அல்லது Veedu. Clock tower@hotmail.com. (43074)

கொக்குவில் கிழக்கு, பிறவுண் வீதியில் 3 பரப்புக் காணியில் அமைந்த வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு: S. ஸ்ரீ, பிறவுண் வீதி, கொக்குவில் கிழக்கு (கல்வாரி சேச்சிற்கு அருகில்), தரகர் தேவையில்லை. (43535)

யாழ்ப்பாணம், கண்டி வீதியில் கச்சேரிக்கு சமீபமாக சுற்றிவர மதிலிடப்பட்ட 8 பரப்புக் காணியில் 6 அறைகள் கொண்ட வீடு விற்பனைக்குண்டு. விலை பேசித் தீர்மானிக்கலாம். தொடர்பு: 0112582894. (43527)

கைலாச பிள்ளையார் கோயிலுக்கு அண்மையில் சகல வசதிகளுடன் கூடிய வீடு (1¾ பரப்பு) விற்பனைக்குண்டு. தரகர் தேவையில்லை. தொடர்பு: 0773144578. (43539)

## காணி விற்பனைக்கு

உடுவில் மகளிர் கல்லூரிக்கு மிக அருகில் மானிப்பாய் வீதியிலுள்ள பிள்ளையார் கோயிலுக்கு முன்பாக அமைந்துள்ள 2 பரப்புக் காணி உடன் விற்பனைக்குண்டு. தரகர் தேவையில்லை. தொடர்பு: திருமதி ரட்ணபிரகாசம், மானிப்பாய் வீதி, உடுவில், சுன்னாகம். T.P. 021-4591125. (43475)

85, திருநகர் கிளிநொச்சி புகையிரத வீதியில் உள்ள 4 பரப்புக் காணி உடன் விற்பனைக்குண்டு (அதிக விலை கேட்பவருக்கு முன்னுரிமை) தொடர்புகளுக்கு 764, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். T.P. 0779217497, 0773223133, 021 222 7910. (43534)

மருதனார்மடம் சந்திக்கு அருகில் கோப்பாய் வீதியில் 4 பரப்பும் 2 ½ குழியும் உடைய காணி உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: 0777730570 முகவரி கணேசு கமலேஸ்வரன், இணுவில் மேற்கு, இணுவில். (43541)

## நாய்க்குட்டி விற்பனைக்கு

சுத்தமான Dobermann Pincher நாய்க் குட்டிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: க.தன பாலசிங்கம் (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச்சந்தையடி, நல்லூர். (43383)

41 நாள் நிறைந்த ஜேர்மன் செப்பேட் அல்சேஷன் ஆண், பெண் குட்டிகள், 15 மாதம் நிறைந்த ஆண் அல்சேசன் நாய் விற்பனைக்குண்டு. தொடர்பு: ம.மார்க்கண்டு, M.S. லேன், கோண்டாவில் கிழக்கு. (43500)

## இறைச்சிக்கோழி விற்பனைக்கு

Prima உயிர் Broiler மற்றும் இறைச்சிக் கோழிகள் சுகாதார முறைப்படி உடன் சுத்தம் செய்து தினமும் பெற்றுக்கொள்ளலாம் (Electronic நிறுவை). தொடர்பு: (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (43384)

## கோழிக்குஞ்சு விநியோகம்

இரண்டு முறை தடுப்பு மருந்து போடப்பட்ட Original Prima Broiler குஞ்சுகள், பேட்டுக்குஞ்சுகள் 12.12.2005 திங்கட் கிழமை பிற்பகல் விநியோகிக்கப்படும். எமது பருத்தித்துறை - நெல்லியடிக்கிளைகளிலும், உடுவில் பாம் சென்ரர் - உடுவில், நல்லூர் பாம் சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி நல்லூர் (43385)

Bantam, Silky 2 கிழமைக் கோழிக் குஞ்சுகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: Baly Asbury "Church Lane Araly North. (43472)

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம், அரசாங்க திணைக்களத்தில் பட்டதாரி அதிகாரியாக கடமையாற்றும் 33 வயது, அனுஷம், கிரக பாவம் 13, செவ்வாய் அற்ற மணமகனுக்கு ஆசிரியை, பட்டதாரி அலுவலர்கள், பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் மற்றும் அரசாங்க, கூட்டு ஸ்தாபனங்களில் வேலைபார்க்கும் மணமகள் உடன் தேவை. ஜாதகம் மற்றும் விவரங்களுடன் தொடர்பு கொள்க. விளம்பர இல. 2762 C/o உதயன். (43547)

யாழ்.இந்து கௌரவ குடும்பம், 1966, திருவோணம், 8 இல் செவ்வாய் ,35 ½ கிரக பாவம், உயரம் 5' 9'' B.A.பட்டதாரி ஆசிரியருக்கு 8வயது குறைவான அழகான பட்டதாரி மணமகளும் 1973, புனர்பூசம், கடக ராசி 1இல் செவ்வாய், கிரகபாவம் 51, உயரம் 5' 7'' M.SC. விரிவுரையாளருக்கு 1980 இல் பிறந்த உயர் பதவி வகிக்கும் பட்டதாரி மணமகளும் தேவை .தொடர்பு: SHIVAA-LAYA T.P.: 0776528641 (41531)

யாழ்.இந்து கௌரவ, லண்டன் பிரஜாவுரிமை உடைய அவிட்ட நட்சத்திரம், 1975 இல் பிறந்த மணமகனுக்கு பெற்றோர் அழகிய, படித்த மணமகளை எதிர்பார்க்கின்றனர். தொடர்பு: திரு.தி.ரவீந்திரநாதன் (ஆசிரியர்) - தொ.பே. 021 222 6902, 021 222 9425. (43517)

யாழ்.இந்து கௌரவ குடும்பம் 1969, புனர்பூசம், பாவம் 14½ புள்ளி, 5'10'' உயரமுடைய பட்டம் பெற்று அரச உயரதிகாரியாக கடமையாற்றும் மணமகனுக்கு அரச உத்தியோகம் பார்க்கும் பெண் கொழும்பு வீட்டுடன் எதிர்பார்க்கப்படுகின்றது. தொடர்பு: விளம்பர இல.2761, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (43525)

யாழ்.இந்து கௌரவ குடும்பம், 1972, உத்தரட்டாதி, மீனராசி 8 இல் செவ்வாய் 5'6'' உயரம், G.C.E (O/L) வர்த்தகர் மணமகனுக்கும் 1978, பூராடம் தனுசுராசி, 1இல் செவ்வாய் 73¼ கிரகபாவம் வர்த்தகருக் கும் படித்த, அழகான மணமகள் தேவை. தொடர்பு: ''சிவாலயா'' 11, யமுனா வீதி, நல்லூர், தொ.பே.0776528641. (43532)

## பணிப்பெண் தேவை

வீட்டுவேலைகள் செய்வதற்கு (தங்கி நின்று) உதவியாளர் ஒருவர் தேவை. தொடர்பு: 021-222 9147. (43538)

## திருமண சேவை

இன்னார்க்கு இன்னார் என்று எழுதி வைத்தானே தேவன் அன்று அன்றே நிச்சயமான ஒருவரை இன்று இனம்காண்பது எப்படி? தீவிர தேடலே ஒரே வழி! பெரும் தொகையான கடிதக் கோப்புக்களுள் சுயதெரிவு முறையில் சுகமாக தெரிவுசெய்ய 'சுயதெரிவு முறை முன்னோடி' பிரபல திருமண ஆற்றுப்படுத்துநர் குரும்பசிட்டியூர் மாயெழு வேலமுதனை இன்றே சந்தியுங்கள். மேலதிக விவரங்களுக்கு கிழமை நாள்களில் மாலை மணி 4.30-8.30 வரையான நேரகாலத்துள் வேலமுதனிடம் விசாரித்தறிக. நேரடித் தொலைபேசி 2360488, 4514396 (சி-46607)

இந்து - கிறிஸ்தவ, உள்நாட்டு - வெளிநாட்டு தகுதி தராதரத்திற்கு ஏற்ப மணமக்களின் விவரங்கள் பெற குடும்ப விவரம், ஜாதகக் குறிப்பு அண்மையில் எடுத்த புகைப்படத்துடன் தொடர்புகொள்ளவும். Shivaalaya International Marrige Bureau No. 11, Jamuna Street, Nallur Jaffna Srilanka T.P. 0776528641 E.mail Shivagarn 12 @ yahoocom. (43353)

## தவறிவிட்டது

கைதடி நுணாவில், சாவகச்சேரி என்ற முகவரியை உடைய கனகசபை யசோகாந்தன் என்பவருடைய தே.அ.அட்டை (இல. 781993697V), விசேட அடையாள அட்டை, வன்னி பயண அனுமதி அட்டை, சாரதி அனுமதிப்பத்திரம், வங்கி அட்டை என்பன அடங்கிய பேஸ் 02-12-2005 முகமாலை சோதனைச்சாவடியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் பிரிந்தா தொலைத்தொடர்பு நிலையம், கைதடி நுணாவில் என்ற முகவரியுடன் அல்லது 021 222 5520 தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (43548)

## கண்டெடுக்கப்பட்டுள்ளது

ஈவினையில் ஒரு தொகைப் பணம் கண்டெடுக்கப்பட்டுள்ளது. தவறவிட்டவர்கள் செல்வரட்ணம் (ஓய்வுபெற்ற இ.போ.ச சாரதி பிள்ளையார் கோயிலடி ஈவினை என்ற முகவரியுடன் தொடர்பு கொள்ளவும் (43493)

**Refresh System**

புதிய, பழைய கணனிகள் வீட்டில் வந்து திருத்திக்கொடுக்கப்படும். தொடர்பு: சுதுமலை, மானிப்பாய், 0776273611, 077-3253104.
(43247)(42.32 19.11)

## பூச்சாடிப் பிரியர்களுக்கு

றபர் துகள்களால் (Crumbed Rubber) தயாரிக்கப்பட்ட சிறிய, பெரிய கலர்ப் பூச்சாடிகள் விற்பனைக்குண்டு. வீட்டிற்கு உள்ளேயும் வெளியேயும் இலகுவில் இடம்மாற்றி வைக்கக்கூடியது. தொடர்பு: க.ஸ்ரீபதி, நவரட்ணராஜா வீதி, நெட்டிலிப்பாய், கோண்டாவில் (DSI ரயர் களஞ்சியத்திற்கு அருகில்) (46278)

## மணமகள் தேவை

இந்து குடும்பம், வயது 32, நட்சத்திரம் திருவோணம், மகரராசி, செவ்வாய்க் குற்றம் இல்லை, கல்வி B.Sc.Bio Chemistry லண்டனில் நிரந்தர உத்தியோகம் பார்க்கும் அழகான வாலிபருக்கு

A/L சித்தியடைந்த அழகான மணமகள் தேவை. பெண்ணுக்கு செவ் வாய், சூரியன் ஒரே வீட்டில் இருக்க வேண்டும். அல்லது செவ்வாய் இருக்கும் வீட்டிலிருந்து சூரியன் 4ஆம் வீடு, 7ஆம் வீடு, 8ஆம் வீட்டில் இருப்பது விரும்பத்தக்கது. உத்தரட்டாதி, ரேவதி நல்ல நட்சத்திரங்கள். தாய், தந்தையர் இளைப்பாறிய அரசாங்க உத்தியோகஸ்தர்கள். புகைப்படம், ஜாதகக் குறிப்புடன் வாருங்கள் சந்திக்கும் நேரம் மாலை 3-5 (தரகுப் பணம் இல்லை).

தொடர்பு:- பொ.பாலச்சந்திரன்
(இளைப்பாறிய உள்ளூராட்சி அரச உத்தியோகத்தர்)
Church Lane, K.K.S.Rd., Kokuvil East, Kokuvil.

# மரண அறிவித்தல்கள்



## ஐயாத்துரை பூபாலசிங்கம்

கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் இல.15, கலட்டி அம்மன் வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட ஐயாத்துரை பூபாலசிங்கம் அவர்கள் 02.12.2005 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் இராசம்பாளின் அன்புக்கணவரும் நித்தியமலர், சாந்தினி, உதயகுமார் (ஜேர்மனி), ரசிக்குமார் (ஜேர்மனி), பாலகுமார் (லண்டன்), சர்மிளா (ஆசிரியை-வ/புளியங்குளம் இந்துக்கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் S.சிவானந்தன் (இலங்கைவங்கி, கிளிநொச்சி), N.சிவானந்தன் (கணக்காளர்,வவுனியா), புஸ்பராணி (ஜேர்மனி), ராகினி (லண்டன்), ரவிச்சந்திரன் (ஆசிரியர் வ/நெடுங்கேணி மகா வித்தியாலயம்) ஆகியோரின் அன்பு மாமனாரும் சண்முகம் (கனடா), காலஞ்சென்ற பூமணி ஆகியோரின் அன்புச்சகோதரரும் இராஜரெட்ணம் (ஓய்வுபெற்ற தொழில்நுட்ப உத்தியோகத்தர்), மரகதவல்லி, சற்குணேந்திரராஜா (கனடா) ஆகியோரின் மைத்துனரும் மருஜன், மதுஜன், இந்துஜன், அபினுகா (ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்), வினுஜா, ரதுஷான், மதுஷான் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புப்பாட்டனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நாளை (5.12.2005) திங்கட்கிழமை 2மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்.
15, கலட்டி அம்மன்வீதி, யாழ்ப்பாணம். (43529)(42)

## சங்கரநாதன் அருளம்மா

நல்லூரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சங்கரநாதன் அருளம்மா அவர்கள் (02.12.2005) வெள்ளிக்கிழமை இறை பதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு. திருமதி சண்முகம்-சின்னம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற சங்கரநாதன் (பிரதம சிறாப்பர், திறைசேரி கொழும்பு) அவர்களின் அன்பு மனைவியும் கனகம்மாவின் அருமைச் சகோதரியும் இந்துமதி, விஜயகுமார் (கலாநிதி - பொறியிலாளர் அமெரிக்கா), வனஜா ஆகியோரின் தாயாரும் ரகுபதி (யா/சன்மார்க்க மகா வித்தியாலயம்), அமுதா (பொறியியலாளர் அமெரிக்கா) இராமசுவாமி (பிரதம லிகிதர், அவிசாவளை) ஆகியோரின் மாமியாரும் கார்த்திகா, காயத்திரி, மாதங்கி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.12.2005) ஞாயிற்றுக் கிழமை முற்பகல்10 மணியளவில் இல.15, புவனேஸ்வரி அம்பாள் வீதி, நல்லூர் என்ற அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நல்லூர் செம்மணி இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பிள்ளைகள், மருமக்கள்.
15, புவனேஸ்வரி அம்பாள்வீதி, நல்லூர்கிழக்கு, யாழ்ப்பாணம்.
(43424)(42.21.19.11)

## அனுமதிப் பரீட்சை ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், டிசெ.4

நேற்று யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெறவிருந்த கல்வியியலின் பட்டப்பின் டிப்ளோமா அனுமதிப் பரீட்சை ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

இப்பரீட்சை எதிர் வரும் 17ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடை பெறும் என யாழ். பல்கலைக்கழகப் பதிவாளர் தெரிவித்தார். (14-12)

## காரைநகரில் இன்று சமயபாடப் பரீட்சை

காரைநகர்,டிசெ.4

காரைநகர் மணிவாசகர் சபை நடத்தும் சைவ சமய பாடப் பரீட்சை இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிமுதல் காரைநகர் பகுதிப் பாடசாலைகளில் நடைபெறவுள்ளது.

காரைநகரிலுள்ள 7 பாடசாலைகளைச் சேர்ந்த சுமார் ஆயிரம் மாணவர்கள் இந்தப் பரீட்சையில் தோற்றவுள்ளனர் என மணிவாசகர் சபையின் பரீட்சைச் செயலாளர் க.தில்லையம்பலம் தெரிவித்தார்.

இப்பரீட்சையில் அதி உயர் புள்ளிகளைப் பெறும் மாணவர்களுக்கு இவ்வாண்டு ஈழத்துச் சிதம்பரத்தில் நடைபெறவுள்ள மணிவாசகர் விழாவில் தங்கப்பதக்கங்களும், பரிசில்களும் வழங்கப்படவுள்ளன என்றும்- அவர் மேலும் தெரிவித்தார். (எ-73)

FedEx அனுசரணையுடன் FedEx
திருமுருகன் கொம் நெற்றின் பரிசு மழை
05.12.2005 முதல் 15.01.2006 வரை
எமது நிறுவனத்தின் மூலம் நத்தார், புதுவருட, பொங்கல் தினங்களை முன்னிட்டு உங்கள் உறவுகளுக்கு துரித கதியில் கடிதங்கள், உணவு, உடை, V.D.O பிரதி மற்றும் அன்பளிப்புப் பொருள்களை அனுப்புவோரின் பற்றுச்சீட்டு இலக்கங்கள் குலுக்கலின் மூலம் அதிர்ஷ்டம் பார்க்கப்பட்டு பெறுமதிவாய்ந்த பரிசில்கள் வழங்கப்படும்.
முதலாம் பரிசு - தங்கநாணயம் மற்றும் பெறுமதிவாய்ந்த 10 ஆறுதல் பரிசுகள்
மற்றும் 20% கழிவு
சுவிஸ்லாந்துக்கான 5kg பொதி ஒன்றிற்கு 1kg க்கான கட்டணம் 650/=
லண்டனுக்கான 5kg பொதி ஒன்றிற்கு 1kg க்கான கட்டணம் 500/=
ஐரோப்பிய நாடுகளுக்கு விசேட கழிவு வழங்கப்படும்.
திருமுருகன் கொம் நெற்
259, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். Tel - 021 222 7835 Fax - 021 222 7836
46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம். Tel - 021 222 7560 Fax - 021 222 7310
36, செல்லப்பிள்ளையார் கட்டடம், பிரதான வீதி, நெல்லியடி, கரவெட்டி. Tel - 021 226 4252 Fax - 021 226 4263
குகன் தொலைத்தொடர்பகம் 166, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். Tel - 021 222 2027 Fax - 021 222 2993
வாடிக்கையாளர்களுக்காக தினசரி காலை 7.00 மணிமுதல் இரவு 10.00 மணிவரை எமது சேவை நடைபெறுகின்றது.
யாழ். நகரில் இவை அனைத்தும் திருமுருகன் கொம் நெற்றில் மட்டும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தென்னைகளுக்கு மாரிகாலத்தில் பசளை இடுதல் மிக உகந்தது

இவ்வருட இறுதிக்குள் யாழ்ப்பாணக் குடாநாட்டிலுள்ள தென்னைச் செய்கையாளர்கள் தமது தென்னை மரங்களுக்கு சேதன, அசேதன பசளைகளை இடவேண்டும். தேங்காய் உற்பத்தியை அதிகரிக்க அது வழிவகுக்கும் என யாழ்ப்பாணம் தென்னைவள அபிவிருத்தி உத்தியோகத்தர் ஜெ.சத்தியேந்திரன் அறிவுறுத்தியுள்ளார்.

வளரும் இளம் தென்னைமரங்களுக்கும், முதிர்தென்னை மரங்களுக்கும் எவ்வாறு சேதன, அசேதனப் பசளைகளை இடவேண்டும் என அவரிடம் கேட்டபோது அவர் தெரிவித்த கருத்துக்களையும் ஆலோசனைகளையும் இங்கே தருகிறோம்.

மழைக்காலம் முடியும் முன்னர் - டிசெம்பர் மாதத்திற்குள் - தென்னை மரங்களுக்குப் பசளையிடுவதன் மூலம் தேங்காய் உற்பத்தியை அதிகரிக்க முடியும் தென்னை மரங்கள் அநேகம் அழிந்துள்ள நிலையில், இருக்கின்ற மரங்களைக்கொண்டு அதிகரித்த - உச்ச பயன்பாட்டைப் பெற்றுக்கொள்ள வேண்டுமாயின் தென்னை மரங்களுக்குப் பசளைகள் இடுதல் அவசியம்.

**சேதன , அசேதனப் பசளைகள்**

மாட்டெரு, ஆட்டெரு, கோழிஎரு மற்றும் கிளிசறியா இலைகள், இப்பில் இப்பில் இலைகள் போன்ற சேதன பசளைகளையும், திணைக்களத்தினால் சிபார்சு செய்யப்பட்ட இளம் தென்னைமரங்களுக்கும் முதிர் தென்னை மரங்களுக்குமான அசேதனப் பசளைகளையும் குறிக்கப்பட்ட அளவுகளில் பயன்படுத்த வேண்டும்.

இவ் உரங்கள், பசளைகளில் தென்னை மரங்களுக்குத் தேவையான நைதரசு, பொஸ்பரசு, பொட்டாசியம் போன்ற போஷணைகள் அடங்கியுள்ளன.

**சேதனப் பசளை இடும் முறை**

பாளை வந்த தென்னம் கன்றுகள் ஒவ்வொன்றுக்கும் 30கிலோ உலர்ந்த மாட்டெரு இடப்படவேண்டும். மாட்டெருவுடன் சேர்ந்து 400 கிறாம் 'சப்போஸ் பொஸ்பேற்' ஒருகிலோ 'மியூரியற் ஒவ் பொட்டாசும்' கலந்து இடுதல் வேண்டும்.

தென்னை மரங்களின் அடியில் இருந்து மூன்று அடிதூரம் தள்ளி ஆறு அடிக்கு உட்பட்ட நிலத்தில் அரை அடி ஆழத்துக்கு குழிவெட்டி, அதனுள் இவற்றை இடவேண்டும்.

மரங்களைச் சுற்றி இவ்வாறு பசளைகளை இட்டபின்னர் குழியினை மண்ணால் மூடி, அவற்றின் மீது தென்னை ஓலைகள் அல்லது பனை ஓலைகளைப் போட்டுப் பாதுகாப்புச் செய்தல் வேண்டும்.

**தென்னை மரங்களில் மாடுகளைக்கட்டுதல்**

தென்னை மரங்களில் மாடுகளைக் கட்டுவதன் மூலம் அவற்றின் கழிவுகள் மரங்களுக்குப் பசளையாகப் பயன் பெற வைக்க முடியும். முன்னர் கூறியுள்ளது போல மரத்தில் இருந்து மூன்றடி - ஆறடிக்கு இடைப்பட்ட நிலத்தில் அரைஅடி ஆழத்தில் குழிவெட்டி பசளைப்பாத்தி அமைத்துக் கொள்ள வேண்டும்.

பின்னர் ஒரு தென்னை மரத்துக்கு இரண்டு மாடுகள் என்ற வகையில் பத்து நாள்கள் இரவு நேரத்தில் தொடர்ச்சியாகக் கட்டவேண்டும்.

மாடுகளின் கழிவுகள் யாவும் பசளைப் பாத்திக்குள் ஒன்று சேரும் படியாகச் செய்தல் வேண்டும். கழிவுகள் யாவும் குழிக்குள் சேர்ந்ததன் பின்னர் 200கிறாம் 'சப்போஸ் பொஸ்பேற்' 750கிறாம் 'மியூறியற் ஒவ் பொட்டாஸ்' என்பவற்றையும் போட்டு மண்ணால் மூடி, விட்டுவிடவேண்டும். வருடம் ஒரு முறை இவ்வாறு பசளையிட்டால் நல்லது.

**அசேதனப் பசளை இடல்**

இளம் தென்னை மரங்களுக்கு இளம் பசளைக்கலவை இடுதல் வேண்டும். முதிர் தென்னை மரங்களுக்கு முதிர் பசளைக் கலவை இடுதல் வேண்டும்.

இவற்றை இடுவதன் மூலம் மரங்களுக்கு ஏற்படும் 'நைதரசன்', 'பொட்டாஸ்' பற்றாக் குறைகளை போக்க முடியும். தென்னை ஓலைகள் பழுத்து வட்டுக்கள் சிறுத்தல், தென்னோலைகளின் ஈக்குகளின் பக்கங்களில் புள்ளிகள் தோன்றுதல் போன்ற குறைபாடுகளைப் போக்கவும் இவை உதவும்.

**இளம் மரங்களுக்கான கலவை இடுதல்**

ஐந்து வருடங்களுக்கு உட்பட்ட - பாளைகள் வெளிவராத - தென்னம் கன்றுகளுக்கு இவை இடப்படும். ஆறு மாதகாலத்துக்கு ஒரு தடவை இக்கலவையை இடுதல் நல்ல பலனளிக்க வழிசெய்யும்.

இவ் உரத்தை ஒரு மரத்துக்கு அரைக் கிலோ முதல் ஒரு கிலோ வரையில் இடலாம். தென்னை மரங்களின் அடியில் இருந்து அரை அடி தள்ளி அரை அடி ஆழத்தில் மண்ணை கொத்திப் பிரட்ட வேண்டும். படிப்படியாக ஐந்து அடிசுற்று வட்டாரத்தில் இவ்வாறு மண்ணைக் கொத்திப் பிரட்டி அதன் மீது இக்கலவையை இடுதல் வேண்டும்.

**முதிர் மரங்களுக்கான கலவை இடுதல்**

மரங்களின் அடியில் இருந்து ஆறடி சுற்றுவட்டத்தில் மண்ணைக் கொத்திப் புரட்டி ஒவ்வொரு மரத்துக்கும் அரைக் கிலோ வீதம் இக்கலவையை இடுதல்வேண்டும். அரை அடி ஆழத்துக்கு மண்ணை கொத்திப் புரட்ட வேண்டும். சுற்றுவட்டமாக மூன்று கிலோ உரத்தினை தூவினால் போதுமானது. பின்னர் பசளையிட்ட இடத்தை தென்னை ஓலைகள் அல்லது பனை ஓலைகள் கொண்டு மூடிவிடல் வேண்டும். வருடா வருடம் இவ்வாறு நான்கு தடவைகள் கலவை இடுதல் வேண்டும்.

தென்னை மரங்களை பாதுகாப்பதற்கும் அவற்றை செழிமையாக வளரவைப்பதற்கும் அதன் மூலம் தேங்காய் உற்பத்தியை அதிகரிக்கவும் தென்னைச் செய்கையாளர்கள் தமது தென்னை மரங்களுக்கு தவறாது பசளை இடுதல் அவசியமானதாகும். *



*உதயன் -சஞ்சீவி பத்திரிகைகளின் மூத்த செய்தியாளர் விஸ்வநாதக் குருக்கள் பரிபூரணந்தசர்மா தமது 63ஆவது வயதில் கடந்த 23ஆம் திகதி இறவனடி எய்தியமை வாசகர்கள் அறிந்ததே. ஓய்வு ஒழிச்சல் இல்லாமல், நோவோ வலிப்போ பார்க்காது எழுதிய கை இப்போது இல்லாது போய் விட்டது.*

*தனது வாழ்நாளின் இறுதிவரை ஒரு துடிப்பான செய்தியாளராகப் பணியாற்றிய அமரர் வி.பி.சர்மா இறப்பதற்கு இரண்டு தினங்களுக்கு முன்னர் உதயனுக்கு எழுதிய கடைசிக் கட்டுரை இது. அவரது பத்திரிகைப் பணியை பதிவு செய்யும் இறுதி ஆக்கமாக இக்கட்டுரை சிறப்புப் பெறுகிறது. அதனை வாசகர்களுக்கு இங்கே தந்து, செய்திப் பணி மூலம் மக்களுக்குச் சேவை செய்த அவருக்கு அஞ்சலி செலுத்தும் முகமாக இக்கட்டுரையை பிரசுரிக்கிறோம்.*

*- பிரதம ஆசிரியர்.*

# கழிவுகளிலிருந்து பசளை உற்பத்தி குடாநாட்டில் ஒரு புதிய முயற்சி

யாழ். குடாநாட்டில் காக்கைதீவுப் பகுதியில் யாழ். மாநகர சபையின் ஏற்பாட்டில் சேதனப்பசளை உற்பத்தி நிலையம் ஒன்று அண்மையில் ஆரம்பித்துவைக்கப்பட்டுள்ளது.

இந்தச் சேதனப் பசளைகளின் உற்பத்திக்கு மூலப்பொருளாகக் குப்பை கூழங்களே பயன்படுத்தப்படுகின்றன. இதற்கென வண்ணார்பண்ணை, அரியாலை, நல்லூர் போன்ற பகுதிகளில் மாநகரசபை ஊழியர்களால் சேகரிக்கப்பட்ட குப்பை கூழங்கள் தற்போது பயன்படுத்தபடுகின்றன.

சேதனப்பசளை உற்பத்தி நிலையத்தில் விசேடமாக மண்டபம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. அதன் தரை சிமெந்தினால் ஆக்கப்பட்டிருந்தது.

முதலில் டிரக்டர்களில் கொண்டுவரப் படும் குப்பை கூழங்களை தரம்பிரிப்பார்கள். அவற்றில் இருந்து உக்காத பொருள்களான பொலித்தீன், கண்ணாடி, பிளாஸ்டிக் போன்ற பொருள்கள் அகற்றப்படும். நன்கு உக்கக்கூடிய பொருள்கள் அடங்கிய குப்பைகளேசேதனப்பசளை உற்பத்திக்கெனத் தெரிவுசெய்யப்படும்.

தெரிவுசெய்யப்பட்ட குப்பைகள் சிமெந்துத்தரையில் பாத்திபோன்று போடப்படும். அவ்வாறு போடப்படும் பாத்தி 'கியூப்' எனப்படும்.

ஒரு 'கியூப்' ஆனது 3 மீற்றர் நீளத்திற்கு ஒரு மீற்றர் அகலத்தில் 3அடி உயரத்திற்கு குப்பைகளால் அட்டிகளாக அமைக்கப்படும். அவற்றின் மீது தொடர்ந்து தண்ணீர் பாய்ச்சப்படும் 4நாள்களின் பின்னர் அவற்றின் மேற்பரப்பில் துவாரங்கள் இடப்பட்ட 2அங்குல விட்டமுடைய 'எஸ்லோன்' குழாய்களை அடுக்கி மேலும் 2அடிக்கு குப்பைகளை இட்டு அட்டிபோல் வடிவமைக்கப்படும்.

துவாரமிடப்பட்ட குழாய்கள் பயன்படுத் துவதன் நோக்கம் குப்பைகள் குவித்து காணப்படுவதனால் ஏற்படுகின்ற வெப்ப வாயு, மணம் என்பன குழாயின் துவாரங்களின்வழியே வெளியேறுவதற்காகவேயாகும்.

இவ்வாறு வடிவமைக்கப்பட்ட பாத்திக்கு தினமும் தேவைக்கேற்ப நீர் பாய்ச்சப்படும். 15தினங்களுக்கு ஒரு தடவை மேல் கீழாக குப்பைகள் மாற்றப்படும்.

ஒரு பாத்தி அமைப்பதற்குப் 15நாள்கள் எடுக்கின்றது. கடந்த இரண்டு மாதங்களில் இவ்வாறான 5பாத்திகள்




அமைக்கப்பட்டுள்ளன. இவற்றை அமைப்பதற்கு 70 டிராக்டர் பெட்டிகளில் கொண்டுவரப்பட்ட குப்பை கூழங்கள் பயன்படுத்தபட்டன. ஈரலிப்பைப் பேணுவதற்காக வாழைத்தண்டுகள், நார்கள் என்பன அட்டிகளின் இடையில் பரவலாக வைக்கப்பட்டிருக்கும்.

பாத்திகள் அமைக்கப்பட்ட காலத்தில் இருந்து 6மாதங்களின் பின்னர். சேதனப் பசளை பயன்பாட்டிற்குத் தயாராகிவிடும்.

அதன்பின்னர் அவை பிரதானமான பயிர்ச்செய்கைகளுக்கு பயன்படுத்தப்படும்.

இவ்வாறானதொரு சேதனப்பசளை உற்பத்தி நிலையம் [illegible] இந்த முயற்சி பெருவெற்றி அளித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அனுராதபுரம், கொழும்பு போன்ற பகுதிகளில் இவ்வாறான சேதனப்பசளை உற்பத்திநிலையங்கள் இயந்திரங்களைப் பயன்படுத்தி இயங்கிவருகின்றன.

யாழ். குடாநாட்டில் இயங்கும் சேதனப் பசளை உற்பத்தி நிலையத்தில் 9ஊழியர்கள் கடமைபுரிந்து வருகின்றனர். இவர்களைக் கவனிப்பதற்கு ஓர் அதிகாரி உள்ளார்.

விரைவில் இங்கும் சேதனப் பசளைகளை உற்பத்திசெய்யும்



இயந்திரங்களைத் தருவதற்கு ஜி.ரி.இசற் நிறுவனம் முன் வந்திருப்பதாகவும் கூறப்படுகின்றது. அனேகமான நாடுகளில் கழிவுப்பொருள்கள் மீள் உருவாக்கப்பெற்று பயன்படுத்தப்படுகின்றன. அதேபோன்று எமது நாட்டிலும் கழிவுப் பொருள்களை இவ்வாறு மீள்பயன்பாட்டிற்கு உபயோகப் படுத்துவது வரவேற்கவேண்டிய விடயமே.

இவ்வாறு குப்பை கூழங்களைப் பய னுள்ளதாக மாற்றுவோமாயின் எமது பிரதேசத்தின் எதிர்காலம் வளமானதாக அமையும் என்பதில் ஐயமில்லை

-கங்கை வேந்தன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கியுபிட் போட் KUPID FORT

(இது ஒரு இந்தியன் தயாரிப்பு) Capsules



பிரசித்தி பெற்ற, ஆயுர்வேத மூலிகைகளைக் கொண்டு இந்தியாவில் தயாரிக்கப்பட்ட ஒரு மாத்திரை, சர்வதேச உலகில் எல்லோராலும் அங்கீகரிக்கப்பட்ட ஒரு சிறந்த ஔஷதம். கியுபிட் போட் கீழ்க்காணும் பிரச்சினைகளை சீர்செய்யும்.

- ஆண் வீரியமின்மை, மலட்டுத் தன்மையைப் போக்க
- வயது முதிர்ந்தோரின் பாலியல் பிரச்சினைகளுக்கு ஒரு தீர்வு
- சாதாரண பாலியல் குறைபாடுகளை சரிப்படுத்த ஒன்றோ இரண்டு மாத்திரைகளைத் தொடர்ந்து ஒரு மாதம் பாவித்து சிறந்த பயனைப் பெறுங்கள்.

100% ஆயுர்வேத மூலிகைகளால் தயாரிக்கப்பட்டது.

எதுவித பக்க விளைவுகளும் கிடையாது.

கியுபிட் போட் வில்லைகள் தாம்பத்திய வாழ்வில் ஒரு மறுமலர்ச்சி.

கியுபிட் போட் என்று பெயர் சொல்லிக் கேட்டு வாங்குங்கள்.

**நாடெங்கிலும் உள்ள சகல பார்மஸிகளிலும் பெற்றுக்கொள்ளலாம்**

**வைத்திய ஆலோசனையைப் பெற்று சிறந்த பயனை அடையுங்கள்**

(சி-46478) (21.11.19)


## பழமரக்கன்றுகள் விநியோகம்

யாழ்.மாவட்டத்தில் யாழ்.மாவட்ட செயலகத்தினால் ஒதுக்கப்பட்ட 3 லட்சம் ரூபா நிதி மூலம் கமநல சேவைத் திணைக்களங்கள் ஊடாக விவசாயிகளுக்கு இலவசமாக பழமரக்கன்றுகள் விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

யாழ்.மாவட்ட கமநல சேவைத் திணைக்களத்தின் ஊடாக இக்கன்றுகள் ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவில் இருந்தும் 75 விவசாயிகளை தெரிவு செய்து அவர்களுக்கே இக்கன்றுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

மா, பலா, தேசி, கொய்யா, கமுகு போன்ற பழமரக்கன்றுகளே வழங்கப்பட்டு வருவதாக கமநல சேவைத் திணைக்கள உதவிப் பணிப்பாளர் எஸ்.சுந்தரரேசன் தெரிவித்தார். (த-180)

## நிறுவுநர் நினைவு தினம்

மட்டுவில் தெற்கு வளர்மதி சனசமூக நிலையத்தின் நிறுவுநர் பொன்.நாகமணியின் 9ஆவது நினைவு நிகழ்வு நாளை திங்கட்கிழமை மாலை 5.00 மணிக்கு வளர்மதி கலையரங்கில் நடைபெறவுள்ளது. நிலையத் தலைவர் ச.கிருஷ்ணன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக சாவகச்சேரி பிரதேச சபையின் செயலாளர் ந.பாலச்சந்திரன் கலந்து கொள்வார். (எ-75)


# மனோதத்துவ வைத்தியம்

**(GENERAL PSYCHO THERAPY)**

**இப்பொழுது யாழ்ப்பாணத்தில்**

**05-12-2005 - 11-12-2005**

முன்கூட்டியே பதிவுசெய்யவும்

இளைஞர்களே!

- சக்தி குறைவு • ஞாபக மறதி • பயம் • நடுக்கம்
- நித்திரைக் குறைவு • ஆண்மைக் குறைவு • நீரிழிவு நோய்

என்பவற்றால் தாழ்வு மனப்பான்மையா?

கவலையை விடுங்கள். ஆரம்ப மனநோய் பாதிப்பு உடனடியாக நீக்க என்னுடன் உடனடியாகத் தொடர்புகொள்ளுங்கள். ஆண்மைச் சக்திக் குறைவுதான் உங்கள் கவலையா? மனோதத்துவ வைத்தியத்தாலும் மூலிகை மருந்துகளாலும் வெற்றி பெறலாம். பலர் இங்கே சிகிச்சை பெற்றுப் பூரண சுகமடைந்தமைக்கு ஆதாரம் உண்டு.

குறிப்பு: இறுதி நேரத்தில் வருவதைத் தவிர்க்கவும்

தொடர்புகளுக்கு: பலரது பாராட்டைப் பெற்ற

**பிரபல மனோதத்துவ நிபுணர்**

**Dr.P.ஆறுமுகம் S.M.P.**

A.S.N. சுற்றுலா விடுதி,

392/A, மணிக்கூண்டு வீதி, யாழ்ப்பாணம்

(பெருமாள் கோயிலுக்கும் வெலிங்டன் சந்திக்குமிடையில்).

Govt. Regd. No. 9492

Hot Line: 0777 569205 T.P.: 3181, 5399

(முன்கூட்டியே பதிவுகளை மேற்கொள்ளவும்)

(சி-41917) (21-11-14)


## 16ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி

தோற்றம் 12 - 06 - 1928



மறைவு 08 - 12 - 1989

**அமரர் செல்லப்பா சிவஞானம்** (பத்தர்)

அன்புக்குரிய தந்தையை நினைவுகூர்ந்து அவரின் ஆத்மா நித்திய சாந்திபெற எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.

நாச்சிமார் கோயிலடி, கோப்பாய் தெற்கு, கோப்பாய்.

மனைவி, பிள்ளைகள்.

(43321)(21.11.19

## நினைவு அஞ்சலி

### அமரர் இரத்தினம் துரைலிங்கம்

(நெற்கொழு வீதி, ஊரிக்காடு, வல்வெட்டித்துறை.)

வல்வை சிதம்பரக் கல்லூரியின் மைந்தனும் சிறந்த விளையாட்டு வீரருமாகிய அமரர் இ.துரைலிங்கம் அவர்கள் எமது கல்லூரிக்கு பல வழிகளிலும் ஆற்றிய சேவைகளை சிறப்பாக கல்லூரியின் விளையாட்டுத் துறைக்கும் குறிப்பாக இப்பிரதேசத்தின் விளையாட்டுத்துறை வளர்ச்சிக்கும் அவர் துடிப்புடன் முன்னின்று ஆற்றிய பணிகளை அவரின் அந்தியேட்டி நிகழ்வாகிய இன்று நாம் நினைவு கூர்ந்து அஞ்சலி செய்கிறோம்.

(43509) (21.11.19)

சிதம்பரக் கல்லூரி சமூகம் சார்பாக
பழைய மாணவர் சங்கம்,
சிதம்பரக் கல்லூரி, வல்வெட்டித்துறை


# Panasonic

ideas for life

## நீர் இறைக்கும் இயந்திரம்

விசேஷ அம்சங்கள்

- சக்திவாய்ந்ததும், பாவனை கூடியதும்
- சத்தம் குறைந்ததும், சக்தி சேமிப்பும்
- வேகம் கூடியது
- பாவனைக்கு இலகுவானது
- வெப்பத்தை தாங்கக்கூடியது



*Model GP-200JA

| | |
|---|---|
| இயந்திரவலு | 200W |
| வெளிப்பாய்ச்சல் வலு | 45 liter/min (Max) |
| உயர வலு | 35 meters (Max) |

*Model GP-125JB

| | |
|---|---|
| இயந்திரவலு | 125W |
| வெளிப்பாய்ச்சல் வலு | 30 liter/min (Max) |
| உயர வலு | 30 meters (Max) |

*Model A-200JAE (Auto pressure pump)

| | |
|---|---|
| இயந்திரவலு | 200W |
| அதிகபட்ச வெளிப்பாய்ச்சல் வலு | Max 45 L/min |
| உயர வலு | Ht12m 29 L/min |
| அழுத்த ஆளியுடன் | Max 19 meter |
| அழுத்த ஆளிஇன்றி | Max 35 meters |
| | ON 1.1kgf/cm2 |
| | OFF 1.8 kgf/cm2 |

ஏகவிநியோகஸ்தர்கள்

CAPRICORN®

- ஒரு வருட உத்தரவாதம் (தயாரிப்பாளர் குறைபாட்டிற்கு மாத்திரம்)
- உத்தரவாதப் பத்திரத்தை பெற்றுக் கொள்ளவும்

**கப்ரிகோன் என்ரபிரைசஸ் பிரைவேட் லிமிட்டட்**

காட்சி அறை அலுவலகம்:
வெள்ளவத்தை காட்சி அறை : 298 A & B காலி வீதி வெள்ளவத்தை தொலைபேசி: 2582154, 2360919
புறக்கோட்டை காட்சி அறை : 59, மெலிபன் வீதி கொழும்பு 11 தொலைபேசி: 4737443
காலி காட்சி அறை : 04 வாட் வீதி காலி தொலைபேசி: 091-223...
தலைமை அலுவலகம் 47 டெம்பிளர்ஸ் வீதி கல்கிசை தொலைபேசி: 2735584, 2714631
பெக்ஸ் : 2735586 மின் அஞ்சல் : caprico1@sltnet.lk

நாடளாவிய ரீதியிலான விநியோகம் -


ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி நிலையம்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
கலைப்பீடம்

## பத்திரிகையியல் டிப்ளோமா (முழுநேரக்) கற்கை நெறிக்கான அனுமதி - 2006

2004ஆம், 2005ஆம் ஆண்டுகளில் க.பொ.த. (உயர்தரத்) தேர்வில் சித்தியடைந்ததுடன் பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிக்கும் தகுதி பெற்றோரிடமிருந்து ஓராண்டு முழுநேரப் பத்திரிகையியல் டிப்ளோமாக் கற்கைநெறி அனுமதிக்கு விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படவுள்ளன.

அனுமதிக்கான தெரிவு முறை: எழுத்துத் தேர்வும் (எழுத்து ஆற்றல், அறிக்கையிடும் திறன், மொழியாற்றல், சமூக அறிவு) நேர்முகத் தேர்வும்.

கட்டணங்கள்:

| | |
|---|---|
| கற்கை நெறிக்கட்டணம் | ரூபா 20,000.00 |
| பதிவுக் கட்டணம் | ரூபா 750.00 |
| நூலக வைப்புப் பணம் (மீளளிக்கத்தக்கது) | ரூபா 750.00 |
| நூலகப் பயன்பாடு | ரூபா 1000.00 |
| மொத்தம் | ரூபா 22,000.00 |

விண்ணப்பப் படிவங்கள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கலைப்பீடாதிபதி அலுவலகத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் காசாளர் கருமபீடத்தில் ரூபா 100/- செலுத்திப் பெற்ற பற்றுச்சீட்டினைச் சமர்ப்பித்துப் பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்பப் படிவங்கள் பின்வரும் முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும்: முதுநிலை உதவிப் பதிவாளர், கலைப்பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம், யாழ்ப்பாணம்.

**விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசி திகதி: 17.12.2005.**

விண்ணப்பதாரிகள் எல்லோரும் 18.12.2005 காலை 9.30 மணிக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இராமநாதன் மண்டபத்தில் நடைபெறும் எழுத்துத் தேர்வுக்குத் தோற்றவேண்டும்.

(சி/46457)(32-11-19-21)

**பதிவாளர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரச வம்சச் சிந்தனையும் மனப்பாங்கும் கொண்டவர்களே மகிந்தவும் ரணிலும்



மு.திருநாவுக்கரசு

* இலங்கை அரசியலானது உள்நாட்டு, வெளிநாட்டு ரீதியில் இனப்பிரச்சினையின் மீது மையங்கொண்டு செயற்படுகிறது. அதன் அர்த்தம் இனப்பிரச்சினை தான் அரசியற் பிரச்சினை என்பதல்ல. மாறாக இலங்கையின் உள்நாட்டு, வெளிநாட்டு ரீதியிலான அனைத்துப் பிரச்சினைகளும் இனப்பிரச்சினை மீது திசை திருப்பப்பட்டு, இலங்கை அரசியலின் அனைத்துச் சுமைகளும் தமிழ்பேசும் மக்களின் முதுகில் ஏற்றப்பட்டுவிட்டன.

* அரசியல் ஆதிக்கம் குடும்ப ஆதிக்கத்திற்கூடாக இன ஆதிக்கத்தில் மையங்கொள்வதால், அரசியல் ஆதிக்கத்துடன் தொடர்புறும் அனைத்து உள்நாட்டு, வெளிநாட்டுச் சக்திகளும் இன ஆதிக்கத்திற்குள் நிலையெடுத்து விடுகின்றன. ஆதலால் இனப்பிரச்சினை தான் இப்போது எல்லாமாகி விடுகின்றது.

இவ்வாறு வித்தியாசமான கோணங்களில் இலங்கை அரசியல் பொறி முறையைப் பார்க்கின்றது ''கொழும்பு 2007'' என்ற நூல்.

சிறந்த அரசறிவியலாளரும், பிரபல அரசியல் ஆய்வாளருமான ''திரு மாஸ்டர்'' என்று ஆய்வாளர்களாலும், வாசகர்களாலும், மாணவர்களாலும் அறியப்பட்ட மு.திருநாவுக்கரசு இந்த நூலின் ஆசிரியராவார்.

இலங்கையின் புதிய ஜனாதிபதித் தேர்தல் நடைபெறுவதற்கு முன்னர் எழுதப்பட்டது இந்த நூல். சமாதானத்துக்கான யுத்தமா? அல்லது யுத்தத்திற்கான ''சமாதானமா'' என்ற பிரதான தலைப்பில் பல விடயங்கள் நூலில் அலசி ஆராயப்பட்டுள்ளன.

நூலின் உள்ளடக்கம் உதயனின் ஞாயிறு பதிப்பில் தொடர் சிறப்புக் கட்டுரையாக வெளியிடப்படுகிறது.

## சமாதானத்துக்கான யுத்தமா? அல்லது யுத்தத்திற்கான சமாதானமா?

தொடர் சிறப்புக் கட்டுரை 1

**''சமாதானத்துக்கான''** யுத்தமா? அல்லது யுத்தத்திற்கான ''சமாதானமா''?

தீவுக்குள்ள தெரிவு இந்த இரண்டில் ஏதோ ஒன்றுதான்.

''சமாதானத்திற்கான'' யுத்தம் அல்லது யுத்தத்திற்கான ''சமாதானம்'' இதுதான் இலங்கை அரசியலின் சாராம்சம். இதில் யுத்தமும் சமாதானமும் ஒரே விடயத்தைப் பற்றித்தான் கதைக்கின்றன. அது யுத்தத்தைப் பற்றியதுதான். ஆனால், ஒரு சிறு வித்தியாசம் உண்டு. அதாவது ''யுத்தம்'' யுத்தத்திற்கான தயார் நிலையைக் குறிக்கின்றது. ''சமாதானம்'' யுத்தத்திற்கான தயார்ப்படுத்தலைக் குறிக்கின்றது. ஆதலால் இலங்கையின் அரசியல் அட்டவணையில் யுத்தமென்பது நிச்சயம்; மற்றெல்லாம் பொய்யும் புழுகும் புரட்டும்தான். இந்தவகையில் சமாதானத்திற்கான பேச்சென்பது யுத்தத்திற்கான நாளை நிர்ணயிப்பதற்கான பேச்சாய் அமைகின்றது. யுத்தம் பற்றிய குரல் யுத்தத்திற்கான நாளை கொண்டு வருவதற்குரிய பேச்சாய் அமைகின்றது.

''பயங்கரவாதத்திற்கு'' எதிரான யுத்தத்தில் ஈராக் ஒரு மையக்களமாக விளங்குகின்றது.

'கொம்யூனிச சித்தாந்தத்திற்கு எதிரான யுத்தத்தில் வெற்றிபெற்றோம். அதேபோல இப்போது இஸ்லாமியத் தீவிரவாதம் மீண்டும் ஒரு சோதனையாய் அமைந்துள்ளது. இவ்வாறு அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ. புஷ் கூறியுள்ளமையானது சர்வதேச அரசியல் போக்கின் சாராம்சத்தை ஒளிவு மறைவின்றி விளக்கி நிற்கின்றது. இஸ்லாமிய தீவிரவாதம் தலையெடுக்கும் யுத்தபூமியாக ஈராக், ஈரான், ஆப்கானிஸ்தான், காஷ்மீர், பாலஸ்தீனம், அல்ஜீரியா போன்றவற்றை புஷ் தனது மேற்படி பேச்சின்போது பட்டியலிட்டிருந்தார்.





வெள்ளைமாளிகை தலைமை தாங்கும் முதலாவது யுத்தம் ''சிவப்பு'' ஆபத்து எனப்படும் கொம்யூனிசத்திற்கு எதிரான யுத்தமென்றும் அதன் இரண்டாவது யுத்தம் ''பச்சை ஆபத்து'' எனப்படும் இஸ்லாத்திற்கு எதிரான யுத்தமென்றும் அதன் மூன்றாவது யுத்தம் மஞ்சள் ஆபத்து எனப்படும் சீனா, ஜப்பான், கொரியா போன்ற மஞ்சளினத்திற்கு எதிரான யுத்தமென்றும் அரசியல் வரலாற்று ஆய்வாளர்களால் மிகவும் முன்கூட்டியே கூறப்பட்டிருந்த கருத்தை அதற்குத் தலைமைதாங்கும் வெள்ளை மாளிகை தற்போது புஷ்ஷின் பேச்சின் மூலம் மிகவும் வெளிப்படையாய் ஒப்புக்கொண்டுள்ளது.

இதன்படி பார்க்கையில் இலங்கைத்தீவின் வரலாறு இரு யுத்தங்களுக்கிடையே நகர்கின்றது. ஒன்று மேற்படி உலகம் தழுவிய யுத்தம், மற்றையது இலங்கைத் தீவு தழுவிய யுத்தம். இத்தகைய இரண்டிற்கும் இடையிலான நகர்வின் சந்திப்பு மையம் எதுவோ அதுவே தீவின் அரசியல் நிர்ணயமாய், அரசியற் தலைவிதியாய் அமையும். சர்வதேச அரசியலும் உள்நாட்டு அரசியலும் ஒன்றுடன் ஒன்று தொடர்புற்று பின்னிப்பிணைக்கப்பட்டுள்ளன என்ற தளத்திலிருந்துதான் எந்தவோர் அரசியலையும் இன்று ஆராயமுடியும்.

இனப்பிரச்சினை என்ற ஒன்று அதனளவில் உண்டு. ஆனால், இலங்கையின் அனைத்து அரசியற், சமூக, பொருளாதார, பதவி வேட்டைப் பிரச்சினைகளும் இனப்பிரச்சினையின் மீது மையங்கொண்டு இனப்பிரச்சினையை அதன் அளவைவிடவும் பெரிதாக விகாரப்படுத்திவிட்டன. இயற்கையின் அனர்த்தத்தாலான சுனாமிப் பிரச்சினைகூட அதுவும் மிகவும் அடிப்படையிலும் அடிப்படையான அந்த மனிதாபிமானப் பிரச்சினை கூட இலங்கையில் இனவடிவம் பெற்று ஓர் இனப்பிரச்சினை என்ற முழுநீள பரிமாணத்தைக் கொண்டுள்ளது. ஆதலால் இனப்பிரச்சினையைப் பற்றி விளங்கவேண்டுமென்றால் இலங்கையின் அனைத்துப் பிரச்சினைகளையும் விளங்கிக் கொள்ளவேண்டுமென்றாகிறது. அப்படியாயின் இலங்கையின் எந்தொரு பிரச்சினைக்கும் தீர்வுகாணவேண்டுமென்றால் முதலில் இனப்பிரச்சினைக்கே தீர்வுகாணவேண்டுமென்றாகிறது.

### சகல முரண்பாடுகளும் இனப் பிரச்சினையாக உருவேற்றப்படுகின்றன

அரைநூற்றாண்டிற்கும் மேலான இலங்கைத் தீவின் அனைத்து அரசியல், பொருளாதார, சமூக முரண்பாடுகளும் தற்போது இனவிவகாரத்தில் மையங்கொண்டுள்ளன. இதன் அர்த்தம் என்னவெனில் அவரவர் நலன்சார்ந்த வேறுபட்ட பிரச்சினைகளெல்லாம் இனப்பிரச்சினையாய் விகாரம் பெற்றுள்ளன என்பதுதான். அதாவது பொருளாதாரப் பிரச்சினைகளை, குடும்ப ஆதிக்கப் போட்டிகளை, பதவி ஆதிக்க அவாக்களை, உலகப் பொருளாதார அமுக்கங்களை, கல்வி - கலாசாரப் பிரச்சினைகளை, தத்தம் இயலாமைகளை எல்லாம் இனப்பிரச்சினையாய் உருவமைத்து உருவேற்றி விடுகின்றனர்.

## ஜே.ஆர். - பண்டா வாரிசுகள் 2 அணிகளாகக் கட்சி கட்டினர்

இதனால், தீவின் அனைத்துப் பிரச்சினைகளும் தமிழ்பேசும் மக்களின் தலையிலேறி நின்று உருவாடுகின்றன. தமிழ் பேசும் மக்களின் பிரச்சினை தனித்து இனப்பிரச்சினையாக மட்டுமன்றி அதற்கு வெளியேயான பல்வேறு பிரச்சினைகளினதும் வெளிப்பாடாய் உள்ளது. இந்த உண்மையைப் புரிந்துகொள்ளும்போதுதான் தமிழ்பேசும் மக்களின் மீதான ஒடுக்குமுறையின் பல்பரிமாணங்களும் சரிவரத்தெரியவரும்.

காலனித்துவ அரசியற் பொருளாதார தளையிலிருந்தும், நிலமானிய சமூகப் பொருளாதாரத் தளையிலிருந்தும் இலங்கைத்தீவை மீட்பதற்குப் பதிலாக மேற்படி காலனித்துவ, நிலமானிய சமூகப் பிரச்சினைகளை இனப்பிரச்சினையாக உருத்திரித்து விட்டதன் வரலாறே கடந்த அரைநூற்றாண்டுக்கும் மேலான இலங்கைத்தீவின் வரலாறாகும். ஆதலால், இனவிவகாரத்தைப் பற்றிப் பேசாமல் இலங்கையின் அரசியலைப் பற்றிப்பேசமுடியாது. இலங்கைத் தீவின் அனைத்து அரசியற், சமூக, பொருளாதாரப் பிரச்சினைகளும் இனப்பிரச்சினையின்மீது தளமிடப்பட்டு அதன்மீது மையங்கொண்டுள்ளன. தத்தமது வர்க்க நலன், கட்சிநலன், குடும்பநலன், பதவிநலன் போன்ற இன்னோரன்ன நலன்களையெல்லாம் ஈட்டுவதற்கு இனவிவகாரத்தை ஓர் ஆயுதமாக்கிவிட்டனர். குறிப்பாக கடந்த அரைநூற்றாண்டிற்கும் மேலான அரசியலில் குடும்ப ஆதிக்கப்போட்டி இனப்பிரச்சினையாக வடிவமைக்கப்பட்டுவிட்டது. இதில் ஜே.வி.பி. ஒரு புதிய அத்தியாயம். ஆதலால் இனப்பிரச்சினைகளையும் ஏனைய அனைத்து அரசியற் பிரச்சினைகளையும் விளங்குவதற்கு குடும்ப ஆதிக்கப் போட்டியைப் பற்றியும் பதவி ஆதிக்கப்போட்டியைப் பற்றியும் விளங்க வேண்டியுள்ளது.

கொழும்பு அரசியலை குடும்ப அரசியலில் இருந்து பிரித்துப்பார்க்க முடியாதுள்ளது. அது மன்னர் கால வம்சக் குணாம்சங்களைக் கொண்டுள்ளது. தற்போது நடைமுறையிலிருக்கும் ஜே.ஆர். யாப்பு உண்மையில் நவீன முலாம் பூசப்பட்ட ஒரு மன்னராட்சி முறை யாப்பாகும். மன்னராட்சிக் குணாம்சம்கொண்ட இந்த யாப்புக்குள் குடும்ப, வம்ச ஆதிக்கங்கள் நிலையெடுத்து உயிர்வாழமுடிகின்றன. குடும்பப் போட்டி, குடும்ப முரண்பாடு, குடும்ப சமரசம் என்பன அவ்வப்போதைய தேவைக்கேற்ற சித்தாந்த வடிவங்களைப் பெற்று தீவின் தலைவிதியை நிர்ணயித்துச் செல்கின்றன. இதனைப் பெருவெட்டான சித்தாந்த அடிப்படையில் பார்க்குமிடத்து இது ஒருபுறம் நில உடைமை எஜமானியப் போக்கிற்கும் மறுபுறம் தரகு முதலாளித்துவப் போக்கிற்கும் இடையேயான குடும்பங்களின் தகராறாகத் தோன்றுகின்றது. அடிப்படையில் சேனநாயக்க - பண்டாரநாயக்க குடும்பங்களுக்கிடையேயான ஆதிக்கப் போட்டித் தகராறானது மேற்படி இரு வர்க்கங்களையும் மையங்கொண்டதாய் அமைந்துள்ளது. இத்தகைய அடித்தளத்தில் சேனநாயக்க தலைமையிலான குடும்பக்கூட்டுக்களும், பண்டார நாயக்காதலைமையிலான குடும்பக்கூட்டுக்களுமென குடும்ப ஆதிக்க கூட்டுக்களும் சமரசங்களும் வியாபித்து வளர்ந்தன.

***

அரசியலை அதிகம் வெளிப்பக்கமாக அன்றி அதன் உட்பக்கமாகப் பார்க்கவேண்டும். தோற்றத்தில் ஒன்றாக இருப்பது உள்ளடக்கத்தில் இன்னொன்றாக இருக்கமுடியும். ஒன்று இன்னொன்றாக வெளிப்படும் அல்லது ஒரு பிரச்சினை வேறொரு பிரச்சினையில் பிரதிபலிக்கும்.

சிங்களத் தலைவர்கள் இனப்பிரச்சினையைத் தீர்வுகாணப்படவேண்டிய ஒரு பிரச்சினையாய் கருதவில்லை. மாறாக தமது குடும்ப மற்றும் அரசியல் ஆதிக்க நலன்களை ஈட்டுவதற்கேற்ற ஓர் ஏதுவாகவே இனப்பிரச்சினையைக் கையாள்கின்றனர். ''பூனைக்கு விளையாட்டு சுண்டெலிக்கு சீவன் போகுது'' என்ற மாதிரியே இதன்நிலை. இலங்கையில் இன்று அரசியல் ஆதிக்கத்திலிருக்கும் குடும்பங்கள் சிங்கள மன்னராட்சிமுறையின் தொடர்ச்சியாக உள்ளன. அவர்களது அரசியற் சிந்தனைப்போக்கு மன்னராட்சி முறையின் நீட்சியாக உள்ளது.

பண்டாரநாயக்க குடும்பத்தின் தலைமையின் கீழ் ரதுல குடும்பத்து சிறிமாவோ, கொப்பேகடுவ, ரத்வத்த குடும்பங்களும் ராஜபக்ஷ குடும்பங்களும் ஓரணியாயின. சேனநாயக்க குடும்பத்தின் தலைமையின் கீழ் கொத்தலாவல, ஜெயவர்த்தன, விஜயவர்த்தன குடும்பங்கள் ஓரணியாயின. ஜே.ஆர்.ஜயவர்த்தன தாய்வழியால் ருடுகல (Tudugala family) குடும்பத்தைச் சேர்ந்தவர். மன்னர் பரம்பரைத் தொடர்பு கொண்ட இக்குடும்பத்தவர்கள் பிற்காலத்தில் மன்னனின் தளபதிகளாக இருந்துள்ளனர். அப்படித் தளபதிகளாக இருந்தவர்களுள் ஒருவர் அரண்மனைச் சதியின் பெயரால் சிறைக்கோ அன்றி சிரச்சேதத்திற்கோ உள்ளாகியுள்ளார். இன்னொரு தளபதி நாடுகடத்தப்பட்டார் எனத் தகவல்கள் உள்ளன. அதன் தாய்வழி வந்த ஜே.ஆர். குடும்பத்தின் ஓர் உறவினர்தான் திரு.ரணில் விக்கிரமசிங்க. இவ்வாறே திரு.மகிந்த ராஜபக்ஷவும் அரசவம்சத் தொடர்பு கொண்டவர். இவர்களிடம் மேற்படி அரசவம்ச சிந்தனைகளும் மனப்பாங்கும் உண்டு.

### ஒரே அணிசேர்ந்த குடும்பங்களின் வாரிசுகள் இரு அணிகளாகக் கட்சி கட்டினர்

இந்தக் குடும்ப வாரிசுகள் இரு அணிகளாகக் கட்சி கட்டியுள்ளனர். இவை இரண்டும் பல குடும்பங்களைக் கொண்ட தனித்தனி அணிகளாகும். அணிகளுக்கிடையேயான குடும்ப மோதல் அல்லது அணிக்குள்ளான மோதலின் பொருட்டு அணிகடந்த குடும்ப உறவென இக்குடும்ப ஆதிக்கப் போட்டிகள் உள்ளன. இவ்வாறு இக்குடும்பங்களுக்கிடையே ஏற்படுகின்ற [illegible] குளிர்கால கூதல்கால, தட்ப, வெப்ப, கூதல், குளிர், [illegible]க்கங்களெல்லாம் இலங்கைத் தீவின் அரசியற் பிரச்சினைகளாகவும் இனப்பிரச்சினைகளாகவும் அவ்வப்போது வெளிப்பட்டு விடுகின்றன.

மேற்படி சிங்களக் குடும்ப ஆதிக்க சக்திகள் தத்தமது நலன்கருதி அவ்வப்போது காலனித்துவ சக்திகளுடனோ, பிராந்திய சக்திகளுடனோ அல்லது எத்தகைய அந்நிய சக்திகளுடனோ கூட்டுச் சேர்ந்து விடுகின்றன. அப்படிக் கூட்டுச் சேர்வதற்கு இனப்பிரச்சினை ஒரு கருவியாக்க முடியுமிடத்து அவ்வாறு அதனைச் செய்துவிடுகின்றனர். இந்தவகையில் அவர்களது குடும்ப அரசியற் தேவையானது இனப்பிரச்சினையாகவும் வெளிநாட்டுப் பிரச்சினையாகவும் மாற்றிவிடுகின்றது.

காலனித்துவ ஆட்சியாளராகிய பிரித்தானிய எஜமானர் தமது ஆதிக்க நலன்கருதி காலனித்துவ அடிமை நாடுகளின் சுதேசிகளிடம் காணப்பட்ட இன, மத, மொழி, சாதி, குடும்ப, வம்ச பேதங்களைத் தமது தேவைக்கேற்ப பயன்படுத்தியுள்ளனர். தமது அரசியல், பொருளாதார நலன்களுக்குப் பாதகமான சமூகத் தடைகளை உடைத்தனராயினும், தமக்கு அனுகூலமான சமூக வரம்புகளைப் பேணிப் பயன்படுத்தினர். தமக்கு சேவகம் செய்யக்கூடியவர்களான சுதேசிகள் வர்க்கத்தை பட்டங்கள், பதவிகள் வழங்குவதன் மூலம் உருவாக்கி வளர்த்தனர். உதாரணமாக பிரித்தானியரின் 'sir' பட்டமும் இதிலொன்று. பண்டாரநாயக்க குடும்பம் பற்றி பிரட்மன் வீரக்கோன் தனது நூல் ஒன்றில் கூறுகையில் இலங்கையில் இது தொடர்பான பிரித்தானியரின் கொள்கை பற்றியும் 'sir' போன்ற பட்டங்கள் வழங்கப்பட்டமை பற்றியும் குறிப்பிட்டுள்ளார்.

மேற்படி காலனித்துவம் மட்டுமன்றி எந்தவொரு அந்நிய சக்தியும் குடும்ப ஆதிக்கப் போட்டியை மட்டுமன்றி தனது நலனுக்குச் சாதகமாய் பயன்படுத்தக் கூடிய எந்தவொரு உள்நாட்டுப் பிரச்சினையையும் பயன்படுத்தும் என்பதிற் சந்தேகமில்லை.

இந்தவகையில் இலங்கையின் அரசியலையும், இனப்பிரச்சினையையும் புரிந்துகொள்ள சிங்களக் குடும்ப ஆதிக்கம் பற்றிய ஒரு வரைபடம் அவசியம். இதில் பண்டாரநாயக்க, செனநாயக்க என்ற இரு குடும்ப முகாம்களை மையமாகக் கொண்டு நோக்குவோம்.





எஸ்.டபிள்யூ. ஆர்.டி. பண்டாரநாயக்காவின் தந்தையான டொன் சொலமன் டயஸ் பண்டாரநாயக்க (Don Solomon Dias Bandaranaike) பிரித்தானியரால் 'sir' பட்டம் வழங்கப்பட்ட ஒரு மகா முதலியார் ஆவார். இவர் ஒரு பரம்பரை நிலச்சுவாந்தன். மன்னர் பரம்பரையின் பணியாளர்களில் ஒருவர். சிங்கள மன்னரின் பிரதானிக் குடும்பம் இங்கு பிரித்தானிய மன்னரின் விசுவாசியானது. பிரித்தானிய ஆட்சியாளர் மீதான தனது விசுவாசத்தை வெளிப்படுத்தும் வகையில் அப்போது இலங்கையின் ஆளுநராய் (Governor) இருந்த ஜோசப் வெஸ்ட் றிச்வே (Governor Sir Joseph West Ridgeway) என்பவரை தனது மகன் பண்டாரநாயக்காவிற்கு தொட்டப்பா ஆக்கியதன் நீட்டமாய் பண்டாரநாயக்காவின் பெயருடன் West Ridgeway இணைக்கப்பட்டது. அதாவது Solomon West Ridgeway Dias Bandaranaike - S.W.R.D Bandaranaike என நீண்டது.

### இறக்கும் வரை பிரபுவாகவே வாழ்ந்த பண்டாரநாயக்கா

இந்த வகையில் பண்டாரநாயக்கா குடும்பம் ஒருபுறம் பெரும் நிலச்சுவாந்தர் குடும்பமாகவும், மறுபுறம் பிரித்தானிய காலனித்துவத்தால் ஆசீர்வதிக்கப்பட்ட குடும்பமாகவும் அமைந்தது. S.W.R.D பண்டாரநாயக்காவிற்கு அவரது கால் படாத நிலபுல தோட்டத்திலிருந்தும், அவரது கண்படாத குடியானவர்களது உழைப்பிலிருந்தும் சொத்துக்களும் வருமானங்களும் குவிந்தன. S.W.R.D பண்டாரநாயக்கா என்னதான் கதைத்திருந்தாலும் அவர் தனது வாழ்முறையில் இறக்கும் வரை பிரபுவாகவே இருந்தார். இன்று வரை திருமதி சந்திரிகா பண்டாரநாயக்காவும்,

(15 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


யுத்தத்தின் வெடி ஓசைகளும் குண்டுத்தாக்குதல்களும் மனிதனையும் உலகினையும் பயத்தில் ஆழ்த்திய காலங்கள் இன்று குறைந்து வருகின்றன. இயற்கையும், இயற்கையின் கோரத் தாண்டவங்களும் இன்று உலகை ஆட்டிவைக்கின்றன. மனிதனால் மனிதன் கொல்லப்பட்ட காலம் மாறி இயற்கையே தன் குழந்தைகளை பலியெடுக்கும் நிலைமை தலைதூக்கியுள்ளது. இத்தகைய இயற்கையின் சீற்றத்தினால் உறங்கியுள்ள எரிமலைகளும் உயிர்ப்புப் பெறுகின்றன. இதன் காரணமாக எரிமலைகள் மீளுயிர்ப்பு பெற்று வெடிக்கின்றன. பலியெடுக்கின்றன. அச்சமயங்களிலும் மனிதன் மரணவலி உணர்கின்றான்.

இந்தக் கட்டுரைத் தொடரின் முதல் இரு பகுதிகள் ஏற்கனவே இரு ஞாயிற்றுக் கிழமைகளில் உதயனில் வெளியாகிவிட்டன. இது மூன்றாவது பாகம் ஏற்கனவே வந்தவற்றில் நிலத்தின் கீழான தட்டுக்களின் நகர்வுகள் பற்றியும் அதனால் ஏற்படும் ஆழிப்பேரலைகள், நில நடுக்கம் என்பன பற்றியும் மலைகளின் உருவாக்கம் குறித்தும் ஆராயப்பட்டது. இந்த பாகத்தில் எரிமலைகளின் வெடிப்புப் பற்றி ஆராயப்படுகிறது.

# மீளுயிர்ப்புப் எரிம


நிலத்தட்டு எல்லைகட்கு அண்மையாக இருக்கும் நாடுகள், நிலநடுக்கம் ஏற்படும் சாத்தியக்கூறு உயர்வாகவுள்ள நாடுகளாகக் காணப்படுகின்றன. உதாரணமாக யப்பானிய தீவுகள், பிலிப்பைன்ஸ், சுமாத்திரா போன்றவற்றை குறிப்பிடலாம்.

இலங்கையானது இந்திய-அவுஸ்திரேலியன் நிலத்தட்டு எல்லைகளில் இருந்து வெகுதொலைவில் அமைந்துள்ளது. இதனால் எம்மில் பலர் இலங்கையில் நிலநடுக்கம் ஏற்படுவதற்கான வாய்ப்பில்லை எனக் கருதுகின்றனர். எனினும் தற்கால புவியியல் ஆய்வுகளின்படி இந்திய-அவுஸ்திரேலியன் நிலத்தட்டானது பிளவுறுவதாக நம்பப்படுகிறது. இவ்வாறு பிளவுறும் பகுதி 27 ஆவது படத்தில் காட்டப்பட்டுள்ளது.



படம் 27

இப்பிளவானது இலங்கையின் தென்மேற்கு கரையிலிருந்து 300 மஅ தொலைவில் அமையக் காணப்படுகின்றது. இது 28 ஆவது படத்தில் காட்டப்பட்டுள்ளது.


படம் 28

அளவில் மிகப்பெரியதான இந்திய-அவுஸ்திரேலியன் நிலத்தட்டானது ஆசிய நிலத்தட்டுக்களுடன் மோதும்போது உருவாகும் உயர் விகாரத்தினாலேயே இத்தட்டு பிளவடைவதாகக் கருதப்படுகின்றது. எனவே இலங்கையில் நிலநடுக்கம் ஏற்படக்கூடிய சாத்தியக்கூறுகளை இலகுவில் நிராகரித்துவிட முடியாது.

### எரிமலைகள் (Volcanoes)

உருகிய புவிப்பாறையையும் புகையையும் துகள்களையும் வாரி இறைத்து வெளித்தள்ளி அனல் கக்கும் எரிமலையே இயற்கை அனர்த்தங்களுள் காட்சிக்கு மிகவும் பயங்கரமானது எனக் கூறப்படுகின்றது.

அதன் அடக்கப்பட முடியாத அழிக்கும் தீ வலு இத்தாலி நாட்டின் பொம்பெய் (Pompeii)


படம் 29

நகர் முதல் ஜப்பான் நாடு வரை பல புராதன கலாசாரங்களில் செல்வாக்குச் செலுத்தியும் அவற்றை மாற்றியமைத்தும் உள்ளது.

உலக சனத்தொகையில் பத்து சதவீதமானோர் எரிமலை ஆபத்து வீச்சத்திற்குள் வசிப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது. சிமித்சோனியன் நிறுவனத்தின் (Smithsonian Institute) தகவற்படி இப்புவியில் 1511 'உயிர்ப்புள்ள' எரிமலைகள் உள்ளன. அத்துடன் செயலற்ற (உறங்குகின்ற - Dormant) நிலையிலுள்ள பல எரிமலைகள் எக்கணமும் மீளுயிர்ப்புப் (Recharge) பெறலாம் எனவும் அறியப்படுகிறது.

எரிமலையொன்று கோடிக்கணக்கான வருடங்களுக்கு உயிர்ப்புடன் இருக்கலாம். ஆனால் அடுத்தடுத்தவிரு கக்கல்களுக்கிடையே பல நூற்றாண்டு கால இடைவெளி இருக்கலாம்.

### புவி உள்வெப்பமும் (Earths Internal Energy) வெப்ப நீரூற்றுக்களும் (Hot Springs) வெந்நீர்த் தாரைகளும் (Geysers)

புவி, தனது உட்சக்தியை வெப்பமாக வெளிநோக்கிக் காலிக்கிறது. புவி மேற்பரப்பிலிருந்து உள்ளே செல்லச்செல்ல வெப்பம் அதிகரித்துக் காணப்படும். புவியின் உள்ளகத்தின் (Inner Core) வெப்பநிலை ஏறத்தாழ 4300°C எனவும் அமுக்கம் ஏறத்தாழ நாற்பது இலட்சம் வளிமண்டல அமுக்கம் எனவும் ஏற்கனவே குறிப்பிட்டிருந்தோம். புவிப் புறணி (Crust) யி ஒரு கி.மீ. க்கு 30°C எனும் சராசரி அளவில் வெப்பநிலை ஆழத்துடன் அதிகரிக்கக் காணப்படுகிறது. புவி மேற்பரப்பில் பாறைகள் அண்ணளவான சராசரி வெப்பநிலை 1250°C இல் உருகும். அவ்வாறாயின் புவியுட்பகுதியின் பெரும்பகுதி திரவநிலையிற் காணப்படவேண்டும். ஆனால் புவியுட்பகுதி திண்மமாகவே இருக்கிறது. இதற்கான காரணத்தை முதலில் விளங்கிக் கொள்வது நன்று.

ஒரு பொருளின் உருகுநிலை (Melting Point), கொதிநிலை (Boiling Point) ஆகியன அப்பொருளில் பிரயோகிக்கப்படும் அமுக்கத்தில் தங்கியிருக்கும். புவிமேற்பரப்பில் 100°C யில் கொதிக்கும் நீர் மலையுச்சியில் குறைந்தளவு வெப்பநிலையிலேயே கொதிக்கும். ஏனெனில் மலையுச்சியில் அமுக்கம் குறைவு. அது போன்றே வளிமண்டல அமுக்கத்தில் 0°C யில் உருகும் ஐஸ்கட்டியானது அமுக்கம் பிரயோகிக்கப்படும் போது 0°C யைவிடக் குறைந்த வெப்பநிலையிலேயே உருகத்தொடங்கிவிடும். ஆனால் ஐஸ் ஒரு விதிவிலக்கான பதார்த்தம். ஏனைய பதார்தங்களில் அமுக்கம் அதிகரிக்க அதிகரிக்க உருகுநிலையும் அதிகரிக்கும்.

புவியின் உட்பகுதி அதன் வெளியேயுள்ள பாறைகளினால் பெரும் அமுக்கத்திற்கு உட்படுத்தப்படுவதால், புவியின் உள், வெளி அகத்தின் பாறைகளின் உருகுநிலை மிக அதிகமாயிருக்கும். ஆகவேதான் புவியின் உள், வெளி அகங்கள் திண்மமாக இருக்கிறது. குறிப்பிட்ட ஆழங்களில் அவ்விடத்தின் அமுக்கத்திற்குரிய உருகுநிலையும் அவ்விடத்து வெப்பநிலையும் பொருத்தமாயமையும் போது பாறைகள் உருகும். மேல் நடுவுறை (Upper Mantle)யில் ஏறத்தாள 50 km க்கும் 250 kmக்குமிடையேயான ஆழப் பகுதியிலேயே வெப்பநிலையும் அமுக்கமும் பாறைகள் உருகக் கூடிய அளவினதாக அமைந்திருக்கிறது.

புவியினுள்ளே உருகிய நிலையிலுள்ள பாறைகள் மக்மா (Magma) எனப்படும். மழைப் பனி (Snow), மழை, நீரூற்றுக்கள், குளங்கள் ஆகியவற்றிலிருந்து நீரானது புவியீர்ப்பின் காரணமாக நில மேற்பரப்பின்


பேராசிரியர் இ.குமாரவடிவேல்
விஞ்ஞான பீடாதிபதி
(யாழ்.பல்கலைக்கழகம்)

கீழ் இழுக்கப்படுகிறது. இந்நீரானது வெடிப்புகள், குழிகள், பாறைகளிலுள்ள துவாரங்கள் போன்ற வெளிகளினூடாக மெதுவாக கீழ் நோக்கி நகரும். இவ்வாறு கீழ் நோக்கிய ஓட்டத்திலுள்ள நீரானது புவிமேற்பரப்பிற்கு சமீபமாகவுள்ள மக்மா தொகுதியை சந்திக்குமாயின், அது மக்மாவின் வெப்பத்தின் ஒரு பகுதியை உறிஞ்சிச் சூடாகி மேலெழும். 31 ஆம் படத்தில் அமெரிக்காவிலுள்ள மஞ்சட்கல் பூங்கா (Yellowstone Park) வில் வெந்நீர் மேலெழும் விதம் காட்டப்பட்டுள்ளது. அவ்விடம் ஏறத்தாழ 8500 அடி உயரத்தில் அமைந்திருப்பதால் நீர் 93°C வெப்பநிலையிலேயே கொதிக்கும்.

நீர் கொதித்து வெந்நீர் தாரையாகப் பீச்சியப்பதற்கு போதியளவு வெப்பம் தேவைப்படும். அமெரிக்காவிலுள்ள மஞ்சட்கல் பூங்கா (Yellowstone Park) இலுள்ள (32 வது படத்தில் காட்டப்பட்டுள்ள) மிகப்பெரிய பீச்சியடிக்கும் வெந் நீர்த்தாரைக்கு (Geyser) அதன் கீழ்ப்பகுதியிலிருந்து கிடைக்கும் வெப்ப வீதம் புவியின் மேல் நோக்கிய சராசரி வெப்பப் பாய்சசலை விட எண்ணூறு மடங்கு அதிகம்.

நியூசிலாந்து இரு பெரும் தீவுகளாலானது. வடதீவு வெந்நீரூற்றுகளுக்கும் பீச்சியடிக்கும் வெந்நீர்த்தாரைகளுக்கும் பிரசித்தமானது.

### எரிமலை எவ்வாறு கக்குகிறது?

பீச்சியடிக்கும் வெந்நீர்த்தாரைகள் போலவே, எரிமலைக் கக்கலும் புவியின் ஆழத்திலுள்ள வெப்பம் காரணமாகவே உருவாகிறது.

எரிமலைகள் என்பவை புவியின் புறணிப் பகுதியில் காணப்படும் துவாரங்கள். வப்ப நீரூற்றுக்களையும் (hot springs) பீச்சியக்கும் வெந் நீர்த்தாரைகளையும் (geysers) ாலவே எரிமலைகளும் புவி தனது உள்வெப்பதின் ஒரு பகுதியை விரைவாக வெளியேற்றும் ாதை கள். உருகிய வெப்பப் பாறைகள் மேலெழுந்த எரிமலைத் துவாரங்களினூடாக வெளித்தள்ளப்படும் நிகழ்வையே எரிமலைக்கக்கல் (volcanic eruption) என்கிறோம். 33 ஆம் படம் எரிமலைக் கக்கலொன்றைக் காட்டுகிறது.

எனவே எரிமலைகள் பூமியின் உள்ளே உருவாகும் அமுக்கத்தை வெளிவிடும் பாதுகாப்பு வால்வுகள் போன்று செயற்படுகின்றன.

திரவங்களின் அடர்த்தி திண்மங்களின் அடர்த்தியைவிடக் குறைவானது என்பதால், புவி உள் வெப்பம் காரணமாக திண்மப் பாறைகள் உருகித் திரவப் பாறைகளாக (அதாவது மக்மாவாக) ஆகும் போது இரண்டு விளைவுகள் ஏற்படும்: ஒன்று அதன கனவளவு அதிகரித்து மேலுள்ள பாறைகளில் வெடிப்பை ஏற்படுத்தும். இரண்டு இவ்வெடிப்புகளுடாக மக்மாவானது மேலுள்ள அழுத்தம் குறைந்த





பகுதிகளுக்கு மேலெழும். அவ்வாறு மேலே தள்ளிக்கொண்டு வரும்போது சுற்றவுள்ள பாறைகளையும் உருக்குவதால், மக்மாவினளவும் அதிகரிக்கும். மேலும் மேல்நோக்கி நகரும் மக்மா குறைந்த அழுத்தப் பகுதியை அடைவதால், மக்மாவின் பாய்ச்சல் தன்மை **(Fluidity)**யும் அதிகரிக்கும்.

மேலேழும் மக்மா தனக்கு மேலுள்ள பாறைப் படலங்களில் அமுக்கம் அதிகமாக காணப்படின் மட்டுமே, மேலெழுதலை நிறுத்தும். மக்மா மேலெழ முடியாதவிடத்து அது புவிமேற்பரப்பின் கீழ் 'மக்மா நிலவறை' (magma chamber) யில் ஒன்று சேரும். மக்மாவின் அளவு அதிகரிக்க நிலவறையின் அமுக்கம் அதிகரிக்கும். இவ்வமுக்கம் அதிகரிக்க ஒரு கட்டத்தில் புவிப் புறணி வழிவிடும். வழிவிடும்போது, மக்மாவானது புவிமேற் பரப்பிற்கு தள்ளப்பட்டு எரிமலை கக்கல் ஏற்படும்.

புவியினுள்ளே உள்ளபோது மக்மா (Magma) எனவழைக்கப்படும் உருகிய பாறைகள் புவிமேற்பரப்பிற்கு வெளியே தள்ளப்பட்டபின் லாவா (Lava) என அழைக்கப்படுகின்றது. உருகியநிலையில் லாவா ஏறத்தாழ 1200 °C வெப்பநிலையில் வெண் சூடாகவிருக்கும். வெளித்தள்ளப்பட்டலாவா புவி மேற்பரப்பில் குளிர்ந்து இறுக்கமடைகிறது.

உயர் அமுக்கம் காரணமாக மக்மாவிலுள்ள


படம் 30



படம் 31

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




வாயுக்கள் கரைசல் நிலையிலேயே இருக்குமா லால் ஆழத்திலுள்ள மக்மாவில் வாயுக்குமிழிகள் இருக்கமாட்டாது. ஆனால், மக்மா மேற்பரப்பை நோக்கி நகர நகர, அமுக்கம் தொடர்ச்சியாக குறைவதால் கரைசல் நிலையிலிருந்து வாயுக்கள் உருவாகி வாயுக் குமிழிகளும் உருவாகும். அமுக்கம் குறையக்குறைய குமிழிகள் விரிவடையும். இவ்வாறு பெருகி விரிவடையும் வாயுக் குமிழிகளும் மக்மாவை வெளித்தள்ள உதவுகின்றன.

**அமைதியான (Smooth) எரிமலைகளும் மூர்க்கமான (violent) எரிமலைகளும்**

சில எரிமலைகளிலிருந்து வரும் மக்மா ஒப்பீட்டளவில் அமைதியாக வெளியேறும். ஆனால் சில எரிமலைகளிலிருந்து வரும் மக்மா மூர்க்கத்தனமாக முன்னும் பின்னுமாக வெடித்து பல சதுர கி.மீ. பரப்பை அழித்து உயிர்ச் சேதத்தையும் ஏற்படுத்தும். இதற்கான காரணம் மூன்று விடயங்களுடன் தொடர்புபடுகிறது:

(அ) மக்மா ஆக்கப்படும் இரசாயன கனிப் பொருட்களின் சேர்க்கை

(ஆ) மக்மாவின் வெப்பநிலை, அதிலுள்ள நீரினளவு, அதிலுள்ள வாயுவினளவு, அதன் பாகுநிலை

(இ) புவிப்பாறைத்தட்டு (Tectonic Plates) களின் ஓரங்களின் சார்பாக எரிமலையின் புவியியல் இடநிலை (Geographic Position), அனுகூலமான இடங்களின் (Hot Spots) புவியியல் இடநிலை.

**மக்மாவின் இரசாயன கனிப்பொருள் சேர்க்கை**
(Mineral Composition of magmas):

இயற்கையாக 92 மூலகங்கள் (elements) உள்ளபோதிலும் புவியின் புறணியின் 98.03 சதவீதமானது ஒக்சிசன் (45.2%), சிலிக்கன் (27.20%), அலுமினியம் (8.00%), இரும்பு (5.80%), கல்சியம் (5.06%), மக்னீசியம் (2.77%), சோடியம் (2.32%), பொட்டாசியம் (1.68%) ஆகிய எட்டு மூலகங்களால் ஆக்கப்பட்டது.

அளவில் அடுத்து வருவன ரைற்ரேனியம்



படம் 32

.86%), ஐதரசன் (0.14%), பொஸ்பரஸ் (0.10%), மங்கனீஸ் (0.10%) ஆகிய நான்கும். ஏனைய தங்கம், வெள்ளி, செப்பு, காபன், சல்பர், தகரம் போன்ற இதர மூலகங்கள் எல்லாம் சேர்ந்து 0.77% மாத்திரமே. பெருமளவில் கிடைக்கும் எட்டு மூலகங்களில் ஒக்சிசன் மாத்திரமே எதிரேற்றத்தைக் காவுகிறது. ஏனையவையெல்லாம் நேரேற்றமுடையன. இதனால் ஒட்சிசன் இதர ஏழு மூலகங்களுடன் (மற்றும் ஏனைய மூலகங்களுடனும் கூட) இணைந்து ஒக்சைட்டுகளாகவே அமைந்திருக்கின்றன.

கண்டங்களின் புறணியிலும் சமுத்திரங்களின் புறணியிலும் உள்ள மூலகங்களின் நிறை விகிதம் வெவ்வேறாக அமைந்துள்ளது. இதைக் கீழ்கண்ட அட்டவணை 1 இல் காணலாம்.

| மூலக ஒக்சைட் | கண்டங்களின் புறணியில் நிறைவிகிதம் | சமுத்திர புறணியில் நிறைவிகிதம் |
|---|---|---|
| $SiO_2$ | 60.2 | 48.7 |
| $Al_2O_3$ | 15.2 | 16.5 |
| $Fe_2O_3$ | 2.5 | 2.3 |
| $FeO$ | 3.8 | 6.2 |
| $CaO$ | 5.5 | 12.3 |
| $MgO$ | 3.1 | 6.8 |
| $Na_2O$ | 3.0 | 2.6 |
| $K_2O$ | 2.9 | 0.4 |

அட்டவணை 1



படம் 33

ஒக்சைட்டுகளின் நிறை விகிதம் வெவ்வேறிடங்களில் மாறுபடுவதை மேற்கண்ட அட்டவணை நன்கு புலப்படுத்துகிறது. வெவ்வேறு விகிதச் சேர்க்கைகள் வெவ்வேறு குணவியல்புகளுடைய மக்மாவை தோற்றுவிக்கிறது.

அதிகளவில் காணப்படும் எட்டு மூலகங்கள் வெவ்வேறு திசைகோட்சேர்க்கைகளில் பிணைந்து (bonds in different orientations) நூற்றுக்கணக்கான வெவ்வேறு கனிப்பொருட்கள் உருவாகும்.

மூலகங்கள் இணைந்து கனிப்பொருட்கள் உருவாவது போல கனிப்பொருட்கள் இணைந்து பாறைகள் உருவாகும். கனிப்பொருட்களின் சேர்க்கையின் அடிப்படையில் மக்மாக்களை மூன்று வகையாகப் பிரிக்கலாம். அவையாவன பேசோல்ட் (basalt), ஆண் டெசைற் (Andesite), றியோலைட் (Rhyolite). இம்மூன்று வகை மக்மாக்களும் அவற்றின் மாறுபடும் வெப்ப நிலை, வாயு உள்ளடக்கம் (gas content), பாகுநிலை (viscosity) காரணமாக வெவ்வேறு விதமான நடத்தைகளை வெளிக்காட்டுகின்றன.

திரவமொன்றில் பாயக்கூடிய தன்மையின் அளவையே பாகுநிலை குறிக்கிறது. பாகுநிலை என்பது திரவப் பாய்ச்சலைக் கட்டுப்படுத்தும் உட்தடை (internal resistance) எனக் கூறலாம். பாகுநிலை குறைந்த பொருள் இலகுவாகப் பாயும். உதாரணமாக நீரின் பாகுநிலை தேங்காயெண்ணையின் பாகுநிலையை விடக் குறைவு. தேங்காயெண்ணையின் பாகுநிலை எஞ்சின் ஒயிலின் பாகுநிலையை விடக் குறைவு. கிறீசின் (Grease) பாகுநிலை எஞ்சின் ஒயிலின் பாகுநிலையை விட அதிகம்.

ஆகவே மக்மாவின் பாகுநிலை குறைவாக விருந்தால் அது அதிகளவில் பாய்பொருள் போல் செயற்படும். வெப்பம் அதிகரித்தால் திரவத்தின் பாகுநிலை குறையும். மக்மாவிலுள்ள சிலிக்கன் ஈரொக்சைட் ($SiO_2$) இன் அளவு அதிகரிக்க அதிகரிக்க, அதன் பாகுநிலை அதிகரிக்கும். மக்மாவில் கரைசல் நிலையிலுள்ள வாயுக்களும் அதன் பாயுந்தன்மையை அதிகரிக்கும். எந்த வகை மக்மாவிலும் வாயுக்கள் முக்கிய கூறாக அமையும். கரைந்துள்ள வாயுக்களில் நீர் தான் பெருமள விலிருக்கும். வெப்பநிலை ஏற்றம் மக்மாவில் உள்ள வாயுவின் கனவளவில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தும். வளிமண்டல அமுக்கத்தில் அறை வெப்பநிலையில் (25 - 30 °C) ஒரு கனசதம மீற்றர் கனவளவையுடைய நீர் 100 °C இல் 4500 கன சதமமீற்றராக விரிவடையும். இவ் விரிவு மேலுதைப்பை அதிகரிக்கும்.

கீழேயுள்ள அட்டவணை மூன்றுவகையான மக்மாக்களின் குணவியல்புகளைக் காட்டுகிறது. உயர் வெப்பநிலையும் குறைந்தளவு $SiO_2$ உம் உடைய பேசல்ரிக் மக்மாவின் பாகுநிலை குறைவானதால் அது சுலபமாக பாயக்கூடியது (உருகிய ஐஸ்கிறீம் போல). அதேசமயம் குறைந்த வெப்பநிலையும் உயர்ந்தளவு $SiO_2$ உம் உடைய றியோலிற்றிக் மக்மா சாதாரணமாக பாயவேமாட்டாது (கிறீஸ் போல).

**மூன்று வகை மக்மாக்களின் ஒப்பீடு**

மேற்கண்ட அட்டவணை 2 இல் புவி மேற்பரப்பை வந்தடையும் மக்மாவின் எண்பது வீதமானது பேசல்ரிக் வகை எனவும் மற்றைய ஒவ்வொரு வகையும் பத்து வீதமெனவும் காட்டுகிறது. பாகுநிலை குறைந்த பேசல்ரிக் மக்மா இலகுவாக புவிமேற்பரப்பை அடைகிறது. அதேசமயம் பாகுநிலை கூடிய 'சுறுசுறுப்பற்ற' றியோலிற் மக்மா புவிமேற்பரப்பின் கீழ் ஆழத்தில் சிக்கிக்கொண்டு குளிர்ந்து, திண்மமாகிச் கருங்கல் போன்ற பெரிய கனிப்பொருட் பளிங்குகளாக (Mineral Crystals) வளர்கின்றன.

பேசல்ற்றிக் எரிமலைகள் கக்கும் போது அவை உல்லாசமாக பொழுதுபோக்குபவர்களைக் கவரும் ஒரு அமைதியான நிகழ்வாக - மெய்சிலிர்க்க வைக்கும் காட்சியாக - அமையும்.

குறைந்த பாகுநிலை மக்மாவில் கரைந்துள்ள வாயுக்கள் சுலபமாக வெளியேறுவதனாலேயே இக்கக்கல் அமைதியானதாக அமைகிறது.


குறைந்த வெப்பநிலையும் கூடுதல் $SiO_2$ விகிதமும் கொண்ட றியோலிற்றிக் மக்மாவின் பாகுநிலை அதிகமாதலால், றியோலிற் மக்மா எரிமலைத் துவாரத்தினூடாக புவிமேற்பரப்பில் கசியும் போது மக்மாவினுள் உள்ள அமுக்கம் குறையும். அமுக்கம் குறையும் போது கரைந்துள்ள வாயுக்கள் கனவளவூல் விரிவடையும். பிசுபிசுப்பு தன்மை அதிகமான மக்மாவில் சிக்கிக் கொண்ட இவ்விரிவடைந்த வாயுக்கள் வெளியேறுவதற்கான ஒரேவழி வெடிப்பது தான். உறுமிக்கொண்டு பயங்கரமாக வெடித்துச் சிதறும் றியோலிரிக் மக்மா கக்குமிடங்களுக்கு சமீபமாக உள்ள பார்வையாளர்கள் மரணத்தின் பிடிக்குள் அநேகமாக அகப்படுவர். மக்மாவில் கரைந்துள்ள வாயுக்கள் எவ்வாறு வெளியேறும் என்பதுதான் எரிமலை விபத்துக்களோடு சம்பந்தப்பட்ட பெரிய பிரச்சனை. மக்மா எரிமலை வெடிப்புக்கான ஒரு சாதனம் மட்டுமே. எரிமலை வெடிப்பைச் செயற்படுத்தும் காரணகர்த்தாக்கள் வாயுக்கள் தான்.

| | பேசல்ற் | ஆண்டெசிற் | றியோலிற் |
|---|---|---|---|
| புவிமேற்பரப்பில் கனவளவு | 80% | 10% | 10% |
| சிலிக்கன் ஈரொட்சைட் அளவின் விகிதம் | 45-55% | 55-65% | 65-75% |
| | | அதிகரிப்பு → | |
| மக்மாவின் வெப்பநிலை | 1000-1200°C | 800-1000°C | 600-900°C |
| | | ← அதிகரிப்பு | |
| பாகுநிலை | குறைவு (உருகிய ஐஸ்கிறீம் போல) | | அதிகம் (பற்பசை போல) |
| | | அதிகரிப்பு → | |
| மக்மாவிலிருந்து வாயு வெளியேற்றம் | சுலபமானது | | கஷ்டமானது |
| | | கஷ்டம் அதிகரிப்பு → | |
| கக்கல் பாங்கு | அமைதியானது | | வெடிப்பு |
| | | வெடிக்கும் தன்மை அதிகரிப்பு → | |

அட்டவணை 2

**எரிமலைகள் காணப்படுமிடங்கள்**

இவ்வுலகில் எரிமலைகள் காணப்படும் இடங்களை 34 வது படம் விபரிக்கிறது. (அது பற்றிய விவரங்களை அடுத்தவாரம் பார்ப்போம்)



படம் 34

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தற்போதைய அரசியல் சூழலானது பல்வேறு அர்த்தங்களை அனுமானிக்கக்கூடியவாறான விடயத்தைக் கொண்டிருக்கிறது. ஊடகங்களின் எதிர்வு கூறலின்படி கடும்போக்காளரான ஜனாதிபதி அவரைச் சூழ இனவாத கட்சிகள். எனவே, சமாதானப் பேச்சுக்கான வாய்ப்பை விட யுத்தமொன்றுக்கே அதிக வாய்ப்பு எனக் நாடு என்று மகிந்த ராஜபக்ஷ தெரிவித்ததுடன், ஒற்றையாட்சிக்குள்ளேயே தீர்வு என அறிவித்திருந்தார்.

சுமார் 50 வருடங்களுக்கு மேலாக ஒற்றையாட்சியின் அடக்குமுறைக்கெதிராக போராடிய மக்களுக்கு மீண்டும் ஒற்றையாட்சிக்குள்ளேயே தீர்வு வழங்கப்படும் போர்நிறுத்த உடன்படிக்கையை திருத்தியமைப்பதற்கான பேச்சும் இடம்பெறுமென்று மகிந்த ராஜபக்ஷ வெளிநாட்டு இராஜதந்திரிகளுடனான சந்திப்பின் போது தெரிவித்துள்ளார்.

உண்மையில் விடுதலைப்புலிகள் ரணிலையோ மகிந்தவையோ நம்பவில்லை என்றும் பேச்சுக்கு

# இரு தரப்பினதும் சமாதான அழைப்பு



கருதப்பட்டது. அதை உறுதிப்படுத்துவது போல பிரதமராக கடும் போக்காளரான ரட்ணசிறி விக்கிரமநாயக்க தெரிவுசெய்யப்பட்டார்.

இவற்றுக்கெல்லாம் மேலாக ஒரு இனத்திற்கென்ற சுயநிர்ணய உரிமையோ தாயக கோட்பாடோ விசேடமாக இல்லை. இது எல்லா மக்களினதும் என்ற மகிந்த ராஜபக்ஷவின் கூற்றானது தமிழ் தரப்புகளை சினமடையச்செய்திருந்தது.

இவ்வாறான சூழலில் இவ்வருட மாவீரர் தின உரையில் தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன் மிகக் கடுமையான முடிவை அறிவிப்பார் என்றே பலரும் எதிர்பார்த்தனர். எனினும் அவர் புதிய ஜனாதிபதியுடன் சமாதான பேச்சுக்களில் ஈடுபட சம்மதித்தமையானது பலரது புருவங்களையும் உயர்த்தியுள்ளது. இது குறித்து அரசாங்க பத்திரிகைகளும் ஊடகங்களும் மிகுந்த புளகாங்கிதத்தை வெளிப்படுத்துவதை காணக்கூடியதாகவுள்ளது.

ஆனால், பேச்சுவார்த்தையென்ற பெயரில் காலத்தை இழுத்தடிக்க அனுமதிக்கமுடியாது. குறுகியகால எல்லைக்குள் தீர்வு காணப்பட வேண்டும் இல்லாவிட்டால் சுயநிர்ணய போராட்டம் அடுத்தவருடம் மீள ஆரம்பிக்கப்படுமென்ற வே. பிரபாகரனின் கூற்று இங்கு கவனிக்கப்பட்டதாக தெரியவில்லை. பதிலாக நிரந்தர தீர்வுக்கான பேச்சுடன் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அழைத்திருப்பதன் காரணமாகவும், சர்வதேசத்திற்கு இவர்களது உண்மையான முகத்தினை அம்பலப்படுத்த வேண்டும் என்பதற்காகவுமே பேச்சுக்களில் ஈடுபட இணங்கியுள்ளனர் என்றே தமிழ் தரப்புகள் தெரிவிக்கின்றன. இதை மெய்ப்பிப்பது போல அண்மையில் கிளிநொச்சியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் வே. பாலகுமாரன் கருத்து தெரிவித்துள்ளார். நாங்கள் ரணிலையோ மஹிந்தவையோ நம்பவில்லை. ரணில் புடையன் பாம்பென்றால் மகிந்த நாகபாம்பு. புடையன் சத்தமில்லாமல் கொத்தும், நாகம் படமெடுத்து கொத்தும். நாகத்துடன் கொஞ்சம் எச்சரிக்கையாக இருக்கலாமென்பதே அவரது அந்தக் கருத்து.

- என். ஜீவேந்திரன்

எது எவ்வாறாயினும் தற்போதைய அரசியல் நிகழ்வுகள் பல்வேறு அனுமானங்களை தோற்றுவித்துள்ளது என்பது மட்டும் உண்மை.

## ஒரு சமாதானப்பாடல்

ஆஆஆ
மண்ணிலே நாம் வாழும் மண்ணிலே
இந்தக் கொடிய யுத்தம் என்று
ஓய்ந்திடுமோ
இன்னல் சூழ்ந்த வாழ்க்கைமுறை
மாறிடுமோ - இன்பத்
தென்றல் என்றேனும் வீசிடுமோ
இறைவா... இறைவா... விடியல் வருமா
(மண்ணிலே)
ஆஆஆ
பெண் மானம் வீதியிலே
போகின்ற பெருங்கொடுமை
தன்மானம் இழந்து நிதம்
தவிக்கின்ற பேரவலம்
அடையாளம் தொலைத்து விட்டோம்
அடிவாங்கிக் களைத்து விட்டோம்
முடிவற்ற கொடுமைகளால்
முகவரிகள் இழந்து நின்றோம்
அதிதியாய் இருந்த நாம்
அகதியாய் அலைகின்றோம்
(மண்ணிலே)
ஆஆஆ
மேடைகள் மீதேறி
அமைதிதான் நோக்கமென்று
நாடகம் ஆடிடுவார்
வேடங்கள் போட்டிடுவார்
எம் துன்பம் உணர்ந்ததுபோல்
அழுதழுது பேசிடுவார்
நம் கண்கள் மறைந்துவிட்டால்
முதுகில் குத்திடுவார்
இன்னுமே மிதிபடும்
இழிவு நிலை மாறிடுமா

(மண்ணிலே)

லறீனா ஏ. ஹக் - (பீ. ஏ - சிறப்பு)

பேராதனைப்பல்கலைக்கழகத்தில் மொழி பெயர்ப்பு கற்கைநெறி விரிவுரையாளராக பணிபுரிகின்ற லறீனா ஏ. ஹக் ஒரு முற்போக்கான இஸ்லாமியபெண் கலைஞராவார். சமாதானம் தொடர்பாக பல கவிதைகள், பாடல்கள், நாடகங்களை வழங்கியுள்ளார்.

## அனைத்துலக மனித உரிமைகள் பிரகடனம்

### உறுப்புரை - 01

மனிதப்பிறவியினர் சகலரும் சுதந்திரமாகவே பிறக்கின்றனர். அவர்கள் மதிப்பிலும் உரிமைகளிலும் சமமானவர்கள். அவர்கள் நியாயத்தையும், மனச்சாட்சியையும் இயற்பண்பாக பெற்றவர்கள். அவர்கள் ஒருவருடனொருவர் சகோதர உணர்வுப்பாங்கில் நடந்து கொள்ளல் வேண்டும்.

### உறுப்புரை - 02

இனம், நிறம், பால், மொழி, மதம், அரசியல் அல்லது வேறு அபிப்பிராயமுடைமை, தேசிய அல்லது சமூகத்தோற்றம், ஆதனம், பிறப்பு அல்லது பிற அந்தஸ்து போன்ற எத்தகைய வேறுபாடுமின்றி இப்பிரகடனத்தில் தரப்பட்டுள்ள எல்லா உரிமைகளுக்கும் சுதந்திரங்களுக்கும் எல்லோரும் உரித்துடையவராவர்.

(தொடர்ச்சி அடுத்த வாரம்)

## கண்டது.. கேட்டது.. புரிந்தது..

### மாவிலை அரசிலையானது

கண்டி இராச்சியத்தின் கடைசி அரசனான கண்ணுச்சாமி எனும் இயற்பெயர் கொண்ட ஸ்ரீ விக்கிரமராஜசிங்கன் பிரித்தானியரால் கைது செய்யப்பட்ட பின்னர் அம்மன்னனின் கொடியிறக்கப்பெற்று பிரித்தானியரால் யூனியன் ஜக்கொடி ஏற்றப்பட்டது. ஸ்ரீ விக்கிரமராஜசிங்க மன்னின் கொடியானது இக்கால சந்ததியினர் அறிந்திராத ஒன்றாகும். 1948ஆம் ஆண்டுக்குப் பின்னர் சிங்கள வரலாற்று ஆசிரியர்கள் பலரும் தத்தம் நூல்களில் இக்கொடியினை மறைத்து இரட்டிப்புச் செய்து வந்தமையே அதற்கான காரணமாகும். இச்சிங்கக் கொடியில் முன்னும் பின்னும் மாவிலைத் தோரணங்கள் அமைக்கப் பெற்றிருப்பதையும் கொடியின் மத்தியில் வாளேந்திய சிங்கம் அமையப் பெற்றுள்ள சதுரத்தின் நான்கு மூலைகளிலும் மாவிலைகள் பொறிக்கப் பெற்றிருப்பதையும் காணலாம்.

இந்துசமயம் சார்ந்தவர்களான நாயக்க அரசர்கள் இந்து மரபினை வழுவாது பேணுபவர்களாதலால் பூத கணங்களின் தாக்கம் உண்டாகாதிருக்க மாவிலைகளை பொறித்திருந்தனர்

1948ல் பெப்ரவரி 4ம் திகதி சுதந்திரம் கிடைத்த பின்னர் கண்டிராச்சியத்தின் கொடியாக இருந்த சிங்கக் கொடி தேசியக் கொடியாக பெரும்பான்மையினரால் ஏற்றுக் கொள்ளப்பட்டதுடன் அக்கொடியில் மாற்றமும் செய்யப்பட்டிருந்தது. இது தொடர்பாக தமிழ்த் தலைவர்கள் முரண்பாடாகக் கருத்துக் கொண்டிருந்தனர். பின்னர் உருவாக்கப்பட்ட சிங்கக் கொடியின் முன்பகுதியில் தமிழர்களைக் குறிப்பதற்கு செம்மஞ்சள் கோடும் முஸ்லிம்களைக் குறிப்பதற்கு பச்சைக்கோடும் அமைக்கப் பெற்றிருந்தது. கொடியில் வாளேந்திய சிங்கம் அமைந்த பெரும் பகுதி பெரும்பான்மையினரைக் குறிப்பதாகவும் சொல்லப்பட்டது. அக்கொடியில் நான்கு மூலைகளிலும் அரச மர இலை அக்காலத்தில் பொறிக்கப்பட்டிருக்கவில்லை.

1978ம் ஆண்டு ஜே.ஆர். ஆட்சியிலேயே சிங்கக் கொடியின் நான்கு மூலைகளிலும் அரசமரத்து இலை பொறிக்கப்பட்டது. கண்டிநாயக்க அரசர்களின் சிங்கக்கொடியின் நான்கு மூலைகளிலும் மாவிலை அமைக்கப் பெற்றிருந்தமையை மனதிற் கொண்டே பின்னர் இவ்வாறு அரசமரத்து இலை அமைக்கப் பெற்றிருக்கலாம்.

சொல்லேருழவர் ம.க.அ. அந்தனிசில்

## இவ்வார விழிப்பில்...

- வடகிழக்கு தமிழரும் தேர்தல் பகிஷ்கரிப்பும்
- தற்போதைய அரசியல் சூழலும் கொழும்பு தமிழரும்
- அம்பாந்தோட்டை முஸ்லிம்களின் உணர்வலைகள்
- பதுளை தெளிவத்தை தோட்ட துயர்கள்

## கருத்தாடல் களம்

### வாக்களிப்பதை தடுத்தமைக்கு புலிகளின் சுயநலமே காரணம்.

வடக்கு கிழக்கைச் சேர்ந்த மக்களின் வாக்கு பகிஷ்கரிப்புக்கு தற்போதைய சூழ்நிலையில் பல காரணங்கள் கூறப்பட்டு வந்தாலும், இவ் வாக்கு பகிஷ்கரிப்புக்கு பிரதான காரணம் புலிகளின் இராஜதந்திரமேயாகும். இலங்கை மக்களைப் பொறுத்தவரையில் ஒரு கண்மூடி வித்தையாக காணப்படும் இவ்விடயத்தின் பின்னணியில் புலிகள் தமக்கேயுரிய அதிகாரத்தை இழக்காமலிருப்பதற்காக மேற்கொண்ட பல முயற்சிகள் மறைந்திருக்கின்றமை குறிப்பிடத்தக்கதாகும். அதாவது, எங்கே ரணில் விக்கிரமசிங்க அவர்களின் ஆட்சி வந்துவிட்டால் நாம் அனைவரும் சமஷ்டி ஆட்சி முறை எனும் சிறைக்குள் சிக்கிவிடுவோமோ அல்லது தமது அதிகாரத்தை மேம்படுத்த முடியாமல் போய்விடுமோ என்ற பயத்தினால் புலிகள் தமது மக்களை வாக்களிப்பிலிருந்து விலக்கி வைத்துள்ளனர். புலிகள் தமது சுயநலத்திற்காக மக்களை பயன்படுத்தியுள்ளனர். வாக்குரிமை என்பது ஒவ்வொரு மனிதனதும் ஜனநாயக உரிமையாகும். அவ்வாறான ஒரு முக்கியத்துவம் வாய்ந்த உரிமையை தமது சுயதேவைக்காகவும் தம்மை பாதுகாத்துக் கொள்வதற்காகவும் புலிகள் பயன்படுத்துவது நியாயமற்ற செயலாகும். இவர்களின் இவ்வாறான செயற்பாடு மீண்டும் போரை ஆரம்பிக்கும் அபாயகரமான சூழ்நிலையை ஏற்படுத்தியுள்ளது. இரு தசாப்தகாலமாக இக் கொடிய யுத்தத்தினால் பல விதமாக பாதிக்கப்பட்டுள்ள இலங்கை மக்கள் குறிப்பாக வடகிழக்கு மக்களின் துன்பதுயரங்கள் சிறிது சிறிதாக தீரும் இத்தருணத்தில் புலிகளின் இவ்வாறான செயற்பாடுகள் எரிகின்ற நெருப்பில் எண்ணெயை ஊற்றியதாக இருக்கின்றது. இவ்விடயத்தை வடக்கு கிழக்கு மக்கள் அறியாது புலிகளின் கைபொம்மையாக இருப்பது வேதனைக்குரிய விடயமாகும்.

வே. தணிகாசலம்
கொள்ளுபிட்டி

### புலிகளின் முடிவு சரியானது

இம்முறை இடம்பெற்ற ஜனாதிபதி தேர்தலை விடுதலைப்புலிகள் பகிஷ்கரித்தமையானது மிகவும் சரியானதொன்றே. ஏனெனில் இலங்கை ஒரு ஜனநாயக நாடு. ஆனால் வடகிழக்கில் வாழும் மக்கள் இன்னமும் இராணுவ சூழலில் பல துயரங்களை அனுபவித்து வருகின்றனர். இந்நிலையில் இது ஒரு ஜனநாயக நாடா என்ற கேள்வி எழுவதில் ஆச்சரியமில்லை. தமது உரிமையை அகிம்சை வழியில் கேட்டு கிடைக்காத நிலையில் புலிகள் ஆயுதப் போராட்டத்தை ஆரம்பித்தனர்.

தமிழ் மக்களின் துன்பத்தை இலங்கை அரசு மட்டுமல்ல சர்வதேசமும் தமது சுயலாபத்திற்கு பயன்படுத்தின. அது மட்டுமல்லாமல் ஐரோப்பிய யூனியன், பிரிட்டன், அமெரிக்கா போன்றன விடுதலைப்புலிகள் மீது பல தடைகளை விதித்துள்ளன. இந்த நிலையில் தமது உரிமையை பெற புலிகள் பல வியூகங்களை மேற்கொள்ள ஆயத்தமாகியுள்ளனர். அதில் ஒன்று தான் இந்த தேர்தல் பகிஷ்கரிப்பு.

இன்று ஜனநாயகம் பற்றி பேசுபவர்கள் சுமார் 60 வருடகாலமாக தமிழ் மக்களுக்கு மறுக்கப்பட்ட ஜனநாயகம் குறித்து ஏன் பேசவில்லை. ஜனநாயகம் அஹிம்சை பேசிய தமிழ் தலைவர்களுக்கு சிங்கள தேசம் வழங்கிய மதிப்பு என்ன?

மேலும் இன்று விடுதலைப்புலிகளுக்கும் தமிழ் மக்களுக்கும் கிடைத்த அங்கீகாரம் அஹிம்சையால் கிடைத்ததல்ல. ஆயுதத்தாலேயே கிடைத்தது என்பதை சகலரும் ஞாபகத்தில் வைத்திருக்க வேண்டும்.

சந்திரலதா மனோகரன்
கல்லடி, உப்போடை, மட்டக்களப்பு

## வாசகர் கவனத்திற்கு...

கருத்தாடல் களத்திற்கு உங்கள் கருத்துக்களும் வரவேற்கப்படுகின்றன. அத்தோடு விழிப்பின் பதிவுகள் தொடர்பான உங்கள் அபிப்பிராயங்கள், விமர்சனங்களையும் நாங்கள் எதிர்பார்க்கிறோம்.

எழுதி அனுப்ப வேண்டிய முகவரி.

விழிப்பின் பதிவுகள்
யங் ஏசியா டெலிவிஷன்
இல, 713. டிபி. விஜயசிங்க மாவத்தை, பெலவத்தை, பத்தரமுல்லை.

மின்னஞ்சல்முகவரி :- villippu@yatv.net

## சகோதர மொழியிலிருந்து சில துளிகள்

1983 இல் தமிழர்களுக்கு நேர்ந்த அவலத்தை கண்டு மனம்வருந்திய ஒரு சிங்கள பெண்கவிஞரின் உணர்வு வெளிப்பாடு இது.

### உன் நிழலைக்காணேன்

கண்கள் கூசும்
சமையலறை செந் தீயால்
முகமெல்லாம் வியர்க்க
கடலை வடை
கஜீ ...ருக்கும்
அந்த நறுமணத்தை
இழந்து விட்டது காற்று
உன் வீட்டு இடிபாட்டில்
சாம்பல் தான் தெரிகிறது
பாதணி அறுந்து
கால் வலிக்க ஓடுகையில்
வழிப்புறங்களில் உன்
இயங்கும் கரங்களை தேடி
விழிச் சிறகசைத்தேன்
மைல்கள் கடந்தும்
உன் நிழலைக்காணேன்

மொனிகா ருவன் பத்திரன




விழிப்பின் பதிவுகள் தொடர்பான மேலதிக விடயங்கள் ரூபவாஹினியின் 'ஐ' அலைவரிசையில் திங்கள் இரவு 7.30 மணிக்கும், TNL அலைவரிசையில் செவ்வாய் இரவு 7.25 மணிக்கும் ஒளிபரப்பாகும். விழிப்பு நிகழ்ச்சி தொடர்பான உங்கள் அபிப்பிராயங்கள் வரவேற்கப்படுகின்றன. அனுப்பவேண்டிய முகவரி :- விழிப்பு, யங் ஏசியா டெலிவிஷன், இல 713, டி.பி. விஜயசிங்க மாவத்தை, பெலவத்த, பத்தரமுல்லை. தொலைபேசி இல 0112787041-9 தொலைநகல் இல 0112787051 மின்னஞ்சல் முகவரி villippu@yatv.net இணையத்தள முகவரி www.yatv.net

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உறுப்புநாடுகளின் ஜனநாயக எதிர்ப்புப்போக்கு: பொதுநலவாய மாநாட்டில் தலைவர்கள் எச்சரிக்கை

பொதுநலவாய (கொமன் வெல்த்) நாடுகளின் உயர்மட்ட மாநாடு நடுநிலக்கடல் பிரதேசத்திலுள்ள மால்டா தீவின் வாலெட்டா நகரில் நவம்பர் 25ஆம் திகதி தொடக்கம் 27 ஆம் திகதிவரை நடந்துமுடிந்துள்ளது. பெரும்பாலும் முன்னைய பிரிட்டிஷ் காலணித்துவ நாடுகளையே உறுப்பினர்களாகக் கொண்ட 53 நாடுகளின் தலைவர்கள் இம் மாநாட்டில் கலந்து கொண்டார்கள்.



இலங்கையின் சார்பில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா கலந்து கொள்ளவிருந்தார் என்றே முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது. இம் மாதிரி உலக மாநாடுகளில் கலந்துகொள்வதில் அதிக விருப்பமுடையவர் என்பதால் பதவியிலிருந்து ஒதுங்குவதற்கு முன்னர் இந்தக் கடைசிச் சந்தர்ப்பத்தை அவர் கைநழுவவிட்டுவிடாமல் உச்சிமாநாட்டில் கலந்துகொள்ள ஆசையுடன் இருந்திருப்பார். ஆனால், அதற்குள் ஜனாதிபதித் தேர்தலும் வந்து அவருக்கு மாறான கொள்கைகளுடன் மஹிந்த ராஜபக்ஷ பதவிப் பிரமாணமும் செய்துகொண்டுவிட்டதால் அந்த எண்ணம் ஈடேறாமல் போய்விட்டது.

தேர்தல் காலத்தில் 'அக்காவும் தம்பியும்' மஹிந்தவின் வெற்றிக்குப் போதுமான பங்களிப்பை மனமுவந்து வழங்காது போனாலும் கட்சியில் அவர்கள் தரப்புக்கிருக்கக் கூடிய செல்வாக்கை கூடியவரை பயன்படுத்திக்கொள்ளவோ என்னவோ அனுராவுக்கும் ஓர் அமைச்சர் பதவியைப் புதிய ஜனாதிபதி வழங்கி 'சரிக்கட்டி' இருக்கிறார்.

இங்கு இவர்களுக்குள் ஏற்பட்டிருந்த முரண்பாடுகளால் - குளறுபடிகளால் அந்த மாநாட்டில் ஒரு நகைச்சுவைச் சம்பவம் இடம்பெற்றதாகவும் கூட பத்திரிகைகளில் செய்திகள் வெளிவந்திருந்தன. இந்த மாநாட்டில் இலங்கைக் குழுவில் அமைச்சர்களுடன் சிறப்புப் பிரதிநிதியாகக் கலந்துகொள்ளவிருந்த டாக்டர் ஜயந்த தனபால இலங்கையின் ஜனாதிபதியென வர்ணிக்கப்பட்டதாகவும் செய்திகள் கூறின. உச்சிமாநாட்டில் இலங்கையின் குழுவுக்கு வெளிநாட்டமைச்சர் என்ற முறையில் அனுரா பண்டாரநாயக்க கலந்துகொள்வார் என்றிருந்தபோதிலும் இறுதி நேரத்தில் அவர் தமது புதிய அமைச்சின் பெயரிலேயே கலந்து கொள்ள நேர்ந்தது. இலங்கையின் பிரித்தானியாவுக்கான உயர்ஸ்தானிகர் ஷேனுக்கா செனவிரட்ன மாநாட்டுக்கு வருகைதந்த படம் ஒன்றில் செய்தி முகவர் அமைப்பொன்று அவரையும் இலங்கை அதிபர் என்றே வர்ணித்திருந்ததாம்.

இந்தக் குளறுபடிகளுக்கு இலங்கை வெளிநாட்டமைச்சோ, பிரிட்டனிலுள்ள இலங்கை தூதரகமோ பொறுப்பேற்க மறுத்துள்ளன. மாநாட்டுக்குப் பொறுப்பாக இருந்தவர்களே இதற்குக் காரணம் என்று அவர்கள் மட்டுக் கொள்ளாமல் இருந்துவிட்டனர்.

### ஜனநாயகத்துக்கான அச்சுறுத்தல்



பொதுநலவாய நாடுகளில் ஜனநாயகத்துக்கு விடுக்கப்படும் அச்சுறுத்தல் குறித்தே மாநாட்டுத் தலைவர்கள் இம் முறை அதிகம் அக்கறை காட்டியுள்ளனர். குறிப்பாக உகண்டா, பாகிஸ்தான் போன்ற நாடுகளின் நிலைமைகள் ஆராயப்பட்டுள்ளன.

உகண்டாவில் விரைவில் நடைபெறவிருக்கும் ஜனாதிபதித் தேர்தலில் இப்போதைய ஜனாதிபதி யோவேரி முசெவெனியின் பிரதான போட்டியாளரான கிஸ்ஸா பிஸெக்யே கைதுசெய்யப்பட்டிருக்கும் விடயம் உச்சிமாநாட்டின் கவனத்தைப் பெரிதும் ஈர்த்துள்ளது. மால்டா பிரதமர் வோரன்ஸ் கொன்ஸியுடன் பத்திரிகையாளர்களைச் சந்தித்த பிரிட்டிஷ் பிரதமர் ரொனிபிளேயர் இவ்விடயம் எங்களுக்குப் பெரிதும் கவலையளிப்பதாய் உள்ளது. ஜனநாயகம் முறையாகச் செயற்படுவதற்கு முறையான மரியாதை கொடுக்கப்படவேண்டும் - என்றார்.

பொதுநலவாய நாடுகளின் அடுத்த உச்சி மாநாடு 2007ஆம் ஆண்டு உகண்டாவில் நடைபெறும் என்ற கருத்து நிலவியபோதிலும் அதற்கு அந்த நாடு பொருத்தமான இடமாக இருக்கமாட்டாதெனப் பொதுநலவாய மனித உரிமைகள் அமைப்புத் தெரிவித்துள்ளது. நல்லாட்சி, ஜனநாயகம் என்பவற்றில் அந்நாடு போதியளவு சிறப்பாகச் செயற்படவில்லையென்று அவ்வமைப்பு தெரிவித்துள்ளது.

இந்த மாநாட்டில் நைஜீரியாவின் அதிபர் ஒலுசெகன் ஒபசாஞ்சோ ஆரம்ப உரை நிழ்த்தியபோது வளர்ச்சிகுன்றிய நாடுகளில் முக்கிய பிரச்சினைகளில் ஒன்று ஊழல் என்றார். ஸ்திரமின்மை, தலைமைத்துவத்தின் தகுதியின்மை, பிணக்குகள் போன்றவை இந்நாடு

## இரட்டைத் தலைமையைக் கைவிட பாக். அதிபருக்கு ஆலோசனை

களின் வளர்ச்சியைத்தடுத்து வருவதாக அவர் சொன்னார்.

ஊழல் ஒழிப்பு தொடர்பான ஐ.நா. உடன்படிக்கையை சகல பொதுநலவாய நாடுகளும் ஏற்றுக்கொண்டு கைச்சாத்திட்டு செயற்படுத்தவேண்டும் - என்று அவர் வற்புறுத்தினார். இந்த உடன்படிக்கை அடுத்த மாதம் அமுலுக்கு வரவிருக்கின்றது. இந்த உடன்படிக்கைக்கு வெளியில் எந்தப் பொதுநலவாய நாடும் இருக்காலாகாதென்பது நைஜீரியாவின் கருத்தாகும்.

மாநாட்டைப் பிரிட்டிஷ் எலிஸபெத் 11 மகாராணியார் வண்ணமிகு சடங்குகளுடன் ஆரம்பித்துவைத்து உரை நிகழ்த்தினார். பொதுநலவாய நாடுகளின் ஒருமைப்பாட்டு உணர்ச்சியையும் ஆழிப்பேரலை அனர்த்தங்களின்போது உறுப்பு நாடுகள் அள்ளி வழங்கிப் பாதிக்கப்பட்ட நாடுகளுக்கு உதவிய பெருந்தன்மையையும் அவர் பாராட்டினார்.



மால்டா தீவில் கூடிய 53 நாடுகள் கொண்ட பொதுநலவாய அமைப்பின் தலைவர்கள் மாநாட்டை நவம்பர் 23ஆம் திகதி எலிசபெத் 11 மகாராணி ஆரம்பித்துவைத்தார்.

### பாகிஸ்தான் அதிபருக்கு எச்சரிக்கை

பாகிஸ்தான் அதிபர் தொடர்ந்தும் அதிபராகவும் இராணுவத் தளபதிகளாகவும் பதவி வகிப்பதைப் பொதுநலவாய நாடுகள் கண்டித்துள்ளன. இராணுவத் தலைவராக அவர் தொடர்ந்து பதவி வகிப்பதானது ஜனநாயக கோட்பாடுகளுக்கு ஒத்துவராது. அவர் அப்பதவியைக் கைவிடாத வரை என்னதான் சமீபகாலத்தில் பாகிஸ்தான் சிறிது முன்னேறியிருந்தாலும் மீண்டும் ஒடுக்குமுறைக்கு இறங்கும் அபாயம் இருக்கவே செய்கிறது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாநாட்டின் இறுதியில் விடுக்கப்பட்ட ஓர் அறிக்கையில் 2004ஆம் ஆண்டு மீண்டும் பாகிஸ்தான் பொதுநலவாய அமைப்புக்குள் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் ஜனநா

## பலஸ்தீனம் அமைவதை ஷெரோன் கட்சி வரவேற்கும்

யக வழியில் அங்கு ஓரளவு முன்னேற்றம் காணப்பட்டுள்ளது என்பதை வரவேற்றுள்ளதுடன் முஷாரப் வகிக்கும் இரட்டைப் பதவிகளைக் கைவிடுவதற்கு மேலும் இரண்டு ஆண்டுகள் அவகாசம் அளிப்பதென்று தெரிவித்துள்ளது.

1999ஆம் ஆண்டு பர்வேஸ் முஷாரப் திடீர் இராணுவப் புரட்சிமூலம் அதிகாரத்தைக் கைப்பற்றியதையடுத்து பாகிஸ்தான் பொதுநலவாய அமைப்பிலிருந்து வெளியேற்றப்பட்டது.

ஒரே ஆள் நாட்டின் தலைவராகவும் இராணுவத்தின் தலைவராகவும் இருப்பதானது ஜனநாயகக் கோட்பாடுகளுக்குப் பொருத்தமற்றதாகும் என்று பொதுநலவாயத் தலைவர்கள் கருதுகிறார்கள்.

* * *

### சிறைக்கைதிகள் தொலைபேசி மட்டுமல்ல விலைமாதரையும் வாங்கலாம்

இந்தோனேஷிய சிறைக்கைதிகள் கையடக்கத் தொலைபேசிகளை மட்டுமல்ல விலைமாதர்களையும் விலைக்குப் பெற்றுக் கொள்ளலாம். அந்த அளவுக்கு அங்கு சிறை அதிகாரிகள் மத்தியில் ஊழல் நிலவுகிறது என்கிறார் அந்நாட்டு நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர்.

பணக்கார கைதிகள் கையடக்கத் தொலைபேசிகள், தொலைக்காட்சிப் பெட்டிகள் மற்றும் தமது அறைகளுக்குக் குளிரூட்டிகளையும் பொருத்திக்கொள்ள அதிகாரிகள் அனுமதிக்கிறார்கள் என்று தெரிவித்துள்ளார் அகமது பாவுஸி என்ற அந்த உறுப்பினர்.

கிழக்கு ஜகர்த்தாவிலுள்ள சிப்பினாங் சிறையிலேயே இந்த நிலைமை இருந்துவருகின்றதாம். முன்னாள் அதிபர் சுஹாட்டோவின் கடைசிப் புதல்வர் டொமி சகர்ட்டோ போன்ற பெரிய இடத்து ஆசாமிகள் இந்தச் சிறையில் இருக்கிறார்கள்.

இக்கைதிகள் விலைமாதுகளை இரகசியமாகப் பெற்றுக்கொள்வதற்குப் பெருந்தொகைப் பணத்தை அதிகாரிகளுக்கு வழங் குகிறார்கள் என்றும் பாவுஸி தெரிவித்துள்ளார்.

### கனடா அரசு வீழ்ந்தது ஜனவரியில் புதிய தேர்தல்

கனேடிய சிறுபான்மை அரசு நாடாளுமன்றில் தோற்கடிக்கப்பட்டதையடுத்து அங்கு பொதுத்தேர்தலுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. பிரதம மந்திரி போல் மார்ட்டினின் லிபரல் கட்சி அரச எதிர்க்கட்சியினரின் கண்டனப் பிரேரணையொன்றில் தோற்கடிக்கப்பட்டது. மக்கள் சபையில் எதிர்க் கட்சியினரால் கொண்டுவரப்பட்ட ஊழல் குற்றச்சாட்டுப் பிரேரணைக்கு 171 உறுப்பினர்கள் ஆதரவாக வாக்களித்தனர். 133 பேர் எதிராக வாக்களித்தனர்.

தகவல்களின்படி ஜனவரி 23ஆம் திகதி அங்கு பொதுத் தேர்தல் நடைபெறவிருக்கின்றது.

நாடாளுமன்றத்தில் ஜனவரி மாதத்தில் பொதுத்தேர்தலை நடத்த முன்வருமாறு எதிர்க்கட்சியினர் விடுத்தகோரிக்கையைப் பிரதமர் மார்ட்டின் நிராகரித்ததைத் தொடர்ந்து கண்டனப்பிரேரணை கொண்டுவரப்பட்டது. மார்ட்டினுக்கு முக்கிய எதிரியான கொன்சர் வேட்டிவ் கட்சியின் தலைவர் ஸ்ரீபன் ஹார்ப்பர் கண்டனப் பிரேரணையை நிறைவேற்றியதையடுத்து கருத்துவெளியிடுகையில் "இந்த நாட்டின் நாடாளுமன்றத்தில் இன்றையதினம் சரித்திர முக்கியத்துவமானது. ஊழல் நிறைந்த அரசின் முடிவுமட்டுமல்ல இது. இந்த நாட்டுக்கு நல்ல ஒரு பிரகாசமான எதிர்காலத்தையும் எடுத்துக்காட்டுகிறது என்று கூறினார்.

* * *

### பலஸ்தீனம் அமைவதை ஷெரோன் கட்சியினர் வரவேற்கிறார்கள்

பலஸ்தீன நாடு ஒன்று அமைக்கப்படுவதைத் தாங்கள் காண விரும்புவதாக இஸ்ரேலிய பிரதமர் ஏரியல் ஷெரோனின் புதிய கட்சியினர் தெரிவித்துள்ளனர்.

முக்கிய தொழில் கட்சி உறுப்பினர் ஒருவர் கட்சிமாறி ஷெரோனின் கட்சியில் சேர்ந்து கொண்டதை அவர்கள் கொண்டாடினார்கள்.

பாரிய இஸ்ரேலுக்கான நிலத்தை விட்டுக் கொடுத்து ஒரே சீரான இஸ்ரேல் நாட்டைக் கட்டியெழுப்பப்போவதாக ஏரியல் ஷெரோனின் புதிய கட்சியான தடிமா தெரிவித்துள்ளது.

மார்ச் 28ஆம் திகதி நடைபெறவிருக்கும் தேர்தலுக்கான அறிக்கையை ஏரியல் ஷெரோன் மிக நம்பிக்கையுடன் வெளியிட்டிருக்கிறார். இராணுவ மயப்படுத்தப்படாத பலஸ்தீன நாடு அமைவதை வரவேற்பதாகவும், ஜெருசலத்துடன் இணைக்கப்பட்ட இஸ்ரேலின் இறைமையை நிலைநாட்டுவதாகவும் அறிவித்துள்ள ஷெரோன் மேற்குக்கரையிலுள்ள பெரிய யூதகுடியிருப்புகள் பேணப்படும் என்றும் தெரிவித்துள்ளார்.




ஜெருசலேம் இஸ்ரேலின் ஐக்கியப்பட்ட நிரந்தரத் தலைநகரம், கிழக்குப் பகுதியிலுள்ள அரபுப் பகுதிகளும் இதில் சேரும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. கிழக்கு அரபுப் பகுதியில் 2 லட்சம் பலஸ்தீனர்கள் வாழ்ந்து வருகிறார்கள். மேற்குக்கரைப் பகுதி காஸாவைவிட மிகமுக்கியமான இஸ்ரேலின் நிலப் பகுதி என்று யூதர்கள் கருதுகிறார்கள்.

"யூதர்களின் ஜனநாயக நாடு ஒன்றை நிறுவ இஸ்ரேல் நிலத்தின் சில பகுதிகளை நாம் விட்டுக்கொடுக்கத்தான் வேண்டும்" என்று இஸ்ரேலில் அதிகம் விற்பனையாகும் பத்திரிகை ஒன்று எழுதியுள்ளது.

சர்வதேச மட்டத்தில் உருவாக்கப்பட்ட தீர்வுத்திட்டம் அமுலாக்கப்படவேண்டும் என்று தடிமா அறிக்கை கூறுகின்றது.

* * *

### சவுதியில் உள்ளூர் ஆட்சி சபைக்குப் பெண்களும் போட்டி

இஸ்லாமிய நாடான சவூதி அரேபியாவில் உள்ளூர் வர்த்தக - தொழில் ஆட்சி சபை ஒன்றுக்குப் போட்டியிடும் வேட்பாளர்களில் 17 வர்த்தகத்துறை பெண்களும் போட்டியில் இறங்கியுள்ளார்கள். பழமை பேணும் இஸ்லாமிய அரசு ஒன்றில் இவ்வாறு பெண்கள் போட்டியிடுவது இதுவே முதல்தடவையாகும். ஜட்டா நகரின் வர்த்தகத் தொழில் ஆட்சிமன்றத்தின் 12 இடங்களுக்கான தேர்தலில் 71பேர் போட்டியிடுகிறார்கள்.

இந்தத்தேர்தலில் குறைந்தது இரு பெண்களாவது வெற்றிபெறவேண்டும் என்று பெண்கள் அமைப்புகள் கருதுகின்றன.

### காஸா வாசிகளின் மகிழ்ச்சி ஆரவாரம்

காஸாவுக்கும் எகிப்துக்குமிடையிலான ராபாஹ் தடைவாயில் திறந்துவிடப்பட்டதையடுத்து நூற்றுக்கணக்கான காஸாவாசிகள் குதூகலத்துடனும் ஆரவாரத்துடனும் எகிப்துக்குள் பிரவேசித்து மகிழ்ந்தார்கள்.

எகிப்திலிருந்து காஸாவுக்கும், காஸாவிலிருந்து எகிப்துக்கும் பிரயாணிகள் செல்வது காணக்கூடியதாகவிருந்தது என்று அங்கிருந்து செய்தியாளர்கள் அறிவித்துள்ளனர்.

பிரயாணிகள் கார்களிலும் மினிவான்களிலும் குழந்தைகளுடனும் மூடை முடிச்சுகளுடனும் பிரயாணம் செய்தார்கள்.

ஒருவரை ஒருவர் கட்டித்தழுவிக் கொள்வதும், வெற்றி அடையாளத்தைக் கைவிரல்களால் காட்டிக்கொள்வதும் பார்க்கக்கூடியதாகவிருந்ததாம்.

காஸாப் பகுதியைக் கடந்த 38 ஆண்டுகளாக ஆக்கிரமித்திருந்த இஸ்ரேலிய படைகள் வாபஸ் பெற்றதன் பின்னர் அவ்விடத்தில் பலஸ்தீனப் படையினர் காவல் கடமைகளை ஏற்றுள்ளனர்.

இஸ்ரேலியப் படைகளால் பிரயாண ஆவணங்கள் பரிசோதிக்கப்பட்டு அனுமதிக்கப்படுவதைவிட பலஸ்தீனர்களாலேயே அது மேற்கொள்ளப்படுவது மகிழ்ச்சியாகவிருக்கின்றது என்று காஸாவாசியான ஜிஹாத்சனூன் என்ற 24 வயது இளைஞர் கூறினார். எனக்கு 10 இறக்கைகள் முளைத்தது போலிருக்கிறது என்றார் அவர். காஸாவிலிருந்து எகிப்துக்குள் பிரவேசிக்கும் முதல் நபர் இவராகும்.

பலஸ்தீன அதிகாரிகள் பயணிகளின் போக்குவரவுகளை மேற்கொள்வதை ஐரோப்பிய ஒன்றிய கண்காணிப்பாளர்கள் அருகில் இருந்து அவதானித்துக் கொண்டிருந்தார்கள்.

அமெரிக்க இராஜாங்க அமைச்சர் கொண்டலீஸா அம்மையாரின் முயற்சியால் இந்தத் தடைவாயில் திறந்துவிடப்பட்டுள்ளது.

பலஸ்தீன தீவிரவாதிகள் காஸாவுக்குள் ஆயுதம் கடத்துகிறார்களா என்பதை வீடியோ தொடர்புகள் மூலம் இஸ்ரேலிய அதிகாரிகள் கவனித்துக்கொண்டிருப்பார்கள். இந்தக் கடவை மூலம் தினமும் 400 பிரயாணிகள் இருபக்கமும் போய்வருவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ENGLISH மொழியா? உங்கள் பிரச்சினை

இன்றே தபால் மூல ஆங்கிலப் பாடநெறியில் இணையுங்கள்

நீங்கள் இருக்கும் இடத்தில் இருங்கள் நாம் அங்கு உங்களுக்கு ஆங்கில கல்வியை குருகிய காலத்தில் (அடிப்படையில் இருந்தே) கற்பிக்கின்றோம்

Free இதோ இலவச அழகிய குடை

எமது எந்த ஒரு பாடநெறியிலும் இணையும் அனைத்து மாணவ / மாணவிகளுக்கு அழகிய குடை ஒன்றும் 2006ம் ஆண்டுக்கான வர்ண கலண்டர் ஒன்றும் முற்றிலும் இலவசமாக வழங்கப்படும் (முந்துங்கள்)

மேலதிக விபரங்களுக்கு சுயவிலாசத்துடன் 5.00 பெறுமதியான 3 முத்திரைகள் அனுப்பி பெறுங்கள்

UNION EDUCATIONAL INSTITUTE

P.O. BOX 143, KANDY, SRI LANKA. TEL: 0773 123 523

சில கல்வி நிலையங்கள் போன்று மாணவர்களிடம் பணத்தை அறவிடுவது அல்ல எமது நோக்கம்


## பிரயாணக் கோரிக்கைகளை அனுப்பி வைக்க அறிவுறுத்து

குருநகர், டிச.4

கடந்த நவம்பர் 17 ஆம் திகதி நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலின்போது தேர்தல் பணிபுரிய நியமனம் செய்யப்பட்டோருக்காக நடத்தப்பட்ட பயிற்சி வகுப்பில் கலந்து கொண்டோரின் பிரயாணக் கொடுப்பனவுக் கோரிக்கைகளை உடன் பெற்று தமக்கு அனுப்பி வைக்குமாறு யாழ் தேர்தல் திணைக்களம் யாழ்ப்பாணத்தில் இயங்கும் அரச அலுவலகங்களின் தலைவர்களைக் கேட்டுள்ளது.

அரச ஊழியர்களின் மேற்படி கொடுப்பனவுகள் தேர்தல் திணைக்களம் மூலம் செய்யப்படவுள்ளது என்றும்-

சம்பந்தப்பட்ட திணைக்களங்கள் இக் கொடுப்பனவை வழங்க முடியாது என்றும்-

இம் மாதத்தினுள் இந்தக் கொடுப்பனவை மேற்கொள்ள வேண்டியுள்ளதால் இதற்கு முக்கியத்துவம் கொடுத்துச்செயற்படுமாறும்- யாழ்.தேர்தல் திணைக்களம்மேலும் கோரியுள்ளது.

(எ-51)

## மனித உரிமை தினத்தைமுன்னிட்டு வவுனியாவிலும் விசேடநிகழ்வு

வவுனியா,டிசெ.4

சர்வதேச மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு வவுனியா மாவட்ட மனித உரிமைகள் அணைக்குழு கடந்த வியாழனன்று சமாதானமும் சமத்துவமும் என்ற நிகழ்வை ஒழுங்குசெய்து நடத்தியது.

வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்க மண்டபத்தில் நடைபெற்ற இந்த நிகழ்வில் வவுனியா மாவட்ட மேலதிக அரச அதிபர் திருமதி ஷால்ஸ் பிரதமவிருந்தினராகக் கலந்து கொண்டார்.

மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு சமாதானமும் சமத்துவமும் என்னும் தலைப்பில் பாடசாலை மாணவர்களிடையே நடத்தப்பட்ட சித்திரப் போட்டியில் தெரிவு செய்யப்பட்ட படங்களின் கண்காட்சியும் இடம் பெற்றது. (எ-204)

## தீவககல்வி வலய முன்னுரிமை

யாழ்ப்பாணம், டிச.04

தீவக கல்வி வலயத்தைச் சேர்ந்த சகல அதிபர்களுக்குமான கலந்துரையாடல் எதிர் வரும் 6ஆம் திகதி செவ்வாய்கிழமை தீவகக்கல்வி வலய முகாமைத்துவ மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (எ-204)


# UNIVERSITY of CAMBRIDGE U.K
## ENGLISH CLASSES

### ஆங்கிலமொழி உங்கள் பிரச்சினையா?

- உங்களால் ஆங்கிலத்தை பேசவோ, எழுதவோ, வாசிக்கவோ முற்றாக இயலவில்லையா?
- உங்களால் மற்றவர்கள் ஆங்கிலம் பேசும்போது விளங்கிக்கொள்ள முடிகிறதாயினும் பதில் சொல்ல இயலவில்லையா?
- IELTSபெறுபேறுகளைப்பெற்று வெளிநாட்டில் உயர்கல்வியைப்பெற விரும்புகின்றீர்களா?
- உங்களால் ஆங்கிலம் பேசவும், வாசிக்கவும் எழுதவும் முடிகிறதாயினும் அம்மொழியில் ஒரு அங்கீகரிக்கப்பட்ட தராதரப்பத்திரம் (Certificate) ஒன்றைப்பெற விரும்புகின்றீர்களா?
- Computer துறையில் பயிலும் நீங்கள் ஆங்கில மொழியினை விருத்தி செய்து Computer துறையில் உயர்கல்வி கற்க விரும்புகிறீர்களா? மேலுள்ள எந்தப் பிரிவைச் சேர்ந்தவராயினும் உடனடியாக **"British College of English"** இனைத்தொடர்பு கொள்ளுங்கள். **University of Cambridge – U.K** இன் ஆங்கிலப் பாடநெறி ஒன்றில் சேர்ந்து கொள்ளுங்கள்.
- Cambridge ஆங்கிலப் பரீட்சைகள் 5 மட்டங்களில் நடத்தப்படுகின்றன. இவை **KET, PET, FCE, CAE, CPE** எனப் பெயரிடப்பட்டுள்ளன. இவற்றுள் பின்வரும் பாடநெறிகள் எமது **British College** இல் போதிக்கப்படுகின்றன.

◆ **PRELIMINARY ENGLISH TEST (PET) – 150 HOURS.**
Subjects: i. Reading and Writing ii. Listening iii. Speaking

◆ **FIRST CERTIFICATE IN ENGLISH (FCE) – 150 HOURS**
Subjects: i. Reading ii. Writing iii. Use of English iv. Listening v. Speaking

◆ **CERTIFICATE IN ADVANCED ENGLISH (CAE) – 200 HOURS.**
Subjects: i. Reading ii. Writing iii. Use of English iv. Listening v. Speaking

Please visit our website at www.cambridge ESOL.org.

**Speaking** பரீட்சையின்போது ஒவ்வொரு மாணவனும் ஆங்கிலேயருடன் சரளமாக ஆங்கிலத்தில் அரை மணி நேரம் பேச வேண்டும். எனவே இந்தப் பாடநெறி ஒன்றில் சேர்ந்து கல்வி கற்பவர் தனியாக **Spoken English** பாடநெறியைக் கற்க வேண்டிய அவசியமில்லை.

- Cambridge ஆங்கிலப் பரீட்சைகள் வருடந்தோறும் June, December மாதங்களில் உலகில் 130 நாடுகளில் நடைபெறுகின்றன. 2006ம் ஆண்டு June மாதம் நடைபெற இருக்கும் பரீட்சைக்கான வகுப்புக்கள் **05.01.2006**ல் ஆரம்பமாகின்றன. **December 5**ம் திகதியில் இருந்து நீங்கள் நேரில் வந்து எமது நிலையத்தில் விபரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்
- உடனடியாக **BRITISH COUNCIL** இன் ஆதரவுடன் **05.01.2006** இல் ஆரம்பிக்க இருக்கும் வகுப்பபுக்களில் சேருங்கள். நிச்சயமாக உங்களை பரீட்சையில் சித்தியடைய வைப்போம்.
- இதுவரை 50 மாணவர்களுக்கு மேலாக November 26 இல் **University of Colombo** இல் நடைபெற்ற **University of Cambridge**பரீட்சைகளை எடுத்துள்ளனர். இந்த மாதம் நடைபெறும் FCE பரீட்சையையும் எமது மாணவர்கள் எடுக்கின்றனர்.

**புதிய வகுப்புக்கள் 05.01.2006 இல் ஆரம்பமாகின்றன.**

## BRITISH COLLEGE OF ENGLISH

141, ADIYAPATHAM ROAD, THIRUNELVELY.

(திருநெல்வேலிச்சந்திக்கும் கல்வியங்காட்டுச் சந்திக்கும் இடையே)

T.P.No: 0779179476


Sri Lanka Red Cross Society
International Federation of Red Cross and Red Crescent Societies
Danish Red Cross Psychosocial Support Programme

**Project Accountant, Jaffna**

The Sri Lanka Red Cross Society (SLRCS) as a member of the International Federation of the Red Cross and Red Crescent has a long history of humanitarian work in Sri Lanka. The Danish Red Cross (DRC) is supporting the SLRCS in a School-based Psychosocial and Health programme for Children in Jaffna district

**Qualifications and experience required:**

- University degree or advanced education certificate in finance and accounting OR significant full-time working experience as an accountant (more than 5 years)
- Excellent knowledge of Tamil and English, written and verbal
- Significant recent working experience in accounting and financial management
- Ability to monitor budgets and plans
- Familiarity with procurement procedures and logistical systems preferred
- Excellent organisational, interpersonal and communication skills a must
- Red Cross volunteers or members will be prioritised
- Previous experience in NGO preferred
- Excellent computer skills in MS Office (Word, Excel, database specifically).

**Responsibilities**

A Project Officer is recruited at branch level; the Project Officer is sponsble for support and supervision of the Project Accountant.

The Project Accountant will be responsible for management and reporting on financial aspects of the project implemented by SLRCS Jaffna; under guidance of the Project Officer the Project Accountant will implement, support and supervise the financial implementation of project components. Technical and managerial support and supervision will be provided by the Project Officer.

Applications should be submitted no later than the 11th of December 2005

**The Branch Executive Officer**
**Sri Lanka Red Cross Society**
**73, Kandy road,Jaffna.**

Only short-listed candidates will be contacted


# 4வது வருடத்தில் BBS இன் 4 வளாகங்கள்



யாழ்ப்பாணம் கோயில் வீதி | யாழ்ப்பாணம் கண்டி வீதி | பருத்தித்துறை கிராமக் கோட்டடி | மானிப்பாய் ஆலடிச்சந்தி

**Year 1-5 English Medium**

*Week End Classes* நடாத்தப்படும்.

ஆங்கிலம், கணிதம், சுற்றாடல், பாடல்கள் ஆகிய பாடங்கள் நடைபெறுகின்றன. மேற்கூறப்பட்டயாவும் எமது யாழ் நகர் வளாகங்களில் நடாத்தப்படுவது போன்று மானிப்பாய் வளாகத்திலும் சிறந்த கொழும்பில் பயிற்றப்பட்ட ஆசிரியர் களினால் நடாத்தப்படும்.

ஆங்கில மொழி மூலமான பாலர் பாடசாலை

வயது 2+ முதல் வயது 3 வரை Play Group

வயது 3+ முதல் வயது 4 வரை Montessori

வயது 4+ முதல் வயது 5+ வரை Pre-School

விசேட அம்சங்கள்

- ஆங்கில மொழிமூலமான சிறந்த கற்பித்தல்.
- தமிழ் கட்டாய பாடமாக கற்பிக்கப்படும்.
- பிள்ளைகளின் தனிப்பட்ட திறமைகளை வெளிப்படுத்தும் வருடாந்த நிகழ்வுகள்.
- முன்பள்ளியை பூர்த்தி செய்யும் மாணவர்கள் சான்றிதழ் வழங்கி கௌரவிக்கப்படுவார்.

BBS ஆல் நடாத்தப்படும் மற்றைய ஆங்கில மொழி பாடநெறிகள்

- Diploma in English
- Certificate in English
- IELTS

5+ to 14+ சிறார்களுக்கு

- PRE-FOUNDATION
- FOUNDATION
- LOWER INTERMEDIATE
- INTERMEDIATE
- UPPER INTERMEDIATE

## BRITISH BUSINESS SCHOOL

இல:140, கோவில் வீதி, யாழ்ப்பாணம். | பருத்தித்துறை சாலை, கிராமக் கோட்டடி, புலோலி. | இல:174,கண்டி வீதி, யாழ்ப்பாணம். | இல:252, யாழ்ப்பாண வீதி, ஆலடிச்சந்தி

HOT LINE : 021-222-5796 e-mail: british.businessschool@gmail.com


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## 25 வருட திருமண வாழ்த்துக்கள்



மகிழ்வான மணவாழ்வின் 25 வருடங்களைப் பூர்த்திசெய்த
பருத்தித்துறை மாதனையைச் சேர்ந்த

**திரு.கனகசபை இராமச்சந்திரன்**
**திருமதி கலையரசி இராமச்சந்திரன்**

அவர்களை வாழ்வாங்கு வாழ அன்புடன் வாழ்த்துகின்றோம்.

இ.ஜெயந்தன் (மகன்), இ.தமயந்தி (மகள்),
இ.தனஞ்சயன் (மகன்),
திரு.திருமதி ந.கமலநாதன் (பிரான்ஸ்),
க.பிருந்திகா, க.கஜவன்,
திரு.திருமதி ந.இன்பநாதன் (சுவிஸ்), இ.கிருத்திகா.

மாதனை,
பருத்தித்துறை.
(43526) (24-11-13)

---

வழ.இல.: 143 / 05,
பெறுமதி: 1200,000/-
தன்மை: நாணாவிதம்,

வழக்காளி
பொ.குணபாஸ்கரன்,
இல.69, திருவையாறு,
கிளிநொச்சி.

எதிராளி
1. செ.நாராயணதாஸ்,
02/52, கைலெவல் வீதி,
கொழும்பு.
2. திரு.சிவானந்தன் சுஜீந்திரன்,
38,பீச் றோட், கல்கிசை, கொழும்பு.
3. திரு.து.ஜெயமோகன்,
ஏழாலைச் சந்தி, ஏழலை.

## பகிரங்க அறிவித்தல்

மேற்படி இலக்க வழக்கின் 2ஆம் எதிராளியாகிய திரு. சிவானந்தன் சுஜீந்திரன் ஆகிய உமக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கின் அழைப்பாணை உரிய முறைப்படி உமக்கு சேர்ப்பிக்கப்பட முடியாத காரணத்தால் இப்பகிரங்க அறிவித்தல் செய்யப்படுகிறது.

இவ்வறிவித்தல் ஏதேனும் ஆட்சேபனை இருப்பின் நீரோ அல்லது உம்மைச் சார்ந்தவர்களோ மன்றில் தோன்றி 21 நாள்களுக்குள் உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு வேண்டப்படுகின்றீர். தவறும் பட்சத்தில் நீதிமன்றில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதனை அறியத்தருகின்றோன்.

சி.அருண்,
சட்டவாளர்,
இரத்தினபுரம்,
கிளிநொச்சி.

செ.மாணிக்கராசா
பதிவாளர்
தமிழீழ மாவட்ட நீதிமன்று,
கிளிநொச்சி.

(43533)(24-11-13)

---

## நீங்காத நினைவலையில் ஓராண்டு

மண்ணில் 15 • 02 • 1947



விண்ணில் 13 • 12 • 2004

**அமரர் சின்னம்பொடி கோபால்**
(இ.போ.ச.சாரதி)
திதி: 04.12.2005

இல்லத் தலைவனெனும் இலக்கணத்தில் வாழ்ந்து
பாரினிலே எம்மை சிறப்புடன் வாழ வைத்த
எமது அன்புத் தெய்வமே அப்பா!
உங்கள் மதிமுகம் எப்போ காண்போம் இனி!

04.12.2005 இல் நடைபெறும்
அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும்,
மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு
அன்புடன் அழைக்கின்றோம்.

தார்மகுலசிங்கம், ச.ச.நி.,
வல்வெட்டி. (43312)(51-11-17)

தகவல்:
குடும்பத்தினர்.

---

## அரச வம்ச.....

(9ஆம் பக்கத் தொடர்ச்சி)

அநுரா பண்டாரநாயக்கவும் அப்படியே தொடர்ந்து நிலச்சீமாட்டியாகவும், நிலச்சீமானாகவும் வாழ்கின்றனர். நவீன ஆடை அணிகலன்களுடன் கூடிய நிலப்பிரபுத்துவ வாழ்க்கை முறையே அவர்களது வாழ்நிலையாகும்.

பண்டாரநாயக்கா ஒரு குட்டி இளவரசனாய், கறுப்பு வெள்ளையனாய் முற்றிலும் ஆங்கிலப் பண்பாட்டுடன் இலங்கையில் வளர்க்கப்பட்டார். நாடு கடந்து ஒக்ஸ்போட் பல்கலைக்கழகத்திற்கு இவர் படிக்கச் சென்றபோது அங்கு இவர் முற்றிலும் ஆங்கிலப் பாணியைக் கொண்டவராய் இருந்தபோதிலும் வெள்ளையர்கள் இவரை "கறுப்பனாகவே" நடத்தி புறக்கணித்தனர். இலங்கையில் வெள்ளையரின் தொங்கு தசையாகப் பண்டாரநாயக்க குடும்பம் இருந்தபோதிலும் நகத்தை வெட்டுவது போல் இங்கிலாந்தில் அவரைப் புறந்தள்ளினார்கள். அப்போதுதான் பண்டாரநாயக்காவிற்கு ரோசம் வந்தது. இப்படிப் பட்டப்படிப்பை படித்துக்கொண்டிருந்த காலத்தில் அவர் ஆங்கிலேயர் மீது விரக்தி அடைந்தார். இதனைப் பற்றி அவர் தனது எழுத்துகளிலும் பேச்சுகளிலும் மிகவிரக்தியுடன் குறிப்பிட்டுள்ளார். இவ்வாறு ஒக்ஸ்போட் பல்கலைக்கழகக் கால விரக்திகளின் பின்னணியில் இந்திய தேசியப் போராட்டத்தில் ஈடுபட்ட பலரை அங்கு சந்தித்து அவர்களுடன் பழகலானார். அக்காலத்தில் இவர் தன்னை ஒரு "முற்போக்காளனாக" வடிவமைத்தார்.

பண்டாரநாயக்கா இலங்கை திரும்பியதும் அவரிடம் இந்த "முற்போக்கு" வாடை வீசியது. தனது தந்தையாரின் அடிவருடிப்பாதைக்குப் புறம்பாக இலங்கையின் விடுதலை பற்றிய பாதை யில் அடியெடுத்து வைக்கலானார். ஆனால், மிகவிரைவில் பண்டாரநாயக்கா தன்னை ஒரு சந்தர்ப்பவாதி என்று நிரூபிக்கலானார். பௌத்த சிங்கள மக்களின் வாக்குகளைப் பெறும் நோக்குடன் இவர் தன்னை கிறிஸ்தவத்திலிருந்து பௌத்தத்திற்கு மதமாற்றம் செய்துகொண்டார். ஆதலால் இவரை "டொனமூர் பௌத்தன்" என்று அழைப்பர். தனது நிலப்பிரபுத்துவ வாழ் நிலையை உறுதிப்படுத்தும் வகையில் கண்டியில் ஒரு மிகப் பெரிய நிலப்பிரபுத்துவப் பிரதானி குடும்பத்தில் தன்னைவிடவும் 17 வயது குறைந்த சிறிமாவோவைப் பேச்சுத் திருமணம் செய்துகொண்டார். வெள்ளையர் பொறுத்து இவரிடம் கசப்புணர்வு இருந்திருப்பினும் இலங்கையின் சமூக வாழ்நிலை பொறுத்து பண்டாரநாயக்கா தனது பிரபுத்துவ வாழ்வை இறுக்கிப் பற்றிக்கொண்டார். இதன் மூலம் இவரிடம் ஏற்பட்டிருந்ததாகக் கருதப்பட்ட மனமாற்றம் சந்தேகத்திற்கு உரியதாகியது. (வளரும்)

---

## பிரபாவின்....

(5ஆம் பக்கத் தொடர்ச்சி)

யப்போகும், இந்திய - இலங்கை - நோர்வே ஆகிய நாடுகள் பங்கேற்கும் இருநாள் மாநாட்டின் முடிவில்தான் இலங்கையின் தலைவிதி தங்கியிருக்கின்றது.

நோர்வே அனுசரணைப் பணியைத் தொடர்வதை இந்தியா விரும்புவதாகச் செய்திகள் வெளியாகின்றன. அவ்வாறு நோர்வேயின் பணிநிலை தொடர இந்தியா வலியுறுத்துமாயின், சமாதான முயற்சிகள் ஓரளவு நகரச் சாத்தியம் ஏற்படும். அதைவிடுத்து இந்தியா முழுமையாக அனுசரணைப் பணி எதிலும் இறங்க முற்பட்டு, சமாதான முயற்சிகளை அகரவரிசையில் இருந்து ஆரம்பிக்க முற்படுமேயானால், தமிழர் தரப்பின் குறுகியகால இடைவெளி நாள்கணக்கில் குறைந்து நாடு ஒரு யுத்தத்துக்கு முகம் கொடுக்கும் சூழல் ஏற்படும் என்று எச்சரிக்கின்றனர் நோக்கர்கள். அடுத்தகட்ட நகர்வுகள் எப்படி அமைந்தாலும், யுத்தத்தை நோக்கி நாட்டை இட்டுச்செல்லும் வரலாற்றுத் தவறை மஹிந்த செய்வாரா? இல்லையா? என்பதற்கான பதில் அடுத்தடுத்த வாரங்களில் தெரிந்துவிடும்.

தமிழர் தரப்பு யுத்தத்தை விரும்பாது, சமாதான வழிமுறைகளில் பற்றுறுதி கொண்டு விடுத்துள்ள செய்தியை மஹிந்த பற்றிப்பிடிப்பாரா? அல்லது உதறித்தள்ளிவிடுவாரா? என்பதைப் பொறுத்திருந்து பார்க்க வேண்டும்.

---


FOCUS NET - ஃபோக்கஸ் நெற்
(யாழ். இந்துமகளிர் கல்லூரி முன்பாக)
120, அரசடி வீதி, யாழ்ப்பாணம்.
வழங்கும் விசேட சலுகை
இலவச அமெரிக்கன் வீசா - 2007
இன்று - இறுதி நாள்
எமது நிறுவனத்தினூடாக விண்ணப்பிக்க
கட்டணம் ஏதுமில்லை.
இலவசம்
எம்மால் மட்டுமே
முடிந்த ஒன்று.
(43530) (24-11-13)


---

## 31ஆம் நாள் நீங்காத நினைவுகள்

மண்ணில் 23 • 01 • 1966



விண்ணில் 04 • 11 • 2005

**அமரர் சிவசுப்பிரமணியம் ஸ்கந்தகுமார்**
(இயக்குநர், கணித அறிவு வளர்சோலை - மூளாய் வீதி, வட்டுக்கோட்டை)

இளந்தென்றல் வீசுஞ் சோலையாய்
இருந்தெம் வீடு
இன்று; புயல் கலைத்துப் போட்ட பாலையாய் போனதே;
எங்கள் ஒளிவிளக்கே!
ஏன் ஒளியிழந்து போனாய்?
எங்களை ஏன் இருளில் விட்டாய்?
தேடித் தேடிக் களைத்தன கண்கள்
ஏங்கி ஏங்கி சோர்ந்தனவெம் மெய்கள்
உங்கள் நீங்கா நினைவுகளுடனேயே.....

உங்கள் பிரிவால் வாடும்:
அம்மா, மனைவி, பிள்ளைகள்,
அண்ணா (கனடா).

(சி/46606)(24-11-13)

---

## மரண அறிவித்தல்



**கணபதிப்பிள்ளை தனபாலசிங்கம்** *(ராசப்பா)*

(முன்னாள் லிகிதர் - துறைமுக அதிகாரசபை கொழும்பு
Arrow driving school உரிமையாளர் - ரொறன்ரோ, கனடா)

ஆவரங்காலைப் பிறப்பிடமாகவும் தற்போது ரொறன்ரோ, கனடாவில் வசித்தவருமான கணபதிப்பிள்ளை தனபாலசிங்கம் (ராசப்பா) அவர்கள் 30.11.2005 அன்று இறைபதம் எய்திவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை - தங்கம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற தர்மவரதர் - ராஜேஸ்வரி (பருத்தித்துறை) தம்பதியரின் அன்பு மருமகனும் ராகினியின் அன்புக் கணவரும் சிவபாக்கியம், காலஞ்சென்ற பாலசிங்கம் (நவரத்தினம்), பரஞ்சோதி, சிதம்பரநாதன், கமலாதேவி, நவரத்தினராஜா, சரோஜினிதேவி, நவரத்தினராணி, நடேசன், யோகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரரும் பத்மினி, கிருஸ்ணதாசன், குகதாசன், சத்தியசீலன், சற்சொரூபி, பாக்கியா, சண்முகலிங்கம், பவளவல்லி, புவனேஸ்வரி, அமுதராணி, தம்பிநாதன், ஞானலோஜினி, குமாரதாசன், பாலச்சந்திரன்,நிர்மலா, ஆனந்தன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ரமணி, ராசன், மாதவன், ராதை, சத்தியசீலன், குணசீலன், குணவதனி, நளினி, நந்தினி, மதிவதனன், பிரதீபன், சுதர்சன், ஜனகன் ஆகியோரின் சித்தப்பாவும் தாரணி, அருளினி, ரமணன், வான்மதி, சொரூபன், பிரசன்னா, திசானி ஆகியோரின் பெரியப்பாவும் மாலினி, இளங்கோ, காலஞ்சென்ற பவானி, ரஜனி, நவநீதன், சுதா, ஜெயந்தி, ராஜராஜன், சற்குணராஜன், ரேணுகா, றஜீபன், ராகுலன், உமாசங்கர், குமரன், பிரணவன், தயாளசொரூபன், தாரகா, ராம்குமார், ரசிக்கா,வாணி ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் திங்கட்கிழமை 05.12.2005 காலை 10 மணியளவில் கனடாவில் நடைபெறும்.

இத்தினத்தில் ஆவரங்காலிலுள்ள அன்னாரது இல்லத்திலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனை இடம்பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தொடர்புகளுக்கு: 416 2881755 (கனடா),
0779590723 (ஆவரங்கால்).

தகவல்:
ராகினி (மனைவி-கனடா), சகோதர, சகோதரிகள்,
மைத்துனர்கள், மைத்துனிமார்,
(சிவன் வீதி, "அருளகம்", ஆவரங்கால்).

(43568)(24-11-13)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விற்பனைப் பிரதிநிதிகள் தேவை

கொழும்பில் இயங்கிவரும் தனியார் நிறுவனத்திற்கு யாழ்ப்பாணத்திற்கும் அதனைச் சூழவுள்ள பிரதேசங்களிற்கும் விற்பனைப் பிரதிநிதிகள் தேவை. முன்அனுபவம் விரும்பத்தக்கது. சகல தகைமைச் சான்றிதழ்களின் பிரதிகளுடன் விண்ணப்பிக்க வேண்டிய முகவரி-

Manager, Power Green, 49, St.Lawrence Road, Wellawatte, colombo.06

(26-13-17) (சி/46455)


# பேனை வடிவ பிஸ்டல் மீட்பு!

அநுராதபுரம், டிசெ.4

அநுராதபுரம் திறப்பணைப் பிரதேசத்திலிருந்து நவீனரக பேனை மாதிரியிலான சிறிய துப்பாக்கியொன்றை அநுராதபுரப் பொலீஸார் கைப்பற்றியுள்ளனர்.

'பொயின்ற் இரண்டு இரண்டு' (.22) என்ற ரகத்திலான இந்த துப்பாக்கியை வைத்திருந்த - இராணுவத்திலிருந்து தப்பியோடிய முன்னாள் சிப்பாய் - ஒருவரும் பொலீஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

எட்டு மாதங்களுக்கு முன்னர் இராணுவத்திலிருந்து தப்பியோடிய இந்தச் சிப்பாய் பல்வேறு குற்றச்செயல்களில் ஈடுபட்டமையும் விசாரணைகளின் போது தெரியவந்துள்ளதாம்.

அநுராதபுர பொலீஸார் மேலதிக விசாரணைகளை நடத்தி வருகின்றனர். (க)

## சேவை முன் பயிற்சி

வட-கிழக்கில் வழிகாட்டலும் ஆலோசனையும் பாடத் துறைக்குப் புதிதாக நியமிக்கப்பட்ட பட்டதாரி ஆசிரியர்களுக்கு நான்கு தினங்கள் திருகோணமலையில் சேவை முன் பயிற்சிக் கருத்தரங்கு நடைபெறவுள்ளது.

இம்மாதம் 16 ஆம் திகதி முதல் நான்கு தினங்கள் இந்தக்கருத்தரங்கு நடைபெறவுள்ளது என்றும்-

நியமனம் பெற்ற சமூகவியல் பட்டதாரிகள் 133 பேரும் இந்தக் கருத்தரங்கில் தவறாது கலந்து கொள்ளவேண்டும் என்றும்- அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-11)

## ஈரவிழிகளுடன் ஈராண்டு நினைவஞ்சலி

தோற்றம் 22 * 11 * 1932



மறைவு 26 * 11 * 2003

### அமரர் தம்பிஐயா பொன்னம்பலம்

குடும்பத்தின் குலவிளக்காய் வாழ்ந்து
எம்மை அன்புடன் அரவணைத்து
நன்னெறிகாட்டி வாழ வைத்த
எங்கள் அன்புத் தெய்வமே!
உங்கள் ஆத்ம சாந்திக்காக
என்றும் இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

14, கருவேலடி லேன்,
கொக்குவில் கிழக்கு.

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(43523)(26-17-13)


## இறுதிச் சந்தர்ப்பம் தவறவிடாதீர்கள்

யாழ்.பல்கலைக்கழகத்தில் 06, 07-10-2005 இல் பட்டம் பெற்ற மாணவர்களின் Video, புகைப்படப் பிரதிகள் விநியோகிக்கப்படுகின்றன. உடன்பதிவு செய்து பெற்றுக் கொள்ளவும்.

காலம்:- 03.12.2005 - 11.12.2005
நேரம்:- காலை 8 மணி - தொடக்கம்....
இடம்:- Pon Digital Video, லக்ஷிமி நாதம்,
புகைப்படக் கலையகம்
C/O K.கண்ணன்
இல. 90, சட்டநாதர் சிவன் கோயில் வீதி,
(இளங்கலைஞர் மன்ற வீதி)
நல்லூர் வடக்கு, யாழ்ப்பாணம்.

தொடர்புகளுக்கு: 0777238837 மதன், 0776544158 தர்மா

11.12.2005 இன் பின்பு ஆயின், வவுனியா கலையகத்துடன் தொடர்பு கொள்ளவும்.

இல.11, முதலாம் குறுக்குத்தெரு, வவுனியா. T.P. 0244589659.

(43485) (21.45.46)



## அபூர்வமான மூலிகைகளின் ஒன்றிணைப்பு பரிபூரணமான நோய் நிவாரணத்திற்கான வழி.

பரிசோதனை மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது

Baraka® பரகா

தற்பொழுது உங்கள் யாழ் நகரிலும்!

ஆயுர்வேத திணைகளத்தின் அனுமதி இலக்கம் 3/1/5/4/94/30

**DIABsol** (Black Seed Oil)



இயற்கையாக நீரழிவு நோயிலிருந்து நிவாரணம் பெற வேண்டுமா?

Baraka கருஞ்சீரகத்தினால் தயாரிக்கப்பட்ட வில்லைகள் மருத்துவ ஆய்வுகளின் மூலம் நிரூபிக்கப்பட்ட 100% இயற்கையான கருஞ்சீரக எண்ணெய்யினால் தயாரிககப்பட்டு நீரிழிவு நோயிலிருந்து நிவாரணத்தை தருவதோடு உடலின் நோய் எதிர்ப்புச் சக்தியை அதிகரிக்கின்றது. ஏனைய ஆங்கில மருந்துகளுடன் உபயோகிக்கலாம்.

**GarliCHOL** (Garlic)



இயற்கையாக கொலஸ்ட்ரோலின் அளவை கட்டுப்படுத்த வேண்டுமா?

Baraka வெள்ளைப்பூண்டு கருஞ்சீரக எண்ணெய் வில்லைகள் 100% இயற்கையாக வெள்ளைப்பூண்டு கருஞ்சீரக கூட்டமைப்பில் தயாரிக்கப்பட்டு உடலிலுள்ள மேலதிக கொலஸ்ரோல் அளவை கட்டுப்படுத்துகின்றது.

**CODseas** (Cod Liver Oil)



உடலை ஆரோக்கிய நிலையில் பேண வேண்டுமா?

கருஞ்சீரகத்துடன் கூடிய மீன் எண்ணெய் (Cod Liver Oil) வில்லைகள் உடலுக்கு தேவையான ஒமேகா-3 மூலகத்துடன், விற்றமின்கள், கனியுப்புக்கள் மற்றும் மேலதிக கல்சியத்தை வழங்கி, உடலை ஆரோக்கியமாக பேண உதவும் மேலும் தடிமன், இருமல் என்பவற்றை தவிர்த்து கண்பார்வை என்பு, பல் என்பவற்றின் தொழிற்பாட்டை அதிகரிக்கும்.

**BeeVIT** (Bee Honey)



இயற்கை மூலிகைகளின் மூலம் உடலுக்கு தேவையான புரதங்கள், விற்றமின்கள், கனியுப்புக்களை பெற வேண்டுமா?

பிரபலமான இரு மூலிகைகளான கருஞ்சீரகம் மற்றும் தேன் என்பவற்றின் கூட்டமைப்பில் தயாரான Baraka கருஞ்சீரக தேன் வில்லைகள் நாளாந்தம் உடலுக்கு தேவையான ஆரோக்கிய சக்தியை வழங்குகின்றது மேலும் உடலுக்கு தேவையான மேலதிக புரதங்கள்,விற்றமின்கள், கனியுப்புக்களை வழங்கி உடலின் நோயெதிர்ப்பு சக்தியை அதிகரித்து உடலை பாதுகாக்கின்றது.

Piccaso Ads

100% இயற்கை மூலிகையினால் தயாரிக்கப்பட்டதினால் ஏனைய மருந்துகளுடன் பாவிக்க முடியும்.

HFAC SRI LANKA

அனைத்து பரகா உற்பத்திகளையும் ஏகவிநியோகஸ்தர்களான WESCO PHARMACY JAFFNA இடம் பெற்றுக்கொள்ளலாம்.
Tel : 021 2223188



EXPO LANKA

EXPOLANKA PHARMACEUTICALS (PVT) LTD.
11A, Mile Post Avenue, Colombo - 03 Tel :- 0112 676398/9
email. expopharma@expo.slt.lk, www.barakaoil.com

Baraka — Your health partner in life


# 20 ஆண்டுகள் கடந்தோடினாலும் எங்கள் உள்ளம் உங்கள் நினைவை மறவாதையா!



ஜனனம் 14.12.1924 மரணம் 04.12.1985

அன்புக்கோர் அணிகலனாய் பண்புக்கோர் இருப்பிடமாய்
அவனியது புகழும் அன்பனாய் மிளிர்ந்தீர்!
இன்ப வாழ்வு நாம் வாழ தன்னையே அர்ப்பணித்த ஐயாவே!
இன்றைய நாளில் நெஞ்சமதில் நினைந்து உருகுகின்றோம்
துன்ப சாகரத்தில் நாம் துணையின்றித் தவிக்கின்றோம்
இருபது ஆண்டுகள் மறைந்தாலும் மறவாது உங்கள் நினைவு
என்றுமே எங்கள் இதயங்களில் நினைவுச்சுடராய் ஒளி வீசும்
உங்கள் ஆத்மா சாந்தி பெற.......

## அமரர் இ.க.சண்முகநாதன்

முன்னாள் கல்வி அதிகாரி, சமூகசேவகன், நல்லாசான்

நினைவில் நிலைத்திருக்கும்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

137, பலாலி வீதி,
திருநெல்வேலி.

(43519)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வன்னியை உலுக்கிய பெருவெள்ளம்...!



கடந்த இரு வாரங்களுக்கு முன்னர் வன்னிப் பகுதியெங்கும் ஒரே வெள்ளக்காட்சி. பார்க்கும் இடமெங்கும் நீரோட்டங்கள். வீதிகளில் படகுச்சேவை. கேட்பதற்கு நகைச்சுவையாகவும் செய்தியாகவும் உள்ளது. ஆனால், இப்பகுதி மக்கள் பட்ட அசௌகரியங்கள் கொஞ்சமல்ல.

இரு நாள்கள் தொடர்மழை. ஸ்ரீலங்காவின் தென்பகுதி ஜனாதிபதித் தேர்தல் முடிவுகளைக் கொண்டாடிக்கொண்டும், அதுபற்றி ஆய்வுகளைச் செய்துகொண்டும் இருந்தபோது தமிழர் தாயகம் வெள்ளப் பெருக்கில் திண்டாடிக்கொண்டிருந்தது.

விவசாயப் பிரதேசமான வன்னிப் பெருநிலப்பரப்பு பல நீர்ப்பாசனக் குளங்களையும் ஆங்காங்கே சிறு சிறு குளங்களையும் கொண்டது. தொடர்மழையால் அனைத்துக் குளங்களும் நிரம்பி வான் பாயத்தொடங்கின. வன்னியில் உள்ள அனைத்துக் குளங்களும் சமநேரத்தில் வான் பாயும்போது அவ்வளவு நீரும் அதைவிட மழை நீரும் சேர்ந்து வன்னியை வெள்ளக் காடாக்கியது.

கிளிநொச்சி மாவட்டத்தில் மிகப்பெரிய நீர்த்தேக்கமான இரணைமடுக் குளத்தின் நீர் மட்டம் திடீரென உயர்ந்தது. அக்குளம் வான் பாயத்தொடங்கியதும் மேலதிக நீரை வெளியேற்றும் பதினொரு வான் கதவுகளும் சமநேரத்தில் முழுமையாகத் திறந்து விடப்பட்டன.

இதனால் பேரிரைச்சலுடன் குளத்திலிருந்து வெளியேறிய நீர் வட்டக்கச்சி பன்னங்கண்டிப் பகுதியை மூடியது. முன்னறிவித்தலுடன் இக்குளம் திறக்கப்பட்டதால் உயிரிழப்புக்கள் தவிர்க்கப்பட்டாலும் சொத்தழிவுகளைத் தவிர்க்க முடியவில்லை.

பன்னங்கண்டிப் பகுதியூடாகவே கிளிநொச்சி - வட்டக்கச்சி பிரதான வீதி செல்கின்றது. இவ்வீதியின் மேலாக மூன்று அடி உயரத்தில் வேகமாக நீர் பாய்ந்தது. இதனால் போக்குவரத்து தடைப்பட்டது. வட்டக்கச்சி ஊடாகச் செல்லும் இந்த நீர் பரந்தன் - முல்லை வீதியை மூடிப் பாய்ந்தது. இதனால் அவ் வீதியிலும் போக்குவரத்து தடைப்பட்டது.

இக்குளத்தைவிட கல்மடுக்குளம், கனகாம்பிகைக்குளம், கரியாலை நாகபடுவான் குளம், விசுவமடுக்குளம், முத்தையன்கட்டுக் குளம், அக்கராயன் குளம் என பெரிய நீர்த்தேக்கங்கள் அனைத்தும் வான்பாய்ந்ததால் அதே வெள்ள நிலைதான் சகல வீதிகளிலும் ஏற்பட்டது.

அக்கராயன் குளத்தின் பாதுகாப்பு அணைக்கட்டு உடைக்கப்பட்டு ஆபத்தான நிலையில் இருந்தது. எனினும், குளத்திற்குப் பாதிப்பு ஏற்படவில்லை.

விசுவமடுக்குளம் அபாயநிலையில் இருந்ததால் பரந்தன் - முல்லைசாலை போக்குவரத்தினை தற்காலிகமாக இடைநிறுத்த வேண்டியிருந்தது.

கிளிநொச்சியிலிருந்து அக்கராயன் செல்லும் பாதை, பூநகரி செல்லும் பாதை என்பன துண்டிக்கப்பட்டன. துண்டிக்கப்பட்ட இடங்களில் படகுச் சேவைகள் நடந்தன. கிளிநொச்சியில் இருந்து வட்டக்கச்சி செல்லும் பாதை ஐந்து அடி வான் பகுதியில் துண்டிக்கப்பட்டது. இப்பகுதியில் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் உழவு இயந்திரம் மூலம் மக்களை ஏற்றி இறக்கியது.

### உயிரிழப்புகள்

வெள்ளத்தினால் நேரடியாக உயிரிழப்பு ஏற்படவில்லை எனினும் வெள்ளம் காரணமாக ஆங்காங்கே உயிரிழப்புக்கள் ஏற்பட்டன. சாந்தபுரம் கிராமத்தில் 60 வயது வயோதிபர் ஒருவர் வீடு பார்க்கச் சென்ற வேளை நீரில் வீழ்ந்து மரணமானார்.

பன்னங்கண்டி கிராமத்தில் 6 வயது சிறுமி குளிர் காரணமாக உயிரிழந்தார். இவற்றை விட வேறும் சில மரணங்கள் சம்பவித்துள்ளன.

இவ்வெள்ளம் காரணமாக தொற்று நோய்கள் ஏற்படத் தொடங்கின. இதனாலும் சில இழப்புக்கள் ஏற்பட்டன.

அத்துடன், வன்னியின் முக்கிய பொருண்மிய வளமான காலபோக நெற்செய்கை முற்றாக பாதிக்கப்பட்டது. பெரும்பாலான நெல் வயல்களை வெள்ளம் மூடி நின்றதால் அவை அழிவடைந்துள்ளன. இவற்றை விட மரக்கறிச் செய்கைகளும் பாதிக்கப்பட்டுள்ளன.

### அரசின் புறக்கணிப்பு

கடந்த இருபது ஆண்டுகளுக்கும் மேலாக அரசினால் திட்டமிட்டுப் புறக்கணிக்கப்பட்டு வந்த வன்னிப் பிரதேசம் ஒரு பின்தங்கிய பிரதேசமாகவே காணப்படுகின்றது. அரசு இப்பகுதியை விடுவிக்கப்படாத பகுதி எனக் காரணம் காட்டி எவ்வித அபிவிருத்திக்கும் நிதியினை ஒதுக்குவதில்லை.

இதனால் வீதிகள் புனரமைக்கப்படாமல் குண்டும் குழியுமாக காணப்படுகின்றன. நீர்ப்பாசனக் கால்வாய்கள் பாழடைந்த நிலையில்

**வன்னிமடல்**

உள்ளன. மின்சார வசதி இல்லை. தொலைத்தொடர்பு வசதி இல்லை, போக்குவரத்து வசதி குறைவு.

இவ்வாறாக எவ்வித அடிக்கட்டுமான வசதிகளுமற்ற இப்பகுதி தற்போதைய சமாதான காலத்தில் ஓரளவு முளைவிட்டு வளரத் தொடங்கியது. இக்காலத்தில் இவ்வாறான ஒரு பெரு வெள்ளத்திற்கு ஈடுகொடுக்க முடியாமல் தள்ளாடிக்கொண்டிருக்கின்றது.



இத்தொடர் மழையினால் மக்கள் தமது குடியிருப்புக்களிலிருந்து இடம்பெயர வேண்டிய நிலை ஏற்பட்டது. பெரும்பாலான வீடுகள் மண்வீடுகளாகவும் பலத்த பொருளாதார நெருக்கடி காலத்தில் அமைக்கப்பட்ட வீடுகளாகவும் இருந்தமையால் இவ் வெள்ளத்தில் அவை இடிந்து வீழ்ந்துள்ளன.

சில கிராமங்களில் நீர் ஓடும் தரவையில் குடிசைகள் அமைத்து வாழ்ந்தவர்கள் சாதாரண மழைக்கே இடம்பெயர வேண்டி ஏற்பட்டு விட்டது.

பெருமளவு வீடுகள் சேதமடைந்தன. வீதிகள் பெரும் பாதிப்பிற்குள்ளாகியுள்ளன. நெல் வயல்கள் [illegible] முற்றாகச் சேதமடை[illegible] புறுதி வசதியும் அற்ற நிலையில் விவசாயிகளின் நிலை கவலைக்கிடமானது.

# கிளிநொச்சியில் மழையின் பாதிப்பு

### கிளிநொச்சியில்

கண்டாவளை, கரைச்சி, பூநகரி, பச்சிலைப்பள்ளி ஆகிய நான்கு பிரதேச செயலர் பிரிவுகளைக் கொண்ட இம்மாவட்டதில் 6,853 குடும்பங்களைச் சேர்ந்த 28,231 பேர் வெள்ளத்தால் இடம்பெயர்ந்து அகதிகளாயுள்ளனர்.

இவர்கள் 26 நலன்புரி நிலையங்களிலும் உறவினர், நண்பர்களது வீடுகளிலும் தங்கியிருந்தனர். நலன்புரி நிலையங்களாக பாடசாலைகள், ஆலயங்கள், பொதுமண்டபங்கள் செயற்பட்டன. 1,465 வீடுகள் முற்றாக சேதமடைந்துள்ளதுடன் 2,371 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன.

பிரதான வீதிகளில் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் கீழுள்ள 82.1 கிலோமீற்றர் நீளமான வீதியும் வீதி அபிவிருத்தித் திணைக்களத்தின் கீழ் உள்ள 61 கி.மீ. நீளமான வீதியும், பிரதேச சபைக்கான 80 கி.மீ வீதியும் சேதமடைந்துள்ளன.

இவற்றைவிட 352 கி.மீ நீளமான உள் வீதிகள் முற்றாகச் சேதமடைந்துள்ளன.

மொத்தமாக கிளிநொச்சி மாவட்ட அழிவுப் பெறுமதி 892.38 மில்லியன் ரூபா என மதிப்பிடப்பட்டுள்ளது. இந்தத் தொகை மேலும் அதிகரிக்க வாய்ப்பு உள்ளது.

### முழுமையாகப் பாதிக்கப்பட்ட கண்டாவளைப் பிரிவு

இப்பிரதேச செயலர் பிரிவு பெரும்பாலும் முழுமையாக வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட பகுதியாக உள்ளது. பரந்தன், உமையாள்புரம், குமரபுரம், கோரக்கன்கட்டு, மயில்வாகனபுரம் போன்ற கிராமங்கள் அதிக பாதிப்புக்குள்ளான கிராமங்களாகும்.

கடந்த காலங்களில் பாதிக்கப்படாத தருமபுரம் போன்ற ஓரளவு உயர் நிலப்பிரதேசங்களும் பாதிப்புக்குள்ளாகியுள்ளன. இங்குள்ள முரசுமோட்டை, ஐயன்கோயிலடி கிராம மக்கள் இரு பக்கமும் பெரும் ஆறு பெருக்கெடுத்து ஓடியதால் படகுகள் மூலமே மீட்கப்பட்டனர்.

இங்கு 2,929 குடும்பங்களைச் சேர்ந்த 12,115 பேர் இடம்பெயர்ந்தனர். 255 வீடுகள் முற்றாகச் சேதமடைந்ததுடன், 529 வீடுகள் பகுதியளவு சேதமடைந்துள்ளன. 65 கி.மீ. நீளமான உள்வீதிகள் முற்றாகச் சேதமடைந்துள்ளன.

இப்பகுதியில் உள்ள சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களின் குடியேற்ற திட்டமாகிய கல்லாறு கிராமத்தில் உள்ள தற்காலிக வீடுகள் மழையின் தாக்கத்தால் பெரும் பாதிப்பிற்குள்ளாயின. பரந்தன் - முல்லை வீதி போக்குவரத்து துண்டிக்கப்பட்டிருந்தது.

### கரைச்சிப் பிரிவிலும் சேதங்கள் அதிகம்

இப்பிரதேச செயலர் பிரிவில் சாந்தபுரம்,பன்னங்கண்டி,இரத்தினபுரம்,பாரதிபுரம், அக்கராயன், ஸ்கந்தபுரம் ஆகிய கிராமங்கள் பெரும் பாதிப்புக்குள்ளாகின. கிளிநொச்சியில் இருந்து வட்டக்கச்சி செல்லும் வீதியும் அக்கராயன் செல்லும் வீதியும் கனகாம்பிகைக்குளம் செல்லும் வீதியும் போக்குவரத்து துண்டிக்கப்பட்டிருந்தது.

இங்கு 2,466 குடும்பங்களைச் சேர்ந்த 10,110 பேர் இடம்பெயர்ந்திருந்தனர். 1,143 வீடுகள் முற்றாகச் சேதமடைந்தன. 1,275 வீடுகள் பகுதியளவு சேதத்திற்குள்ளானது. 125 கி.மீ. நீளமான உள்வீதிகள் முற்றாகச் சேதமடைந்தன.

### பூநகரிப் பிரிவில்.....

பூநகரிப் பிரிவில் 792 குடும்பங்களைச் சேர்ந்த [illegible] பேர் இடம்பெயர்ந்தனர். 67 வீடுகள் முற்றாகச் சேதமடைந்தன. 550 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்தன. 100 கி.மீ.நீளமான உள்வீதிகள் பாதிப்புக்குள்ளாகியுள்ளன. பரந்தன் - பூநகரி பிரதான வீதி போக்குவரத்து துண்டிக்கப்பட்டிருந்தது.

பச்சிலைப்பள்ளிப் பிரிவில் கச்சார்வெளி, செல்வபுரம், அரசர்கேணி ஆகிய கிராமங்கள் பெரும் பாதிப்புக்கு உள்ளாகின. 666 குடும்பங்களைச் சேர்ந்த 2735 பேர் இடம் பெயர்ந்தனர். 77 வீடுகள் சேதமடைந்தன. 62 கி.மீ. நீளமான உள்வீதி சேதமடைந்தது. A - 9 பிரதான வீதியின் பெரும்பகுதி நீரால் மூடப்பட்டிருந்தது.

### நிவாரண நடவடிக்கைகள்.

இடம்பெயர்ந்த மக்கள் இருந்த நலன்புரி நிலையங்களிற்குத் தேவையான சமைத்த உணவுகளை வழங்கும் செயற்பாட்டில் உடனடியாக தமிழர் புனர்வாழ்வுக் கழகமும் ஈடுபட்டிருந்தது.

இது தனது உப நிறுவனங்கள் ஊடாக இப்பணியினை சிறப்பாக முன்னெடுத்தது. அரச நிறுவனங்களும் அதிகாரிகளும் உடனடியாக ஏற்பட்ட சேதவிவரங்களைக் கணக்கெடுக்கும் பணியில் ஈடுபட்டனர். ஆனால் மக்களது மனிதாபிமான உதவிகளை இவர்கள் உடனடியாக வழங்கவில்லை. தற்போது சில அரச சார்பற்ற நிறுவனங்கள் உணவில்லாத உதவிகளை வழங்கினாலும் உடனடி தேவைகளை இவர்கள் பூர்த்திசெய்ய முன்வரவில்லை.

### தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் மனிதாபிமானப் பணிகள்

இந்த நிலையில் தமிழர் புனர்வாழ்வுக்கழகம் சமைத்த உணவை வழங்கிய அதே வேளை, வெள்ள அபாயமுள்ள இடங்களிலிருந்து மக்களை பாதுகாப்பாக இடம் நகர்த்தியும்,வெள்ளத்தினைக் குறைக்கும் நடவடிக்கைகளிலும் குடிதண்ணீர் வசதிகளைப் பெற்றுக் கொடுப்பதிலும் தற்காலிக மலசல கூட வசதிகளை அமைக்கும் பணிகளிலும் மருத்துவ வசதிகளை வழங்குவதிலும் தடைப்பட்ட வீதிகளில் படகு சேவைகள், உழவு இயந்திர சேவைகள் மூலம் மக்களுக்கு உதவுவதிலும் தனது 1,500 இற்கும் மேற்பட்ட தொண்டர்களையும் பணியாளர்களையும் ஈடுபடுத்திச் செயற்பட்டது.

தற்போது அரசு மூன்று நாள் சமைத்த உணவு வழங்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளது.

**தி.சிவரூபன்**
*(வட்டக்கச்சி செய்தியாளர்)*


நிவாரணம் வழங்கவும் தொடர்ந்து நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ளவர்களுக்கு சமைத்த உணவு வழங்கியும் தேவையான நிதியினை வழங்குமாறு சமூகசேவைகள் அமைச்சைக் கேட்டுள்ளதாக அரச செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.


### வீடுகளுக்குத் திரும்புதல்

தற்போது நீர்வற்றி வருவதால் இடம்பெயர்ந்தோர் தமது வீடுகளுக்குத் திரும்பிக் கொண்டிருக்கின்றனர். எனினும் முற்றாக சேதமடைந்த வீடுகளையுடைய 600 குடும்பங்கள் நலன்புரி நிலையங்களிலேயே தொடர்ந்தும் தங்கியுள்ளனர்.

இயற்கை மழை மூலம் வரும் நீரினை உரிய முறையில் வெளிக்கொண்டு செல்வதற்கான கால்வாய் வசதிகள் அபிவிருத்தி செய்யப்படாமையினாலும் நீர்செல்லும் பகுதிகளில் மக்கள் குடியிருப்புகள் அமைக்கப்பட்டு பாதை தடைப்படுத்தப்பட்டுள்ளதாலுமே இவ்வாறான பெருவெள்ளம் உருவானது. இவற்றைத் தவிர்க்க உரிய அதிகாரிகள் இனியாவது முயல வேண்டும். ✱

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





யாழ். - பருத்தித்துறை வீதியில் நீர்வேலிப் பகுதியில் வீதித்தடைகள் ஏற்படுத்தப்பட்டு போக்குவரத்து தடைசெய்யப்பட்டிருப்பதைப் படங்களில் காணலாம்.
ரயர்கள் எரிக்கப்பட்டதுடன் பாரிய மரக்கிளைகள் வீதிகளில் போட்டப்பட்டு போக்குவரத்து தடைசெய்யப்பட்டிருந்தது.
(படங்கள்: பிரபா)







உலக வலுவிழந்தோர் தினத்தை முன்னிட்டு ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனத்தில் நேற்று இடம்பெற்ற முக்சக்கர வண்டி ஓட்டப்போட்டி நிகழ்வினையும் அங்கு நிகழ்ந்த கண்காட்சியை பிரதமவிருந்தினர் பார்வையிடுவதையும் படங்களில் காணலாம்.
(படங்கள்: பகீரதன்)

# ஜெய்ப்பூர் நிறுவனத்தில் நடந்த வலுவிழந்தோர் தின நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,டிசெ.4

உலக வலுவிழந்தோர் தினத்தை முன்னிட்டு சுண்டுக்குளியில் அமைந்துள்ள யாழ். ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனத்தில் நேற்று வலுவிழந்தோர் தின நிகழ்வுகள் நடைபெற்றன.

நேற்றுமுற்பகல் 9.15 மணியளவில் ஜெய்ப்பூர் நிறுவன தலைவர் திருமதி தி.யோகநாதன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், பிரதம விருந்தினராக யாழ். மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமி கலந்துகொண்டார்.

இந்நிகழ்வில் வரவேற்புரையைத் தொடர்ந்து பிரதம விருந்தினர் உரை இடம்பெற்றது.

தொடர்ந்து அறிமுகவுரையை ஜெய்ப்பூர் செயற்கை அவயவபாவனையாளர் சங்கத் தலைவர் திருமதி கமலா சிவசிதம்பரம் நிகழ்த்தினார். தொடர்ந்து வலுவிழந்தோருக்கான சைக்கிள், முச்சக்கரவண்டி ஓட்டப்போட்டிகள் நடைபெற்றன.

அதனைத் தொடர்ந்து வலுவிழந்தோருக்கான நிறுவனத்தின் புனர்வாழ்வுச் செயற்பாடுகள் பற்றிய விளக்கக் கண்காட்சி, தனிநபர் நன்கொடைத் திட்டத்தின் கீழ் இலவச முச்சக்கரவண்டிகள் வழங்குதல் ஆகிய நிகழ்வுகள் இடம்பெற்றதை அடுத்து போட்டிகளில் பங்கு பற்றியோருக்கான பரிசில் வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது.

மதிய போசனத்தைத் தொடர்ந்து வலுவிழந்தோருக்கான கலைநிகழ்வுகள் இடம்பெற்றன. (எ-12)

இழந்த சக்தியை மீண்டும் பெற்றிடப் பாவியுங்கள்
றோயல் குளுக்கோஸ்
100% சுத்தமானது!
உங்கள் வியாபாரிகளிடம் நீங்கள் குளுக்கோஸ் வாங்கும்போது குளுக்கோஸ் என்று கேட்காமல்
றோயல் குளுக்கோஸ் தாருங்கள்! என்று கேட்டு வாங்குங்கள்!
Packed By:-
ROYAL INDUSTRIES
COLOMBO 12
☎:0777-277670
அனைத்துப் பார்மஸிகளிலும், கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்




ஏக விநியோகஸ்தர்கள்:
சிவா நறுமணப்பூங்கா
288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
☎: 021 222 2567

## பட்டதாரி ஆசிரியர்களுக்கு சேவை முன் பயிற்சி

அச்சுவேலி,டிசெ.4

வடக்கு - கிழக்கில் புதிதாக நியமிக்கப்பட்டுள்ள பட்டதாரி ஆசிரியர்களுக்கு தொடர்ந்து 10 தினங்கள் சேவை முன் பயிற்சி வழங்கப்படவுள்ளது.

புதிதாக நியமனம் பெறும் ஆசிரியர்களுக்கு பாடசாலையில் அவர்கள் கடமை ஏற்பதற்கு முன்னர் குறிப்பிட்ட தினங்கள் சேவைக்கு முந்திய அடிப்படைப் பயிற்சி வழங்கப்படுவது வழமை. ஆனால், அந்த வகையில் பயிற்சி எவையும் வழங்கப்படாமலேயே இந்த வருடம் நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இந்த நிலையில் தற்பொழுது நியமனம் பெற்றவர்களுக்கு கட்டம்கட்டமாக சேவை முன்பயிற்சி வழங்குவதற்குத்தீர்மானிக்கப்பட்டுள்ளது. முதற்கட்டமாக டிசெம்பர் விடுமுறைக்காலத்தில் தொடர்ச்சியாக 10 தினங்களுக்கு சேவை முன் பயிற்சி வழங்கப்படவுள்ளது. வலயங்கள் தோறும் செயற்படும் ஆசிரியர் வளநிலையங்கள் சேவை முன் பயிற்சி நடைபெறுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. (எ-11)

கல்வியாண்டு - 2006
ஆரம்பம்: 12.12.2005 திங்கள் காலை 10 மணி
கீன் கல்லூரி
128/4. பலாலி வீதி. திருநெல்வேலி. T.P.No.: 021 4590395

## ஜனாதிபதி மஹிந்த எதிர்வரும் 16 ஆம் திகதி இந்தியாவுக்கு விஜயம்

கொழும்பு,டிச.04

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மூன்று நாள் விஜயமொன்றை மேற்கொண்டு எதிர்வரும் 16ஆம் திகதி இந்தியா செல்லவுள்ளார்.

விடுதலைப் புலிகளுடன் தமது அரசு நடத்தவுள்ள அமைதி முயற்சிகள் குறித்து அவர் இந்திய அரசியல் தலைவர்களுக்கு விரிவான விளக்கமளிக்கவுள்ளார்.

முன்னதாக இவ்வார ஆரம்பத்தில் இந்தியா சென்றிருந்த வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர ஜனாதிபதியின் இந்திய விஜயத்துக்கான முன்னேற்பாடுகளை அங்கு செய்துள்ளார் என்று கூறப்படுகின்றது. (க)

## விளையாட்டுக் கழகங்களுக்கு உபகரணங்கள் கிடைக்கும்

வலி.தென்மேற்கு (சண்டிலிப்பாய்) பிரதேச செயலகப் பிரிவிலுள்ள பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு வடக்கு - கிழக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களத்தினால் விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்படவுள்ளன.

எதிர்வரும் 7 ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு பிரதேச செயலர் திருமதி ரூபினி வரதலிங்கம் தலைமையில் பிரதேச செயலகத்தில் நடைபெறவுள்ளது.

விளையாட்டு அமைச்சில் பதிவு செய்யப்பட்டதும் ஏற்கனவே பிரதேச செயலகத்தினால் நடத்தப்பட்ட விளையாட்டுப் போட்டிகளில் பங்கு பற்றியதுமான விளையாட்டுக் கழகங்களுக்கே இந்த விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்படவுள்ளதாக பிரதேச விளையாட்டு அலுவலர் எம்.ஆர்.மோகனதாஸ் தெரிவித்தார். (எ-135)

# மரண அறிவித்தல்கள்

## தம்பையா அப்பாத்துரை

(இளைப்பாறிய R.M.P.)

சுண்டிக்குளியைப் பிறப்பிடமாகவும் மூளாய் வீதி, சித்தங்கேணியை வதிவிடமாகவும் தற்போது இந்தியாவை வதிவிடமாகவும் கொண்ட தம்பையா அப்பாத்துரை 02.12.2005 வெள்ளிக்கிழமை இந்தியாவில் காலமாகிவிட்டார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வில்வந் தெரு,
புங்கன் குளம்,
அரியாலை.

தகவல்:
த.சற்குணம்
(கிளைமுகாமையாளர், யாழ். பலநோ.கூ.ச.)

(43562)(32)

## பொன்னம்மா இரத்தினசிங்கம்



அல்வாய் வடக்கைப் பிறப்பிடமாகவும் பிறவுண் வீதி, கலட்டி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பொன்னம்மா இரத்தினசிங்கம் 01.12.2005 அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற க.இரத்தினசிங்கம் அவர்களின் அன்பு மனைவியும் திருமதி இரத்தினரஞ்சினி அழகரத்தினம் (ஓய்வுபெற்ற ஆசிரியை, யாழ். இந்து ஆரம்ப பாடசாலை), இராசேந்திரம் (ஆஸ்திரேலியா), இராசசுந்தரம் (ஆஸ்திரேலியா), யோகேந்திரன் (கனடா), ரவீந்திரன் ஆகியோரின் அன்புத் தாயாரும் த.அழகரத்தினம் (ஓய்வுபெற்ற அதிபர், கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை), திருமதி மனோராணி (ஆஸ்திரேலியா), திருமதி பிரேமிளா (ஆஸ்திரேலியா), திருமதி ஸ்ரீறஜனி (கனடா) ஆகியோரின் அன்பு மாமியும் பிரியதர்சினி, சுதர்சன் ரதி, மகிபன், அகிலன், கிரிசாந் சுசந்தி, நிரோசிகா, சோபிகா, ஆத்மிகா, சங்கர், சுதாசினி ஆகியோரின் பேர்த்தியும் பிரியங்கா, ஜீவிகா, சஞ்ஜே ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (05.12.2005) திங்கட்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கொக்குவில் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொழில்நுட்பக் கல்லூரி முன்பாக,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். (43565)(32)

தகவல்:
குடும்பத்தினர்.

## திருமதி சுந்தரலிங்கம் மகேஸ்வரி



காரைநகர், களபூமியைச் சேர்ந்த திருமதி சுந்தரலிங்கம் மகேஸ்வரி நேற்று (03.12.2005) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் ஆறுமுகம் சுந்தரலிங்கம் (முகாமையாளர் V.M.P. - கொழும்பு) அவர்களின் அன்பு மனைவியும் பரமேஸ்வரி, பூரணம், இராசம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும் பரமேஸ்வரி, கனகலிங்கம், கனகசுந்தரம், இராசபூபதி, பொன்னம்பலம், தம்பிராசா, கணேசலிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.12.2005) ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக தில்லை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வழுக்கோடை, களபூமி,
காரைநகர். (43565)(32)

தகவல்:
ஆ.சுந்தரலிங்கம் (கணவர்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நேற்றுக் கிளிநொச்சியில் சர்வதேச மன்னிப்புச்சபையின் செயலாளர் நாயகம் ஐரெனி சுபைடாகான் அம்மையார் விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப தமிழ்ச்செல்வனை சந்தித்து கலந்துரையாடிய போது எடுக்கப்பட்ட படம்.

# அம்பாந்தோட்டையில் மர்மமான முறையில் இறந்து கிடந்த வெளிநாட்டுப் பறவைகள்!

கொழும்பு, டிசெ.04

அம்பாந்தோட்டைப் பகுதியில் மர்மான முறையில் இறந்து கிடந்த சில வெளிநாட்டுப் பறவைகள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

'பறவைக் காய்ச்சல்' காரணமாக இந்தப் பறவைகள் இறந்திருக்கலாம் என்ற அச்சத்தின் காரணமாகவே இவை பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

அவை பறவைக்காய்ச்சலால் பாதிக்கப்படவில்லையென்றும், ஒவ்வாத காலநிலை காரணமாகவே அவை இறந்தன என்றும் பரிசோதனை முடிவில் தெரியவந்ததாக விலங்கியல் விருத்தி மற்றும் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் டாக்டர் எஸ்.கே.ஆர். அமரசேகர தெரிவித்துள்ளார்.

இது பற்றி அவர் மேலும் கூறியதாவது:-

இப்போது வெளிநாடுகளில் இருந்து பறவைகள் இலங்கைக்கு வருவது அதிகமாகிவிட்டது. அதேநேரத்தில் ஆசியாவில் பறவைக்காய்ச்சலின் அபாயமும் தோன்றியுள்ளது.

இந்த நிலையில் ஆபிரிக்காவில் இருந்து இங்குவந்து அம்பாந்தோட்டைப்பகுதியில் இறந்துகிடந்த அந்தப் பறவைகள் குறித்து அச்சம் எழுந்தது.

அதன் காரணமாக இவற்றைப் பரிசோதனை செய்ததில் அவ்வாறான நோய் ஏதும் அவற்றுக்குப் பீடிக்கவில்லை என்பது தெரியவந்துள்ளது. மாறாக காலநிலை மாற்றம் மற்றும் ஒவ்வாத உணவு போன்றவற்றாலேயே அவை இறந்துள்ளன என்பதும் புலனாகியது.

இது குறித்து மக்கள் அச்சம் கொள்ளத் தேவையில்லை. இவ் வாறான நிகழ்வுகள் குறித்து நாம் மிகவும் விழிப்பாக உள்ளோம். வெளிநாடுகளில் இருந்து இவ்வாறு இலங்கைக்கு வரும் பறவைகள் மீது கண்வைத்துள் ளோம் - என்றார் அவர். (ஐ)


## Management Trainees

பிரபல தனியார் நிறுவனமொன்றுக்கு இலக்கினை அடையக்கூடிய ஆய்வுத்திறன் கெண்ட முகாமைத்துவப் பயிலுநர்கள் தேவை.30 வயதுக்கு உட்பட்ட ஆங்கிலத் தேர்ச்சியுடைய B.Com/B.B.A பட்டதாரிகள் விரும்பத்தக்கது. சுயவிவரக்கோவை மற்றும் தொலைபேசி இலக்கத்துடன் விண்ணப்பிக்கவும்

**Penpals Limited**
545, Sri Sanagaraja Mawatha, Col-10,
Fax: 0112448211

## FEMALE TRAVEL ASSISTANT

WANTEO A FEMALE TRAVEL ASSISTANT P.A.WITH ENGLISH/ COMPUTER KNOWLEDGE FOR A INTERNATIONAL TICKETING OFFICE IN W.T.C SUITABLE ACCOMADATIOW MAY BE ARANGED IF NECESSARY.

FAX C.V.TO 011 2342342

## தேவை

* முகாமையாளர்
(40 வயதிற்கு மேற்பட்டவரும் சிங்கள மொழி தெரிந்தவருக்கும் முன்னுரிமை)
* ஒலிப்பதிவாளர் - நேரில் வரவும்.

**மூர்த்தி வீடியோ மானிப்பாய்.** (43571)

## பொருளியல்

- பகுதிII
பாடஅலகு-5
பணம், வங்கி, பொதுவிலைமட்டம்
திங்,புதன் 3.30P.M
mr.B.கஜீதரன்

* புதிய கல்வி ஆண்டு 2, ஆண்டு6 முதல் O/Lவரை
ஆரம்பம்:10.12.05
சனி8A.M.
SHAMROCK
J/ஈச்சமோட்டை வீதி,


# மரண அறிவித்தல்

## திருமதி அருளம்மா பேரின்பநாயகம்

அரசடிவீதி, திருநெல்வேலியைச் சேர்ந்த திருமதி அருளம்மா பேரின்பநாயகம் அவர்கள் நேற்று (3.12.2005) சனிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (4.12.2005) ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

அரசடி வீதி,
திருநெல்வேலி.
(சி-46618)(53-12-45)
தகவல்:
மருமகன்.


# Computer Hardware Technician

1. Local Area network
(Cabling, Inslation, Administration)
2. Operating system
(win. 95, 98, 2000, XP)
3. Basic Knowledge in Electrical & Electronic

மேலே குறிப்பிட்ட விடயங்களில் முன் அனுபவம் உள்ள ஆண்கள் மாத்திரம் சுயவிவரக் கோவை மற்றும் சான்றிதழ்களுடன் வேலை நேரத்தில் நேரில் வரவும்.

**உதயன் மனிதவள சேவை**
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
(சி-46616)

## நெல்லைசில்க் அதிர்ஷ்டம்

நவம்பர்மாத பட்டுச்சேலை அதிர்ஷ்ட எண் 1645. உரியவர்கள் நேரில் வந்து பட்டுச் சேலையைப் பெற்றுக் கொள்ளலாம்.

சி.அகிலதாஸ் (உரிமையாளர்).


# மரண அறிவித்தல்கள்

## சின்னையா சிவகரன்



மாவிட்டபுரம், சாயுடையைப் பிறப்பிடமாகவும் நீர்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா சிவகரன் அவர்கள் கடந்த (01.12.2005) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் ஜெயமகளின் அன்புக் கணவரும் தயூராவின் அன்புத் தந்தையும் சின்னையா(கந்தசாமி)- சத்தியபாமா தம்பதியரின் அன்பு மகனும் சிவநேசன்(பிரான்ஸ்), சிவயோகன், சிவபதன் ஆகியோரின் அன்புச் சகோதரரும் அருணாசலம் சுபத்திராதேவியின்(லண்டன்), அன்பு மருமகனும் முகுந்தன்(லண்டன்), சிறீமகள்(கனடா) நாமகள்(லண்டன்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.12.2005) ஞாயிற்றுக்கிழமை அளவெட்டி வடக்கு அளவெட்டியில் உள்ள எமது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக பி.ப 1மணிக்கு கேணிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அளவெட்டி வடக்கு,
அளவெட்டி.
(43576)(53-12-45)
தகவல்:
பொ.சத்தியநாதன்
(மாமனார்).

## திருமதி மோகனா தெய்வேந்திரா



கோண்டாவில் கிழக்கு, நாராயணா வீதியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி.சந்திரகலா (மோகனா) அவர்கள் நேற்று (03.12.2005)சனிக்கிழமை காலமானார்.

அன்னார் சி.தெய்வேந்திரா (நிதிக் கிளை களஞ்சியப்பகுதி யாழ்.பல்கலைக்கழகம்) அவர்களின் அன்பு மனைவியும் வாணி (யாழ்.வேம்படி மகளிர் கல்லூரி), யதுகுலன், குருபரன், ஆகியோரின் அன்புத் தாயாரும் பொன்னுத்துரை தம்பதிகளின் அன்புப் புதல்வியும், பொ.கணேசலிங்கம் (கட்டடஒப்பந்தக்காரர்), தவலிங்கம்(மேற்பார்வையாளர் யாழ்.மாநகர சபை), சசிகலா, சூரியகலா, விஜயலக்சுமி (ஆசிரியை வேலணை மத்திய மகாவித்தியாலயம்), மஞ்சுளா ஆகியோரின் சகோதரியும், திருமதி மா.சிவலோன்மணி, வாமதேவன், ஞானசம்பந்தர், உருத்திரராஜா, பிரமதேவன், உமாகரன் ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (04.12.2005) ஞாயிற்றுக்கிழமை நடைபெற்று பி.ப.4 மணிக்கு தகனக் கிரியைக்காக கோண்டாவில் கொட்டைக்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

நாராயணா வீதி,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.
(43568)(53-12-45)
தகவல்:
ரி.தெய்வேந்திரா(கணவன்).

## முழுச்சாமி குமார்இரத்தினம்



நுவரெலியாவைப் பிறப்பிடமாகவும் தற்போது கொலன்டை வசிப்பிடமாகவும் கொண்ட மு.குமார் இரத்தினம் 01.12.2005 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் முழுச்சாமி - ராமாயின் அன்பு மகனும் மணியின் (கொலன்ட்) அன்புக் கணவரும் இராசையா நாகேஸ்வரியின் மருமகனும், அசோக், கண்ணா, கார்த்தி (கொலன்ட்) அவர்களின் அன்புத் தந்தையுமாவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (03.12.2005) சனிக்கிழமை கொலன்டில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்றது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

?,C ஈச்சமோட்டை,
கடற்கரை வீதி, யாழ்ப்பாணம்.
T.P. :0031206599243
(43573)(53-12-45)
தகவல்:
சி.ரூபன்
(பெறாமகன்).

# 31 ஆம் நாள் நினைவலைகள்...



04.11.2005 அன்று இறைவனடி சேர்ந்த எமது கழகத்தின் முன்னாள் உறுப்பினர் அமரர். சிவசுப்பிரமணியம் ஸ்கந்தகுமார் அவர்களின் இழப்பினால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினது துயரத்தில் நாமும் பங்கெடுக்கின்றோம்.

குருதிக்கொடையாளர் கழகம்,
யாழ்.மாவட்டம்.

# கண்ணீர் அஞ்சலி



## திருமதி இரத்தினசிங்கம் பொன்னம்மா

கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை முன்னாள் அதிபர் த.அழகரத்தினம் அவர்களின் அன்பு மாமியார் திருமதி இரத்தினசிங்கம் பொன்னம்மா அவர்களின் மறைவையொட்டி எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

பழைய மாணவர் சங்கம் (43518)(53-12-45)
யா/கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை கொக்குவில்.

# 41 ஆம் நாள் நினைவில்



எமது சக உத்தியோகத்தரும் நலன்புரிச் சங்க சிரேஷ்ட அங்கத்தவருமாகிய திருமதி மா.அ.யூடினா அவர்களின் தாயார் சுவானி.மாகிறேற் (பிலோமினா) அவர்கள் 24.10.2005இல் இறைபதமடைந்தமையை இட்டு இன்று 04.12.2005இல் அன்னாரது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையில் நாமும் பங்கு கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய நாமும் இறைவனை வேண்டுகின்றோம்.

சுகாதாரப்பகுதி ந.பு.சங்க அங்கத்தவர்கள்,
சு.வை.அ.பணிமனை,
யா.மா.சபை.
(43575)(53-12-45)

நானே உயிர்தெழுதலும் ஜீவனுமாய் இருக்கின்றேன்
சு.வை.அதிகாரியும் சக உத்தியோகத்தர்களும் நலன்புரி சங்க அங்கத்தவர்கள்.


## மனோகரா யாழ்ப்பாணம்

இளைய தளபதி விஜய் வெடிக்கும்
காட்சிநேரம்: பு.நே. 10.30, 2.30, 6.30, 9.30
யாழ். மாவட்டத்தில்




## ராஜா யாழ்ப்பாணம்

அநேகரின் வேண்டுகோளுக்கிணங்க இந்தியாவில் 200 நாள்களுக்குமேல் ஓடிய வெற்றிச்சித்திரம்.
சுப்பர் ஸ்ரார் ரஜனி, இளையதிலகம் பிரபு, ஜோதிகா, நயன்தாரா, வடிவேல், வினித், விஜயகுமார் நடித்த
**சந்திரமுகி** காட்சிநேரம்: பு.நே. 10.30, 2.30, 6.30,
(46404)

## நாகம்ஸ் சுன்னாகம்

இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரேதின வெளியீடாக
அர்ஜூன், நமிதா, வடிவேல் நடித்த
காட்சிநேரம் பு.நே.
11.00, 3.00, 7.00,10.00


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசுத்தரப்பை முன்னகர்த்தி புலிகளை நெருங்கிச் செல்லும் நிலையில் நோர்வே

## 'இந்து' நாளேடு இப்படிக் கருத்து

புதுடில்லி,டிசெ.4

இலங்கை இன நெருக்கடியில் விடுதலைப் புலிகளின் தலைமையை நெருங்கிச் செல்ல வேண்டிய நிலை நோர்வேத் தரப்புக்கு ஏற்பட்டிருக்கிறது. அதேவேளை மறுதரப்பில் சமாதான முயற்சிகளில் புதிய அரசு காட்டும் தாமத நகர்வை மாற்றவேண்டிய அவசியமும் நோர்வேக்கு உள்ளது.

- இந்தியாவின் பிரபல நாளேடான 'த இந்து' பத்திரிகை இவ்வாறு கருத்து வெளியிட்டிருக்கிறது.

தற்போதைய நிலையில் நோர்வேத் தரப்பினர் எந்தவேளையிலும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைச் சந்தித்து நடைமுறைப் பிரச்சினைகள் குறித்து ஆராயக்கூடும். நோர்வேயின் அனுசரணைப் பணியை அரசுத்தரப்பினர் வரவேற்கின்றபோதும் அவர்களில் சிலரே இப்பணியிலிருந்து விலகிவிடுமாறு வற்புறுத்துகின்றனர். இந்த நிலை தொடருமாக இருந்தால் அனுசரணைப் பணியைத் தொடர முடியாமற்போகும் என்பதே நோர்வேயின் நிலைப்பாடு ஆகும். - என்று 'த இந்து' நாளேடு தெரிவித்துள்ளது.

இதேவேளை - கருணா குழுவை தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான நிழல் யுத்தத்திற்கு அரசாங்கம் பயன்படுத்தினால் நடைமுறையில் உள்ள பதற்ற நிலை தொடரவே செய்யும் என தெரிவித்துள்ள 'இந்து' நாளிதழ் இலங்கையின் புதிய அரசாங்கம் சிங்கள சார்பு கொள்கையை கடைப்பிடிக்கின்றமையால் தமிழர்கள் தொடர்பில் அந்த அரசாங்கத்தினால் புரிந்துணர்வை ஏற்படுத்த முடியாது என அரசியல் தரப்புகளை சுட்டிக்காட்டி குறிப்பிட்டுள்ளது. (ஐ-3)

## நேற்றும் படையினர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இராணுவத்தினர் மீது நேற்றுமுற்பகல் 11 மணியளவில் இனந்தெரி யாத நபர்கள் கிரனேட் ஒன்றை வீசினர். அது பெரும் சத்தத்துடன் வெடித்ததால் பதற்றம் ஏற்பட்டது. படையினருக்கு காயம் எதுவும் ஏற்படவில்லை. எனினும் அவர்கள் ஆகாயத்தை நோக்கிச் சுட்டனர். இதனால் அப்பகுதி மக்கள் கலவரமடைந்னர். கண்காணிப்புக் குழுவினர் அங்கு வந்து விசாரணைகளை நடத்தினர்.

### படையினரின் தண்ணீர் பவுஸர் மீது கச்சேரியடியில் துவக்குச் சூடு!

யாழ்.நகரில் கச்சேரியடிப் பகுதியில் சென்றுகொண்டிருந்த இராணுவத்தினரின் தண்ணீர் பவுஸர் ஒன்றின் மீது நேற்றுப் பிற்பகல் 2 மணியளவில் துவக்குச் சூடு நடத்தப்பட்டிருக்கிறது.

யாழ்.செயலகத்துக்கு அருகே உள்ள இராணுவ சென்றிக்குச் சமீபமாக வைத்தே பவுஸர் மீது தாக்குதல் நடத்தப்பட்டது. துப்பாக்கிக் குண்டுகள் தாக்கியதில் பவுஸரின் சக்கரங்கள் வெடித்தன. இச்சம்பவத்தின் போது சிப்பாய்கள் எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை. சம்பவம் நடந்த கண்டி வீதியில் சிறிதுநேரம் போக்குவரத்துத் தடைப்பட்டது.

யாழ்.நகரப் பகுதியில் இராணுவ வாகனம் ஒன்றின் மீது துப்பாக்கிச் சூடு ந்த்தப்பட்டிருப்பது இதுவே முதல் சம்பவம் ஆகும்.

### சாவகச்சேரியில் ராணுவ டிரக்டர் தாக்கப்பட்டு சிப்பாய் மரணம்!

நேற்று முன்னிரவு சாவகச்சேரி, டச்சு வீதிப் பக்கமாக படையினருக்கு உணவு விநியோகத்தில் ஈடுபட்டிருந்த உழவு இயந்திரம் ஒன்றின் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டிருக்கிறது. இதில் அந்த உழவு இயந்திரத்தில் சென்றுகொண்டிருந்த சிப்பாய் ஒருவர் உயிரிழந்தார்.

இனந்தெரியாத நபர்கள் இராணுவ உழவு இயந்திரம் மீது கிரனேட் வீசியதுடன் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர் என்றும் கூறப்படுகிறது. படையினர் திருப்பிச் சுட்டனர். இதனால் அப்பகுதி வேட்டொலிகளால் அதிர்ந்தது.

சம்பவத்தை அடுத்து அந்தப் பகுதி ஊடாகச் சென்ற பொதுமக்கள் படையினரால் வழிமறிக்கப்பட்டு கண்டபடி தாக்கப்பட்டனர். படையினரின் தாக்குதலினால் காயமடைந்த மூவர் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டனர்.

மீசாலை மேற்கைச் சேர்ந்தவர்களான யோகலிங்கம் நவரூபன் (வயது23), கந்தசாமி விமலரஞ்சன்(வயது 39) ஆகியோரும் கடமை முடிந்து வீடு திரும்பிக்கொண்டிருந்த சாவகச்சேரி ஆஸ்பத்திரிப் பணியாளரான தர்மலிங்கம் சுபநேசன்(வயது 40) என்பவரும் படையினரால் தாக்கப்பட்டு காயங்களுடன் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டனர்.

இந்தச் சம்பவத்தால் சாவகச்சேரி நகரப் பகுதியில் பெரும் பதற்றம் நிலவியது. நேற்றிரவு 9 மணியளவில் ஹெலிக்கொப்டர் ஒன்று அந்தப் பகுதி மீது பறந்து நோட்டமிட்டது.

இதேசமயம் -

மீசாலைப் பகுதியில் உள்ள படை முகாம் ஒன்றின் மீது நேற்றிரவு நடத்தப்பட்ட கிரனேட் தாக்குதலில் சிப்பாய்கள் மூவர் காயமடைந்துள்ளனர்.

### பரிவர்த்தனை நிலையத்துக்குக் காவல் இருந்த படையினர் மீதும் தாக்குதல்

வடமராட்சியில் மாலு சந்திப் பகுதியில் அமைந்துள்ள ஸ்ரீலங்கா ரெலிகொம் பரிவர்த்தனை நிலையத்தில் காவல் கடமையில் ஈடுபட்டிருந்த படைச்சிப்பாய்கள் மீதும் நேற்று மாலை கிரனேட் தாக்குதல் நடத்தப்பட்டிருக்கிறது.

மோட்டார் சைக்களில் வந்த நபர்கள் படையினர் மீது கிரனேட் குண்டை வீசிவிட்டுத் தப்பிச் சென்றனர் என்று கூறப்படுகிறது.

இச்சம்பவத்தை அடுத்து ஆத்திரமுற்ற படையினர் அப்பகுதியில் வீதிகளில் நின்றிருந்த பொதுமக்களைத் தாக்கினர் என்று தெரிவிக்கப்படுகிறது. இதனால் பெரும் பதற்றம் ஏற்பட்டு நெல்லியடி நகரப் பகுதி வெறிச்சோடியது.

குடாநாட்டில் நேற்று மட்டும் இடம்பெற்ற இந்த ஆறு தாக்குதல் சம்பவங்கள் குறித்து போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு ஆழ்ந்த சிரத்தையுடன் விசாரணைகளை மேற்கொண்டு வருகிறது என்று தெரிவிக்கப்பட்டது.

நேற்றைய சம்பவங்களில் ஒரு படைச் சிப்பாய் கொல்லப்பட்டு ஆறு சிப்பாய்கள் காயமடைந்தனர் என்பதை இராணுவ வட்டாரங்கள் உறுதிசெய்தன.

குடாநாட்டின் பல பகுதிகளிலும் புதிதாகத் துருப்புகள் குவிக்கப்பட்டு கண்காணிப்பு தீவிரப்படுத்தப்பட்டிருக்கிறது.

(ஐ-7-12-15-17-70-78-173-31-117-49-410)

## மூதூரில்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இருந்து விலகி 2000ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் ஐ.தே.கட்சி வேட்பாளராகப் போட்டியிட்டவராவார்.

நேற்று இவர் சுடப்பட்ட சம்பவத்தின் எதிரொலியாக பள்ளிக்குடியிருப்பில் இருந்து மூதூருக்குச் சென்ற தமிழர்கள் மீது குண்டர்கள் தாக்குதல் நடத்தினர். இத்தாக்குதலில் இரு தமிழர் வாள்வெட்டுக்கு இலக்காகி உயிரிழந்தனர். மற்றொரு தமிழர் காயமடைந் தார்.

உயிரிழந்தவர்களில் ஒருவர் பள்ளிக் குடியிருப்பைச் சேர்ந்த இளங்கோ(வயது 30) என இனங்காணப்பட்டுள்ளார். மற்றைய நபர் இனங்காணப்படவில்லை.

தமிழர் ஒருவருக்குச் சொந்தமான ஓட்டோ ஒன்று தீவைத்துக் கொளுத்தப்பட்டது.

இந்தச் சம்பவங்களை அடுத்து அங்கு பதற்றம் நிலவுகின்றது. மூதூரில் சகல கடைகளும் மூடப்பட்டன. வெளிக் கிராமங்களுக்கான போக்குவரத்துகள் யாவும் தடைப்பட்டுள்ளன.

திருகோணமலையில் இருந்து மேலதிக படையினரும் பொலீஸாரும் மூதூருக்குச் அனுப்பப்பட்டுள்ளனர். (ஐ-3-151)

## ஐ.நா.தீர்மானம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காட்சி சேவையையும் தடைசெய்யுமாறும் முன்னாள் ஜனாதிபதி குமாரதுங்க பிரான்ஸ் அரசிடம் கோரினார் என்ற தகவலையும் -

விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு பிரான்ஸில் தமிழர்களிடம் நாளுக்கு ஒரு யூரோ வீதமும் மேலும் தற்போது ஒரு வருடம் 2 ஆயிரம் யூரோ வீதமும் பணம் சேகரிக்கப்படுகின்றது என்று மற்றொரு செய்தியையும் அந்த நாளிதழ் வெளியிட்டுள்ளது.

விடுதலைப் புலிகளை ஐ.நா. தீர்மானம் ஒன்றின் மூலம் கண்டிக்கும் முயற்சி பற்றி குறிப்பிடுகையில் இது அனேகமாக சாத்தியமானதல்ல என்று அந்தப் பத்திரிகை குறிப்பிட்டுள்ளது.

விடுதலைப் புலிகளைத் தடை செய்யுமாறு கேட்டபோது அதற்கு பிரான்ஸ் ஒப்புக்கொள்ள விரும்பினாலும் சமாதான முயற்சிகள் பாதிப்படையும் என்பதால் ஏனைய சில ஐரோப்பிய நாடுகள் அதனை ஏற்கவில்லை என்றும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ரி.ரி.என்.தொலைக்காட்சிக்கு எதிராக கடந்த ஜூலை 7 ஆம் திகதி பாரிஸிலுள்ள இலங்கைத் தூதர் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்தார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-3)

## மன்னிப்புச் சபை..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செயலாளர் நாயகம் ஐரெனி நேற்று தமிழ்ச்செல்வனைச் சந்தித்துஅவரோடு விரிவாகப் பேச்சு நடத்தினார்.

தற்போதைய அரசியல் நிலைமை தொடர்பாக அவருக்கு தமிழ்ச்செல்வன் விளக்கம் அளித்தார்.

காவல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசனையும்,வடக்கு - கிழக்கு மனித உரிமைகள் செயலக அதிகாரிகளையும் ஐரெனி அம்மையார் தனித்தனியாச் சந்தித்துப் பேச்சு நடத்தினார். (ஐ-3)

## காத்தான்குடியில் ஹர்த்தால்

காத்தான்குடி,டிசெ.4

காத்தான்குடி பிரதேச செயலர் ஏ.எல்.எம். பளீல் நேற்றுமுன்தினம் நண்பகல் இனந்தெரியாதோரால் சுடப்பட்டதைக் கண்டித்து நேற்று அங்கு பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

அரச அலுவலகங்கள்,தனியார் நிறுவனங்கள், வர்த்தக நிலையங்கள் அனைத்தும் முற்றாக மூடப்பட்டன. மக்கள் நடமாட்டம் இல்லாமையால் வீதிகள் அனைத்தும் வெறிச்சோடிக்காணப்பட்டன. ஹர்த்தாலால் காத்தான்குடியில் வழமை நிலை பாதிக்கப்பட்டிருந்தது.

இதேவேளை -

சூட்டுச் சம்பவத்தில் படுகாயமடைந்து மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்த பிரதேச செயலர் ஏ.எல்.எம். பளீல் மேலதிக சிகிச்சைக்காக விசேட ஹெலி மூலம் கொழும்பு தேசிய வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டார். (ஐ-8)

## விபத்தில் குடும்பஸ்தர் உயிரிழப்பு!

யாழ்ப்பாணம், டிசெ.4

கிளிநொச்சியில் இடம்பெற்ற விபத்துச் சம்பவத்தில் படுகாயமடைந்து கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுப் பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட குடும்பஸ்தர் ஒருவர் நேற்றிரவு அங்கு உயிரிழந்தார்.

ஸ்கந்தபுரம், கிளிநொச்சியைச் சேர்ந்த சின்னத்தம்பி இராசநாயகம் (வயது-55) என்பவரே உயிரிழந்தவராவார். வீதியால் நடந்து சென்றுகொண்டிருந்த இவரை பின்னால் வந்த மோட்டார் சைக்கிள் ஒன்று மேதியதாகத் தெரிவிக்கப்பட்டது.

நேற்று பிற்பகல் 1.15 மணியளவில் சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட இவர் நேற்றிரவு 8.20 மணியளவில் உயிரிழந்தார். (8-12-410)

## போர்நிறுத்தத்தை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சர்வதேச முயற்சிகளுடன் நிறைவு செய்ய வேண்டும் என்பதையும் இந்தியா வலியுறுத்துகின்றது - என்று சியாம் சரண் அப்போது தெரிவித்தார்.

இலங்கை வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர புதுடில்லிக்கு விஜயம் செய்து திரும்பிய மறுநாள் எரிக்சொல் ஹெய்ம் புதுடில்லிக்கு வருமை தந்திருப்பது குறிப்டத் தக்கது என்று செய்தி ஏஜென்ஸிகள் தெரிவித்தன.

விடுதலைப் புலிகளுக்கும் ஸ்ரீலங்கா அரசுக்கும் இடையிலான சமாதான முயற்சிகளில் இதுவரை தலையிடாது இருந்து வந்த இந்தியா அந்த நிலைப்பாட்டில் இருந்து மாறுவதாக இந்திய வெளியுறவுச் செயலரின் கருத்து உள்ளது என்று இணையச் செய்தி ஒன்று தெரிவித்தது. (ஐ-3)


வரலாறு A/L day Class மற்றும் 2006 பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான மீட்டலும் தோவு வினாக்களும் கற்பிக்கப்படும் இடங்கள்
பொருளியல் கல்லூரி, யாழ்ப்பாணம்
ஞானோதயா அக்கடமி, சங்கத்தானை
விக்னா கல்வி நிறுவனம், யாழ்ப்பாணம்.
ஆரம்பம்: 10.12.2005 (சனிக்கிழமை)
அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டவை
ஆசிரியர்: மா.பத்மன்
(43572) B.A (Hons) His. Spl. Dip.in.com


சிறப்புத் தள்ளுபடி
கையிருப்பு உள்ளவரை மட்டுமே
வீடுகளில், அலுவலகங்களில் பாவிக்கக்கூடியமுறையில் டயலொக் G.S.M., மொபிரெல் G.S.M. மேசைத் தொலைபேசிகள் பூட்டித் தரப்படும்.
டயலொக் வெளிச்செல்லும் அழைப்பு ரூ.4.60
9500/=
தொடர்புகளுக்கு:
நியு பவர் செலூலர் ட்ரேடிங் கம்பனி
கையடக்கத் தொலைபேசி விற்பனைக்குண்டு. டயலொக் 500/=, மொபிரெல் 300/=பக்கேஜ் இணைப்புகளுக்கு உள்வரும் அழைப்பு முற்றிலும் இலவசம்.
இல.205/01, கஸ்தூரியார் வீதி, (ராஜா தியேட்டர் அருகில்) யாழ்ப்பாணம். தொ.பே.0712 399220, 0714 182500, 0773518330

திருமுருகனின் பரிசு மழை
விபரம் 6ஆம் பக்கத்தில்

AMERICA GREEN CARD
அமெரிக்க விசா
AMERICA VISA விற்கு விண்ணப்பங்கள்
இன்று மாலை 6.00 மணிவரையும் எம்மால் ஏற்றுக்கொள்ளப்படும்
விசேட சலுகை :விண்ணப்பிக்கும் அனைவர்க்கும் SAAMSTECH இன் 1000/- பெறுமதியான 60 அலகுகள் கொண்ட ஆங்கில பாடநெறி இலவசம்.
SAAMSTECH
841, Hospital Road, Jaffna. 021 - 4591571
233/4, Kasthuriar Rd, Jaffna 021 - 2229505

EXPOAIR
your friend in the skies...
எக்ஸ்போ எயார்
வானத்தில் உங்கள் நண்பன்...


தினசரி யாழ் - கொழும்பு விமான சேவை
ஒதுக்கீடுகளுக்கும் விமான பயணச்சீட்டுக்களுக்கும்
கொள்ளுப்பிட்டியில் - 011 2372 952 / 3, வெள்ளவத்தையில் - 011 2360 290 / 1
யாழ்ப்பாணத்தில் - 021 222 3891 / 6297, 0772 348888, 0772 349999
E-Mail : reservations@expoavi.com, jaffna@expoavi.com


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 04.12.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org